
சுவடி : 43
ஏடு : 12
**சூன் 2019**
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
**94441 05892**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# நாம் இரட்டை இழப்புக்கு ஆளானோம்! இரண்டு பங்கு உழைப்பை மனமார ஈந்து, கட்சியையும் ஏட்டையும் வளர்ப்போம்!



**நாம்,** தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை நல்லவண்ணம் புரிந்தவர்கள்.

தந்தை பெரியார், தமிழர்கள் மானம் உள்ளவர்களாக வாழவேண்டும்; சூத்திரர்களும் ஆதி சூத்திரர்களும் பிறவி இழிவிலிருந்து விடுதலை பெறவேண்டும்; அதுவரையில் அந்தந்த வகுப்பு எண்ணிக்கைப்படி விகிதாசாரப் பங்கை ஒவ்வொரு வகுப்பும் பெற வேண்டும்; இறுதியாகத் தனித் தமிழ்நாடு அடைந்து, அங்கு சமதர்ம ஆட்சியை நிறுவ வேண்டும் என்பவையாகும்.

மேலே கண்ட கொள்கைகளுள் தனித் தமிழ்நாடு அடைவது நம் காலத்தில் முடியாது என்பதால், இந்தியக் கூட்டாட்சிக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டோம். இந்தியாவில் "சமதர்மம் மலர்ந்த மொழிவழி மாநிலங்கள் ஒருங்கிணைந்த இந்தியக் கூட்டாட்சி அமைக்கப்பட வேண்டும்" என்கிற கோட்பாடு கொண்டவர்கள் நாம்.

நம் கட்சியும், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும்தான் இந்தியாவில் அவரவருக்கு விகிதாசார ஒதுக்கீடு என்பதைக் கொள்கையாகவும் வேலைத் திட்டமாகவும் கொண்டவையாகும்.

அதேபோல் மார்க்சியம் பெரியாரியம் என ஏன் அழைக்க வேண்டும்? அதன் உட்பொருள் என்ன? என்பதைத் தந்தை பெரியார் அவர்கள், 1931 இலேயே "குடிஅரசு" ஏட்டில் வரைந்துள்ளார். அதை அடிப்படையாகக் கொண்டு, நாம் மார்க்சியப் பெரியாரியம் பற்றித் தெளிவான விளக்கங்களை உருவாக்கி இருக்கிறோம். நம் தோழர்களுக்கு அதன் அடிப்படைகளைச் சொல்லிக் கொடுத்து இருக்கிறோம், அந்த அடிப்படைகளை எளிமைப்படுத்தி, மீண்டும் நம் கட்சித் தோழர்களுக்குக் கற்பிப்போம்.

நம் கட்சி 8.8.1976-இல் தொடங்கப்பட்டது. நம் "சிந்தனையாளன்" ஏடு 17.8.1974-இல் தொடங்கப்பட்டது. சிந்தனையாளன் ஏடு 44-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது; நம் கட்சி 43-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

என் துணைவியார் ஆ. சுசீலா அவர்களின் மறைவால் என் குடும்பம் திகைத்து நிற்கிறது. நம் தோழர்கள் 1.5.2019-இல் தாம்பரத்துக்கு வருகை தந்து, எங்கள் குடும்பத்தின் துயரத்தை எங்களுடன் பங்கிட்டுக் கொண்டனர்.

அதேபோல் கவிஞர் தமிழேந்தியின் மறைவு நம் இயக்கத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். நாம் எல்லோரும் 5.5.2019-இல் அரக்கோணம் சென்று அவருடைய குடும்பத்தாருக்கும், சோளிங்கபுரம் க. முகிலன் குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரிவித்தோம்.

மானிடன் பிறந்த போதே இறப்பது உறுதி என்பது உலகம் அறிந்த உண்மை. என் துணைவியார் மறைவு எனக்குப் பாதி மனவலிமையைக் குறைத்துவிட்டது.

ஏன் என்றால், அவர் தாங்க முடியாத துன்பங்களைத் தாங்கிக் கொண்டு என்னை நாட்டுக்கு உழைக்க எனக்குப் பின்புலமாக இருந்தார். இனி அந்தத் தெம்பு எனக்கு வராது. கட்சித் தோழர்கள் அதை உணர்ந்து ஈடுகட்ட முன்வர வேண்டும் என்று அன்போடு வேண்டு கிறேன்.

திருச்சியில் இருந்து சிந்தனையாளன் வெளிவந்த வரையில், நானும் என் மக்கள் அறுவரும் கூட்டாக உழைத்து அந்த ஏட்டை நிலைப்படுத்தினோம். இப்போது அது கட்சி ஏடாக உள்ளது. கட்சி ஏட்டை இப்போதுள்ள எண்ணிக்கையிலிருந்து இரண்டு அல்லது மூன்று மடங்கு எண்ணிக்கை அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று எல்லா மாவட்டச் செயலாளர்களையும் அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

**ஏடு பற்றியும் கட்சி உறுப்பினர் சேர்க்கை பற்றியும் மே இதழில் நான் விடுத்துள்ள வேண்டுகோளை எல் லோரும் மனம் கொண்டு செயல்படுத்த வேண்டுகிறேன்.**

இனி மாவட்ட வாரியாக இணக்கமான தோழர்களை அழைத்து மூன்று நாள் அடிப்படைக் கொள்கைப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எல்லா மாவட்டச் செயலாளர்களையும் கேட்டுக் கொள்கி றேன். மாவட்டச் செயலாளர்கள் ஒரே சமயத்தில், சூன் திங்களில் அம்பத்தூருக்கு வந்து தங்கி இரண்டு அல்லது மூன்று நாள் பயிற்சி எடுத்துக்கொள்ள முன் வருமாறு வேண்டுகிறேன்.

நான் இப்போதுள்ள உடல்நிலையில் 95ஆம் ஆண்டை நிறைவு செய்வேனா என்பது கேள்விக்குறியாக உள்ளது; நிறைவு செய்வேன் என்று நம்புகிறேன்.

மன அமைதி குன்றிய நிலையில் எனக்குத் தோன்றிய எண்ணங்களை இங்குப் பதிவு செய்துள்ளேன். இதை என் இன்றியமையாத வேண்டுகோளாகக் கருதி மா.பெ.பொ.க. தோழர்கள் எல்லோரும் செயல்பட வேண்டுகிறேன்.

**2019 மே மாத இதழை மிகச் செப்பமாக அமைத்து வெளியிட்ட நம் ஆசிரியர் குழுவினருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**ஒவ்வொரு மாதமும் இனி, ஆசிரியர் குழுவினர் இதே போல், இணைந்து செயல்பட்டு, “சிந்தனையாளன்” இதழை வலிமையுள்ளதாக ஆக்குங்கள் என வேண்டு கிறேன்.**

**01.06.2019** **- வே. ஆனைமுத்து**

## என் 95ஆம் பிறந்த நாள் மகிழ்ச்சியான நாள் அன்று; என் வாழ்வில் துயரமான நாள்!

என் 95ஆம் பிறந்த நாள் 2019 சூன் 21 அன்று வருகிறது.

என் துணைவியார் சசீலா அவர்கள், என் 95ஆம் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று ஆசைப்பட்டார்; அதை என் மக்களிடம் சொன்னார். இன்று அவர் இல்லை; இனி எப்போதும் அவர் இருக்கமாட்டார்.

**அவர் இல்லாத நேரத்தில், இனிவரும் என் பிறந்த நாள் எதையும் நான் கொண்டாட விரும்பவில்லை.**

ஆதலின், வரும் 21.6.2019 அன்று என் மக்களோ, உறவினர்களோ, மா.பெ.பொ.க. தோழர்களோ, “**சிந்தனையாளன்**” அன்பர்களோ நேரில் வந்தோ, மடல் வழியாகவோ, தொலைப்பேசி வழியாகவோ எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறவேண்டாம் எனத் தாழ்மையுடன் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
**வே. ஆனைமுத்து**
**1.6.2019**

# நரேந்திர மோடி அரசும், தமிழ்மக்கள் கடமையும்

வே. ஆனைமுத்து

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 1976-இல் தொடங்கப்பட்டது. அடுத்த 1977-இல், நாடாளு மன்றப் பொதுத் தேர்தலும், சட்டமன்றத்துக்கான பொதுத் தேர்தல்களும் நடைபெற்றன. அந்தத் தேர்தலை மா.பெ.பொ.க. அடியோடு புறக்கணித்தது. அதேபோல் அது முதல் இன்று வரை எல்லாத் தேர்தல்களையும் புறக்கணித்து வருகிறது. ஏன்?

தந்தை பெரியார் அவர்கள் 1945 செப்டம்பர் முதல் அவர் மறைந்த 1973 வரையில் "தனித் திராவிட நாடு", "தனித் தமிழ்நாடு" கோரினார்.

அப்படித் தனித் தமிழ்நாடு பெற்றால்தான், நாம் :

1. பிறவி நால்வருணத்தை ஒழிக்கச் சட்டம் செய்ய முடியும்;
2. "பழக்கவழக்கச் சட்டம் இன்றும் செல்லும்" என்பதை அடியோடு நிறுத்த முடியும்;
3. சமதர்மச் சமுதாயம் அமைக்க முடியும்.

1946 முதல் செய்யப்பட்ட அரசியல் சட்டம் மேலே கண்ட குறிக்கோள்களுக்கு எதிரானது.

இந்த நிலையில் 1925-இல் இராஷ்டிரிய சுயம் சேவக் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் குறிக்கோள் இந்தியாவில் இந்து மதத்தைத் தலைமையாகக் கொண்ட ஓர் ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதாகும். அதனால் இந்தியா முழு வதையும் செயல்படு களமாக ஆர்.எஸ்.எஸ். ஏற்றுக்கொண்டது.

1925-இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப் பட்டது. அதுவும் இந்தியா முழுவதையும் செயல்படு களமாகக் கொண்டது.

தந்தை பெரியார் அவர்கள் பார்ப்பனரல்லாதார் சுய மரியாதை இயக்கத்தை 26.12.1926-இல் தொடங்கினார். அதற்கு முன்னர் திராவிட இன உணர்வுள்ள பார்ப்பனரல் லாத தலைவர்கள், பார்ப்பனரல்லாதாருக்கான அரசியல் பதவி, அரசியல் உத்தியோகம் இவற்றில் பங்குபெறுவதற் கென்று ஒரு அரசியல் கட்சியை அமைத்தனர்.

**தந்தை பெரியார் அவர்களோ, பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர்களோ இந்தியாவைச் செயல்படு களமாக எப்போதும் கொள்ளவில்லை.**

**வெள்ளையன் துண்டு துண்டுகளாகக் கிடந்த இந்தியா வை ஒரு ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இந்தியா என்று ஒரு அரசியல் கட்டமைப்பு இருக்கிற வரையில் - இந்தியாவைச் செயல்படு களமாகக் கொண்டால்தான் தந்தை பெரியார் கோரிய எல்லாக் குறிக்கோள்களையும் அடைய முடியும். இதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.**

இந்து மதத்துக்கு எதிராக இசுலாமியர்கள் இருப்பதாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதனால் இந்தியாவை இந்து ராஜ்யமாக - இராம இராஜ்யமாக நிறுவ வேண்டும் என, 1948 பிப்ரவரியில் ஆர்.எஸ்.எஸ். முடிவு செய்தது. அதோடு கி.பி.2000-இல் ஆர்.எஸ்.எஸ். இராம ராஜ்யம் அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறை வேற்றியது.

பி.வி. நரசிம்மராவ், இந்தியாவின் பிரதமராக இராஜிவ் காந்திக்குப் பிறகு ஆனார். அவர் காலத்தில் அவருடைய மறைமுக ஆதரவுடன், சங்கப் பரிவாரங்களால் அத்வானி மற்றும் ஜோஷி தலைமையில், அயோத்தியில் பாபர் மசூதி 6.12.1992-இல் இடிக்கப்பட்டது. அதுமுதல் இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வரிந்துகட்டிக் கொண்டு இந்திய ஆட்சியைப் பிடிப்பதில் அக்கறை செலுத்தினர்.

1. இராம ராஜ்யம் அடைவதைக் குறிக்கோளாகக் கொண்ட ராஷ்டீரிய சுயம் சேவக் சங்கம் கட்டுக்கோப்பாக இயங்கு கின்ற இராணுவம் போன்ற அமைப்பாகும்.
2. மகளிர் அமைப்பு கட்டுக்கோப்பாக இயங்குகிறது.
3. அகில இந்திய வித்யார்த்தி பரிஷத் (ABVP) எல்லாக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உயிரோட்ட முள்ள மாணவர் அமைப்பாக வேலை செய்கிறது.
4. "பாஞ்ச சன்யம்", "ஆர்கனைசர்" என்கிற வார ஏடுகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

இத்தனை அமைப்புகளும் அனைத்திந்திய அளவில் களப்பணி ஆற்றுகின்றன.

2019-இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய சனதா மட்டும் 303 இடங்களைக் கைப்பற்றி இருப்ப தற்கு இவையே அடிப்படைக் காரணங்களாகும்.

இரண்டாவதாக கடந்த 5 ஆண்டுகளில் நரேந்திர மோடி அரசு பணக்காரர்களுக்கு, தொழில் அதிபர்களுக்கு ஆதரவான திட்டங்களைச் செயல்படுத்தியது. உயர் அதிகார வர்க்கத்தில் இந்துத்துவக்காரர்களை அமர்த்தியது. இதற்கு மாற்றாகத் தேர்தல் களத்தில் நின்ற காங்கிரசுக்கு, இந்திராகாந்தி காலத்துக்குப் பிறகு கட்சிக் கிளைகள் பல மட்டங்களில் செயல்படவில்லை. **"எல்லாம் தில்லியின் முடிவு" என்பதுபோல் சோனியா காந்தி கையிலும், இராகுல் காந்தி கையிலும் அதிகாரங்கள் குவிக்கப்பட்டன.**

தமிழ்நாட்டில் 16.8.1969-இல் காமராசரை வீழ்த்துவ தற்கு, கலைஞர் உதவியுடன் இந்திராகாந்தி மேற்கொண்ட முயற்சி, தமிழ்நாட்டில் அடியோடு காங்கிரசு பலவீனப்படு வதற்குக் காரணமாயிற்று.

இருப்பினும் கலைஞர் மறைவுக்குப் பிறகு, தி.மு.க.வுக்குத் தலைமையேற்ற மு.க.ஸ்டாலின், தொலைநோக்குப் பார்வை யோடு திராவிடக் கட்சியான அ.தி.மு.க.வையும், பாரதிய சனதாவையும் எதிர்த்து - பெரியார் உணர்வாளர்கள், திராவிட உணர்வாளர்கள், அம்பேத்கர் கொள்கையினர், பொதுவுடைமைக் கட்சியினர் ஆகிய எல்லோரையும் ஒருங்கிணைத்து ஒரு கூட்டணி அமைத்து தேர்தல் நடைபெற்ற 39 இடங்களில் 38 இடங்களைக் கைப்பற்றி இருப்பது பாராட்டத்தகுந்தது.

இன்று பொறுப்பேற்கவுள்ள நரேந்திர மோடி அரசு இந்துத்துவாக் கொள்கையை அரியணை ஏற்றுவதில் குறியாக உள்ளது. இதை நாம் எல்லோரும் உணர வேண்டும்.

1. கல்வித் திட்டத்தில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இராமாயணம், பாரதம், பகவத் கீதை முதலானவை கட்டாயப் பாடங்களாக வைக்கப்பட அரசு முயற்சித்தால், நாம் எல்லோரும் ஒன்றுபட்டு நின்று அதை எதிர்க்க வேண்டும்.
2. இந்தி, மத்திய அரசு அலுவலகங்களில் இந்தியா முழு வதிலும் ஆட்சி மொழியாவதை எல்லோரும் சேர்ந்து எதிர்த்து நின்று தடுக்க வேண்டும்.
3. எந்த வடிவத்திலும் சமற்கிருதம் தொடக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கற்பிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டால் அதைத் தடுத்து நிறுத்திட ஆவன செய்ய வேண்டும்.
4. சமூகத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர் களுக்கு இன்னமும் உயர் கல்விகளிலோ அரசுப் பதவிகளிலோ விகிதாசாரப் பங்கீடு கிடைக்கவில்லை. அதற்கு நாம் அனைத்திந்திய அளவில் முயற்சிக்க வேண்டும்.
5. பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் எல்லா நிலைப் பதவிகளிலும் விகிதாசாரப் பங்கு கிடைத்திட நாம் ஆவன செய்ய வேண்டும்.

ஆட்சியில் அப்போதுதான் பெரும்பாலான மக்களுக்கு உரிய பங்கு வந்து சேரும். நிற்க.

I. இந்தி மத்திய அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழி ஆவதற்குத் தகுதி உள்ள மொழி என்று இந்திக்காரர்கள் தொடக்கம் முதலே பொய் சொல்லுகிறார்கள்.

உண்மை என்ன?

**அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பகுதியில் உள்ள பட்டியலில் 2001-இல் எடுத்த மக்கள் தொகைக் கணக்குப் படி, 102 கோடிப் பேரில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வர்கள் 25,79,19,635 பேர் தான். இது இந்தி என்று பொதுத் தலைப்பிட்டு 50 மொழிகளுக்கு மேற்பட்ட தாய்மொழிகளுள், இந்தி 18ஆவதாக உள்ளது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அல்லாமல் மற்றும் 50 மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்டவர்களைச் சேர்த்து 42,20,48,462 பேர் என்று இந்தி என்கின்ற பொதுத் தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளது.**

**அதேபோல் 2011 மக்கள் தொகைக் கணக்கின்படி, 18ஆவது வரிசையில் உள்ள இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்கிற கணக்கு 32,33,30,097 பேர் ஆகும். ஆனால் இந்தி என்று பொதுத் தலைப்பிட்டு 50 மொழிகளுக்கு மேற்பட்ட தாய்மொழிகளைக் கொண்டவர்கள் 52,83,47,193 பேர் என்பதாகும். இது 121 கோடிப் பேரில் உள்ள 43.65 விழுக்காடு என்று கண்டுள்ளது. மீண்டும் 50 தாய்மொழிகளுக்குச் சேர்த்து அதன்படி 43 விழுக்காடு பேர் இந்தி பேசுகிறார்கள் என்று சொல்வது தவறல்லவா?**

திராவிட மொழிகளுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு மற்றும் இவை போன்ற மொழிகளைப் பேசுவோர் இன்றைய இந்தியாவில் 25 கோடிப் பேருக்கு மேல் உள்ளனர். இவர்கள் இந்தி ஆட்சிமொழி என்பதை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை.

அந்தந்த மாநிலத்தில் உள்ள மய்ய அரசு அலுவலகங் களில் அந்தந்த மாநில மொழியே அலுவல் மொழியாகத் தொடர வேண்டும். அஞ்சல் துறை, வருமான வரித்துறை, தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் முதலான மத்திய அரசு அலுவலகங் களில் அலுவல் (Official Language) மொழியாக இருக்க வேண்டும். மேலே கண்ட இதற்குத், தமிழ்நாட்டில் வெற்றி பெற்றுள்ள 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாடுபட வேண்டும்.

II. 2001 மக்கள் தொகைக் கணக்குப்படி சமற்கிருதத் தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 14099 பேர்தான். சமற்கிருதம் என்கின்ற பொதுத் தலைப்பில் காணப்படுவோர் 14135 பேர்தான். சமற்கிருதம் பார்ப்பனர் அர்ச்சகராக இருப்பதற்கும், புரோகிதராகச் செயல்படவும் பயன்படக் கூடிய மந்திர மொழி. இது மொத்தப் பார்ப்பனரல்லாதாருக்கு எதிரானது.

இப்போது பாரதிய சனதா கூட்டணி 353 இடங்களைப் பெற்றுள்ளது. இது அறுதிப் பெரும்பான்மையை விட வலிவான நிலைமையைக் கொண்டுள்ள ஆட்சியாகும். இதை நாம் எல்லோரும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எதிரணியில் போட்டியிட்ட காங்கிரசுக் கட்சி இப்போது 52 இடங்களை மட்டுமே பெற்றுள்ளது. இது இரண்டாவது பெரும்பான்மை பெற்ற கட்சியாகும். அங்கீகாரம் பெற்ற எதிர்க்கட்சியாகக்கூட காங்கிரசு ஆக முடியாது.

2014-இல் ஏற்கெனவே 37 இடங்களைப் பெற்று இருந்த அ.தி.மு.க., செயலலிதா மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க. ஆட்சி பிரதமர் மோடிக்குக் கையாளாக விளங்கியது இனியும் விளங்கும்.

**இந்தச் சூழ்நிலையில் 17ஆவது நாடாளுமன்றத்தில் 38 இடங்களைப் பெற்று 3ஆவது இடத்தைப் பெற்றுள்ள தி.மு.க. கூட்டணி, முடிந்த வரையில் அனைத்திந்தியப் பார்வையோடு நாடாளுமன்றத்தில் செயல்பட வேண்டும்.**

❖

# நரேந்திர மோடியின் மாபெரும் வெற்றி பற்றிய "தி கார்டியன்" இதழின் பார்வை : இந்தியாவின் உயிருக்குக் கெடுதலானது

*இங்கிலாந்தில் வெளிவரும் தி கார்டியன் என்ற ஆங்கில நாளிதழில் வெளிவந்த நரேந்திர மோடியின் பாரதிய சனதாக் கட்சியின் 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி பற்றிய தலையங்கத்தின் தமிழாக்கம்.*

தமிழாக்கம் : வழக்குரைஞர் **கோ.ரா.சுந்தரகாந்தம்**

**தலையங்கம் :** பொய்ச் செய்திகளை வணிகம் செய்து கொண்டு வணிகம் ஆதரவான செயல்திட்டங்களைப் பின்பற்றுகின்ற, சிறுபான்மையினரை இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்துகின்ற மேலும் ஒரு மக்களை ஈர்க்கும் தலைவர் இவ்வுலகிற்குத் தேவையில்லை.

**வியாழன், 23, மே 2019** : அண்மையில் வரலாற்றின் மிகப்பெரிய தேர்தலை நரேந்திர மோடி என்ற ஒரு தனிநபர் வென்றார். 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு, அடுத்தடுத்து இரண்டு முறை ஒற்றைக் கட்சிப் பெரும்பான்மையுடன் வென்ற முதலாவது பிரதமர் நரேந்திர மோடி. 2014ஆம் ஆண்டில் காங்கிரசுக் கட்சியின் புகழ் ஊழல் புகைமூட்டத்தில் மறைந்தபோது நாடாளுமன்றத்தின் கீழவையில் பாரதிய சனதா கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. அய்ந்தாண்டுகளுக்குப் பிறகு, சிதறுண்ட பொருளாதார நிலைமையும் மீறி திரு.மோடி நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை அதிகப்படுத்தியுள்ளார். இது இந்தியாவிற்கும் உலகத்திற்கும் கெட்ட செய்தியாகும்.

பா.ச.க என்பது இந்தியாவை மிக மோசமாக மாற்றி வருகின்ற இந்துத்துவ தேசியவாத இயக் கத்தின் அரசியல் பிரிவாகும். மேல் சாதி இந்துக்களின் சமுதாய ஆதிக்கம் என்ற படுமோசமான கோட்பாடுடைய இக்கட்சி, பெரு முதலாளிகளுக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சி, பண்பாட்டுப் பழமைவாதம், மிக்கத்தீவிரமான பெண்ணின வெறுப்பு, அரசு அதிகார அமைப்புகளின் மீது இரும்புப்பிடி என்று இருப்பதில் வியப்பில்லை. மோடியின் இந்த மாபெரும் வெற்றி, ஏறக்குறைய பத்தொன்பதரை இலட்ச இந்திய இசுலாமியர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகப் பார்க்கும் ஒரு இருண்ட அரசியலிடம் இந்தியாவின் உயிர் வீழப்போவதைப் பார்க்கப்போகிறது.

தேர்தல் பரப்புரையின் போது திரு.மோடியின் வலது கையாகச் செயல்பட்டவர் இசுலாமியர்களை கரையான்கள் என்று கூறிக் கேவலப்படுத்தினார். அதல்லாமல் வெளிப்படையான பாதுகாப்புடன் இசுலாமியர்களைத் தாக்கிக் கொன்றார்கள். இசுலாமியர்கள் போதுமான மக்கள்தொகையுடன் இருப்பினும் ஒரு அரசியல் வகுப்பினரால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களாகவும், பெரும்பான்மை இந்து மக்களின் ஆதரவை இழக்கும் அச்சத்துடனும் இருக்கும் அரசியல் அனாதைகளாவர். இசுலாமியர்கள் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் 24 உறுப்பினர்களைக் கொண்டிருந்தனர். இது ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 4% ஆகும். இச்சமூகத்தினர் 1952ஆம் ஆண்டிற்குப் பிறகு கொண்டிருக்கும் மிகக் குறைந்த எண்ணிக்கை இதுவாகும். இது மேலும் சுருங்கும் வாய்ப்புள்ளது. பிரிவினைவாதியான திரு.மோடி கவர்ந்திழுக்கும் பரப்புரையாளர் என்பதில் சந்தேகமில்லை. இந்தியச்சமுதாயத்தின் பிரிவுகளான மதம், சாதி, நிலப்பகுதி, மொழி ஆகியவற்றைக் கடந்து செல்வதற்கு மாறாக அவற்றைக் காட்டிப் பிளவுப்படுத்துதல் என்ற பாணியைக் கையாள்பவர். அவர் அனுபவமிக்கவராக நாடறிந்தவராக இருந்துகொண்டு மக்களின் பெயரில் பேசுகிறேன் என்று பெரும்பான்மையானவர்களுக்கு எதிராக மக்களை ஈர்க்குமாறு பேசுவர். திரு.மோடி பயங்கர விளைவுகளைத் தரக்கூடிய பொய்க்கூற்றுகளையும் ஒரு சார்புத் தகவல்களையும் பயன்படுத்தினார்.

ஒரு வேளை நாம் வியப்படையக் கூடாதோ என்னவோ. விளாதமிர் புதினின் இரசியா உள்ளிட்ட மற்ற நாடுகளைக் காட்டிலும், இந்தியாவில் வலிமையான தலைவரைக் கொண்ட சர்வாதிகார ஆட்சியை ஆதரிப்பவர்கள் (55 ) அதிகம் என்றதை 2019 ஆம் ஆண்டின் தேர்தல் வெளிப்படுத்தியது. இந்த உலகத்திற்கு மேலும் ஒரு தேசிய சனரஞ்சகத் தலைவர் தேவையில்லை. திரு. மோடி சுதந்திர இந்தியாவின் பன்முகங்களில் விலை மதிக்க முடியாத ஒன்றாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் பலகட்சி மக்களாட்சியை அச்சுறுத்துகிறார். பெரும்பான்மை அரசு என்ற மோடியின் அரசியல் பற்றிய புதிய நூலின் ஆசிரியர்கள் கூறுவது போல, பா.ச.க தன்னுடன் வெறெந்தக் கட்சியும் போட்டியிடக்கூடாது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. தனது போட்டியாளர்களை எதிரானவர்களாகக் காட்டாமல் எதிரிகள் என்று காட்டுகிறது. திரு.மோடி இந்த ஆண்டின் தொடக்கத்தில் பொறுப்பற்று, காசுமீரத்தைக் காட்டித் தனது அண்டை நாடான பாக்கிச்தானுடனான பதற்றத்தை அதிகரிக்க விழைந்தார். அவர் இரண்டு நாடுகளையும் போரின் விளிம்பிற்கு அழைத்துச் சென்றார். எதிர்க்கட்சிகள் இசுலாமிய அடிப்படைவாதிகளுடன் கூட்டு வைத்திருப்பதாக பொறுப்பற்று குற்றம் சாட்டினார். அதனால் வந்த மோதலை தனக்காகப் பயன்படுத்திக் கொண்டார். காங்கிரசுக் கட்சியும் அதனை வழிநடத்தும் நேரு-காந்தி குடும்பமும் திரு.மோடியை வீழ்த்துவது எப்படி என்பதைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்யவேண்டும். திரு.மோடி அரசியல் நன்கொடைகளை வெளிப்படுத்தத் தேவையில்லை என்பதைச் சட்டப்பூர்வமானதாக ஆக்கியபிறகு, பெயர் தெரிவிக்கப்படாத பெரும் முதலாளிகளிடமிருந்து பா.ச.காவிற்கு 1030 கோடி ரூபாய் (1200 இலட்சம் பவுண்டு) நன்கொடையாகத் தரப்பட்டுள்ளது. இக்கட்சி இந்தியாவினைக் கோரமாக்கும் அதிகரிக்கும் உயர்வுதாழ்வுகளைக் குறைப்பதாக உதட்டளவில் சொல்கிறது. ஆனால் வாக்காளர்களை, சாதி மத மோதல்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளின் வாக்கு வங்கிகளாகப் பிரிப்பது வளர்ந்துள்ளது. இது வணிகம் ஆதரவான, இசுலாமியர்கள் எதிர்ப்பான தேசியவாதத்தைக் கொண்டுள்ள பா.ச.கவுக்கு ஏற்றதாக உள்ளது. சமத்துவதளத்தில் தனித்தன்மைமிக்க பரப்புரையை நடத்தும் வலிமை எதிர்க்கட்சிகளுக்கு வேண்டும்.

உண்மையைச் சொன்னால் காங்கிரசு முயற்சித்தது. ஆனால் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயல்படவில்லை. ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கில் கொள்ளா ஒரே மாதிரியான தன்மையிலான முயற்சி அது. அடையாளத்தினைக் குறிக்கும் கூறுகளின் மீதான சண்டைகள் என்பதுக்கு மாற்றானதாக எல்லா இந்தியர்களுக்கும் எப்படி நன்மை செய்வது என்கிற அரசியல் போட்டி அமைய வேண்டும். இதற்கு இப்போது உள்ளதைக் காட்டிலும் மிக நுண்ணறிவுமிக்க நாட்டின் ஏழை மக்களிடம் மேலும் தொடர்புடைய ஒரு எதிர்க்கட்சி இந்தியாவிற்குத் தேவைப்படும்.

# நாட்டின் வேளாண்மையின் பன்முக வளர்ச்சிதான் வேண்டும்

**(இதை நோக்கிய செயல்திட்டங்கள்தான் நாட்டின் வெகுமக்களின் உண்மையான வளர்ச்சியையும் மேம்பாட்டையும் ஓரளவுக்காவது உயர்த்த உறுதிசெய்யும்)**

**- இரா. பச்சமலை**

ஒரு நாட்டின் சிறப்புக்கு அளவு அந்த நாட்டின் வெகுமக்களின் மனித மேம்பாடுதான் அடிப்படையாக அமைய வேண்டும். அந்த அளவுகோலின்படி இந்திய ஒன்றியத்தின் நிலை மிகவும் அவலமானது. ஆனால் இந்தியப் பொருளாதார வளர்ச்சி பற்றி ஆட்சியாளர்கள், பொதுப் பொருளாதார வல்லுநர்கள், ஏன் வேளாண் அறிஞர்கள் கூட விதந்து பாராட்டிக் கொள்வது நகை முரணாகும். எனவே நாட்டின் வளர்ச்சி வளம் பெற்றோராக உள்ள ஒரு சிறுபான்மையருக்கே என்ற நிலை மாறிட வேண்டும். வளர்ச்சி பரந்துபட்ட வெகுமக்களைச் சென்றடைய வேண்டும். அதுமட்டுமன்றி அவர்களின் வளர்ச்சியின் அளவு பெருக வேண்டும். அந்த வகையில் பெருந்திரளான 65 விழுக்காடு மக்கள் உழைப்பையும், உடல் உழைப்பையும் ஈந்து புரக்கும் வேளாண் தொழிலில்தான் உள்ளனர். எனவே வேளாண் துறையின் விரிந்த, பரந்த வளர்ச்சி தான் வெகுமக்களுக்கு மேம்பட்ட வாழ்க்கையை உறுதி செய்யும் என்பது திண்ணம். ஒன்றியப் பொருளாதாரத்தில் வேளாண் தொழிலின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள தடைகளை உடைத்தெறிந்து எந்த அளவுக்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும், ஒப்பீட்டளவில் நம் நாட்டை ஒத்த வேறு நாடுகளின் வேளாண் தொழில் வளர்ச்சி எத்தன்மையது, பெருவளர்ச்சி பெற்ற நாடுகள் போன்று வளர வகுத்தெடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றியும் விரிவாக, தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்வோம்.

இங்கு பொருளாதார ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும் புள்ளி விவரங்கள் (பெரும்பாலானவை) ஒன்றிய அரசால் நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு ஆண்டு நிதி - வரவு செலவுக் கூட்டத் தொடருக்குமுன் வைக்கப்படும் "பொருளாதார (Economic Survey) பொருளாதார ஆய்வறிக்கைகளிலிருந்துதான்" கையாளப்பட்டுள்ளன. பிற நாடுகளின் பொருளாதாரம் பற்றிய விவரங்கள் யாவும் அ.நா., ப.நி.நி., உலக வங்கி ஆகியவைகளின் அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்டவை.

பொதுவாகப் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டிலுள்ள உழைக்கும் ஆற்றல் பெற்றோர் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளித்து பொருளுற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். குறிப்பாக மதிப்புடன் கூடிய வேலை வாய்ப்புகளாகவும், மதிப்புடை ஊதியம் பெறும் தொழிலாளர்களாகவும் இருக்க வேண்டும். இவ்விரண்டையும் உடைய வேலை வாய்ப்பு அமைப்புசார் வேலைகளில் மட்டும்தான் உள்ளது. ஏனைய வேலை வாய்ப்பெல்லாம் அமைப்புசாரா வேலைகளாகத்தான் உள்ளன. அமைப்புசார் வேலை வாய்ப்புப் பணிகளில் வரையறுக்கப்பட்ட விதிகள் கடைப்பிடிக்கப்படும். அதாவது பாதுகாக்கப்பட்ட பணி, முறைப்படுத்தப்பட்ட வேலை நேர அளவு, அதற்கேற்ற சம்பள விகிதம். விடுப்பு வாய்ப்புகள், ஓய்வூதியப் பலன்கள், பணியாளர்கள் சங்கம் அமைத்து அவர்கள் குறைகளை முறையிட்டு தீர்வுக்குள்ளாக்கும் வாய்ப்புகள் போன்றவை அடிப்படை உரிமைகளாக அமைப்புசார் பணிகளில் உள்ளன. ஆனால் இவ்வாறு எந்தவிதமான வரையறையுமற்ற உறுதிசெய்யப்பட்ட பணியிடங்கள், முறைபடுத்தப்பட்ட சம்பளம் இல்லாமை, அன்றாடக் கூலி ஊதியம், பணி நலன் சார்ந்த வேலை நேரம், கால அளவு இன்மை, விடுப்பு வசதி அற்ற தன்மையிலானதாக அமைப்புசாராப் பணி வாய்ப்பு வேலைகள் உள்ளன.

இந்திய ஒன்றியத்தில் வேலை வாய்ப்புப் பெற்றோருள் ஏழு விழுக்காட்டினர் அளவுக்குத்தான் அமைப்புசார் பணிகளில் உள்ளனர். எஞ்சிய 93 விழுக்காட்டினர் அமைப்புசாரா வேலைகளில் உள்ளோர். பின்னையரின் பிழைப்பு நிலை மிகவும் இரங்கத்தக்கதாக உள்ளது என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை. அமைப்புசார் பணியிலுள்ளோரில் 80 விழுக்காட்டிற்கும் மேலானோர் வரையறுக்கப்பட்ட சம்பள விகிதம் பெறுவோராக இருப்பினும் அவை மிகவும் குறைவான அளவிலேதான் வைக்கப்பட்டு கிட்டத்தட்ட அமைப்புசாரா பணியிலுள்ளோர் நிலையில்தான் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அமைப்புசார் பணியாளர்களுள் வெறும் 10 விழுக்காட்டு அளவினர்தான் உயர் ஊதியம் பெறுவோராக உள்ளனர். இவ்விரு ஊதிய விகிதங்களுக்கிடையே உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமுள்ள அளவில் உள்ளது.

**பொதுவாக அமைப்புசாரா வேலைகளில் உள்ளோருள் பெரும் பகுதியினர் வேளாண் துறை சார்ந்த வேலைகளில்தான் உள்ளனர். இன்னும் குறிப்பாக வேளாண் துறைப் பணிகளில் உள்ளோருள் 97 விழுக்காட்டிற்கும் மேலானோர் அமைப்புசாரா வேலைகளில்தான் உள்ளனர். அதாவது வரையறுக்கப்படாத தினக் கூலிகளாகவும் ஈனக் கூலி பெறுவோராகவும் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேலையும் உறுதி செய்யப்படாத நிலையில், வாய்ப்புக் கிட்டினால்தான் வேலை என ஆண்டில் வெறும் 100 நாள்கள்தான் வேலை வாய்ப்புப் பெறுபவர்களாக உள்ளனர்.** ஊதியமோ குறைந்த அளவிலான தினக்கூலி, மிகக் குறைந்த நாள் களே வேலை கிடைக்கும் என்ற நிலையில் இவர்களின் உழைப்புத் திறன் பயன்பாடு, வாய்ப்பு, பெரிதும்

மறுக்கப்பட்டு அவர்களின் திறனுக்கு ஏற்ற பொருள் உற்பத்தி செய்ய இயலாதவர்களாக ஆக்கப்பட்டுவிட்டனர். அதன் விளைவாகப் பொருளாதாரத்தில் வேளாண்மை வாயிலாக உற்பத்தியாகக் கிடைக்கும் விளைபொருள் களின் களமதிப்பு (Cost Price) வெறும் 8 விழுக்காடு அளவிலேயே உள்ளது. ஆனால் வேளாண்சார் முதன் மைத் துறைகளின் கீழ்வரும் மீன்வலம், காடுகள், நிலக்கரி, வாயு போன்றவைகளின் பங்கு மொத்தப் பொருளாதாரத்தில் ஏறத்தாழ 9 விழுக்காடு அளவுக்கு உள்ளது. இந்த வேலையில் இரண்டாம் நிலை தொழில் துறை, மூன்றாம் நிலை சேவைத் துறை ஆகியவற்றின் பொருளாதாரத்தில் பங்கு ஒப்பீட்டளவில் முறையே 29 விழுக்காடு, 54 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. அதாவது இவற்றின் பங்கு வேளாண்துறை சார்ந்த துறைகளின் பங்கைக் காட்டிலும் முறையே கிட்டத்தட்ட 1½ மடங்குக்கு மேலும், மூன்று மடங்குக்கு மேலுமாக உள்ளன. இவற்றின் உற்பத்தியில் மிகக் குறைந்த அளவிலேயான தொழிலாளிகள், பணியாளர்கள், வேலையாள்கள் மட்டுமே ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதை விரிவாகக் கீழே பார்க்கலாம். கீழேயுள்ள அட்டவணை 2016-17 ஆண்டின் பொருளாதார வளர்ச்சி விவரங்களைத் தருகின்றது.

**2016-2017-இல் பெரும் தொகுப்பு அலகுகள் வாரியாக ஜி.வி.பி.இல் பங்கு**
**(ஜி.வி.பி. Grass Value Added - மொத்த உற்பத்திப் பொருள்களின் மதிப்பு)**

| அலகு (துறை) | ஜி.வி.பி. (ரூபாய் கோடியில்) | அலகின் பங்கு (விழுக்காட்டில்) |
|---|---|---|
| வேளாண்மை (முதல் தொகுப்பு) | 23,82,289 | 17.32 |
| தொழில் (இரண்டாம் தொகுப்பு) | 39,89,791 | 29.02 |
| சேவைத் துறை (மூன்றாம் தொகுப்பு) | 73,78,505 | 53.66 |

இங்கு துறைவாரியான ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு (ஜி.வி.பி.) கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் ஜி.டி.பி. (G.D.P. - Gross Domestic Product) உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். பொதுவாகச் சந்தை மதிப்பு ஜி.வி.பி.யைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும். ஏனெனில் உற்பத்திப் பொருள்களைக் கொள் முதல் செய்து, பொது விற்பனைக்கு வரும் வரையில் வணிக, தரகு, சரக்குப் போக்கு வழிச் செலவு எனப் பொருள்களின் விற்பனை விலையை அதிகரிப்பதாக அமையும். எனினும் உண்மையான வேளாண் ஜி.வி.பி. குறைவாக 17.32 விழுக்காடு என உள்ளது.

2016-2017-ஆம் ஆண்டின் வேளாண் விளை பொருள் உற்பத்தி மதிப்பு சென்ற நான்காண்டுகளில் சரிவைக் கண்டுள்ளது. (கீழே அட்டவணை).

**அட்டவணை 2**

| விவரம் | வேளாண், அது சார்ந்த துறையின் வளர்ச்சி விவரம் (ஆண்டுகள்) | | | |
|---|---|---|---|---|
| | 2012-13 | 13-14 | 14-15 | 2015-16 |
| மொத்தப் பொருளாதா ரத்தில் பங்கு (விழுக்காட்டில்) | 18.2 | 18.6 | 18.0 | 17.5 |
| வேளாண், அதன்சார் துறைகள் உற்பத்தி மட்டுக்குமான வளர்ச்சி (விழுக்காட்டில்) | 1.5 | 5.6 | 0.2 | 0.7 |

முன்பக்கம் உள்ள அட்டவணையிலிருந்து 65 விழுக்காடாகவுள்ள வெகுமக்களான உழைக்கும் மக்கள் வேளாண் துறை சார்ந்துள்ள நிலையில் அவர்கள் உழைப்பின் பயனால் பெறும் விளைவால் பொருள் களின் மதிப்பு நாட்டில் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் வெறும் 8 விழுக்காடு அளவிற்கே உள்ளது. மேலும் அத்துறை தொடர்ந்து சரிவடைந்து வருவதை அத் துறை ஆண்டு வளர்ச்சி விகிதம் 2015-16-இல் 0.7 விழுக்காடு அளவுக்கு வந்துள்ளதிலிருந்து காண முடி கின்றது. மேலும் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் வேளாண் அது சார்ந்த துறைகளின் உற்பத்தி மதிப்புப் பங்கும் மிகப்பெரும் சரிவையும் கண்டு 17.5 விழுக் காடு அளவில் இதில் வேளாண் துறை மட்டும் வெறும் 8 விழுக்காடு அளவுக்குத்தான் பங்களிக்கிறது எனவும் அறிய முடிகின்றது.

நம்மை ஒத்த நாடான சீனாவுடன் ஒப்பிட்டால், அதன் மொத்த உற்பத்தி மதிப்பான 12.75 கோடி டாலர் அளவில் வேளாண் துறை உற்பத்தி மதிப்பு ஒரு இலக்கம் கோடி டாலர் என 8 விழுக்காடு பங்களிக்கிறது. அதாவது 70 இலக்கம் கோடி ரூபாய் அளவுக்கு. ஆனால் இந்திய ஒன்றிய வேளாண் துறை வெறும் ரூ.11.0 இலக்கம் கோடி அளவுக்குத்தான் என ஒன்றிய ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 8 விழுக்காடு தான் பங்களிக்கிறது. அமெரிக்காவின் 2 விழுக்காடு மக்கள்தான் வேளாண் துறையில் உள்ளனர். ஆனால் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பான 20 இலக்கம் கோடி டாலரில் வேளாண் பங்கு 5 விழுக்காடாக 1 இலக்கம் கோடி டாலராக (ரூ.70,00,000 கோடி) உள்ளது.

இவ்வளவு பெரிய வேறுபாட்டிற்கு உண்மையான காரணங்கள் வேளாண் விளைபொருள்களுக்கு மதிப் புடன் கூடிய விலையும், வேளாண் தொழிலாளர்களுக்கு மதிப்புடை ஊதியம் வழங்கப்பட்டு சீனாவின் அரிசி உற்பத்தித் திறன் எக்டேருக்கு 3 டன் ஆக உள்ளது. அரிசி, கோதுமை-ஒரு எக்டேருக்கு உலகின் நிகரளவு உற்பத்தித் திறன், இந்தியாவைவிட அதிகமாக உள்ளது.

எக்டேருக்கு நிகர அளவு உற்பத்தி அரிசி : இந்தியா 2191 கிலோ. உலகம் 3026; கோதுமை : இந்தியா 2750 கிலோ. உலகம் 3281 கி. இதுகுறித்து மேலும் விரிவாக அடுத்தடுத்த கட்டுரைகளில் ஆய்வு செய்யலாம்.

வேளாண் துறை மேம்பாடடைய சில தீர்வுகளைக் காணலாம். கருத்தியல் நிலையிலாவது இதனை விவாதிக்கலாம். விவசாயிகள் ஒவ்வொருவரும் தனித் தனி அலகுக்காக பற்பல இன்னல்களுக்குட்பட்டு விளை விக்கும் உழவுத் தொழிலில் ஈடுபட்டுச் சாகுபடி செய்து விளைச்சல் பொருள்களை விற்பதில் தனித்தனியே தாமாகவோ, தரகர்கள் வழியாகவோ நல்ல நியாய மான விலைகள் பெறுவதில் இன்னல்கள் எழுகின்றன. அதன் விளைவால் அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்; சுரண்டப்படுகிறார்கள். நடுவில் வந்தவர்கள்தான் தரகர் களாகப் பெரும் பயன் அடைகின்றனர். குறு, சிறு விவசாயிகள் விளைவிக்கும் விளைச்சல் அளவு ஒரு டன், இரு டன் தானியமாக மிகவும் சிறிய அளவிலே தான் இருக்கக் கூடும். அந்த நிலையில் நல்ல விலை கிடைக்காத அளவுக்கு நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு அரசுகள் அறிவித்த விலை மிகவும் குறைந்த அளவு விலையிலும் குறைந்த விலைக்கு விற்கக் கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த வகையில் அவர்கள் ஒவ்வொரு வரின் கேட்கும் திறன் இயல்பாக முடக்கப்பட்டுவிடுகின்றது.

ஆனால், பலரின் மூல முதலுடன் திரண்ட முதலீடு செய்து வணிக நிறுவனங்கள் (Firms) அமைத்து பொருள் கள் உற்பத்தி செய்து அதற்கான விலையை அவர் களுக்கு பெருமளவுக்கு இலாபம் கிட்டும் வகையில் நிர்ணயித்து பெரும் வருவாய் ஈட்டி அவரவர்களின் பங்கீடுகளின் அடிப்படையில் பகிர்ந்து கொண்டு பலன் அடைகின்றார்கள். அந்த அமைப்பை நடத்துவதற்கு அவர்களுள் ஓரிருவர் நிருவாகிகள் என்ற நிலையில் அவர்கள் ஊதியமாகவும் பெற்றுக் கொள்கின்றனர்.

மேற்சொன்ன தன்மையில் பல 10, 20, 30, 40 விவசாயிகள் ஒருங்கிணைந்து அவர்கள் ஒட்டுமொத்த விவசாய நிலங்களை 50, 75, 100 ஏக்கர் என்ற அளவில் ஒரே நிலப்பரப்பாக அமைத்து, வளர்ந்து வரும் வேளாண் தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு நாற்று நடல், களையெடுத்தல், உரமிடல், பூச்சிக்கொல்லி மருந்தடித்தல், அறுவடை என அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு விளைச்சலை ஈட்டிக் கொள்ளலாம். அவ்வகையில் 200, 300, 500 டன் என மொத்த விளைச்சல் பெற்றிட முடியும். இதேபோன்று திரளான விவசாயிகள் பல கூட்டுக் குழுக்களாக இணைத்து, அவர்களின் விளைபொருள்களுக்கு நல்லவிலை நிர்ண யிக்கும் திறன் பெறுவது அதாவது அவர்கள் ஈந்த உழைப்பு, செய்திட்ட திரண்ட மூல முதல், இயற்கை இடர்களினால் இழப்பேற்பட்டிருப்பின் அதற்கீடான மதிப்பு, இந்த ஒவ்வொரு குழுவையும் நிர்வகித்தவர் களுக்கான நியாயமான ஊதியம், மேலும் இவ்வாறான உழைப்புகள், இடுபொருள்களுக்கான முதலீடுகளுக் கெல்லாவற்றிற்கான ஈட்டுத் தொகைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு விளைபொருள்களுக்கு நல்ல விலையை நிர்ணயிக்கும் கேட்புத்திறன் பெறக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்களாவர்.

மேலும் இந்த விவசாயக் குழுக்கள் ஒருங்கிணைந்து அரசிடம் தம் விளைபொருள்களுக்கு நல்ல விலை தரும்படி கெஞ்சிக் கேட்க வேண்டிய நிலை மாறும். மாறாக, தங்களுக்குக் கட்டுப்படியாகும் நல்ல விலையைக் கொடுக்கும்படியும் அரசுக்கு நெருக்கடி தந்திட முடியும். இவர்கள் கேட்பதை அடிப்படையாகக் கொண்டுதான் விளைபொருள்களின் விலைகளை அரசு நிர்ணயிக்கும் என்ற கட்டாய நிலைக்குத் தள்ளப்படும்.

இப்படி, கட்டுப்படியான சற்று உயர்வான விலைகள் கிடைக்கின்ற நிலை ஏற்படும் போதும் வேளாண் விளை பொருள்கள் மொத்தத்தையும் அதிக விலைக்கே நாடு முழுவதும் கொள்முதல் செய்யப்படுவதற்கு ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் உரிய வழிவகைகளை வகுத் தெடுத்துச் செயல்படுத்திட வேண்டுமென வேளாண்குடி மக்கள் ஓரணியாகத் திரண்டு அரசுக்கு நெருக்குதல் கொடுத்துப் பணிய வைத்திட வேண்டும். இந்த ஒற்றைக் கோரிக்கைக்கு நாட்டிலுள்ள முதலாளியக் கட்சிகள் செவி மடுக்கிறதோ இல்லையோ பொதுவுடைமை அமைப்புகள், கட்சிகள் என அனைத்து இடதுசாரிச் சிந்தனையாளர் களும் விவசாயிகளை ஒருங்கே திரட்டி நெடிய கடும், தொடர் போராட்டம் நிகழ்த்தி வென்றெடுக்க வேண்டும். இது வேளாண் மக்களின் தன்மான விடுதலைக்கு வித்தாக அமைவது உறுதி.

வேளாண் தொழிலின் பெரும் தொகுப்பான இடு பொருளே உழைப்புத்தான்; உடல் உழைப்புத்தான். எனவே வேளாண் தொழில் இழிதொழில் எனப் பார்ப் பான் முத்திரையிட்டான். அதை வழிமொழிந்தவனே படிப்பைப் பெற்ற பிற உழைப்புச் சமூகத்தினரும். எனவே பார்ப்பனியம் வேளாண் தொழிலில் ஈடுபடும் இந்திய உழவனுக்குப் படிப்புத் தேவையற்றது என்று சொல்லுமளவுக்குத் திமிர் கொண்டவர்களாகிவிட்டனர். குறிப்பாகச் சங்கப் பரிவார் கூட்ட பாரதிய சனதாக் கட்சியின் தலைவர்கள் அமெரிக்காவில் ஊடகவியலாளர்கள் இந்த 21ஆம் நூற்றாண்டில் 30 கோடி மக்கள் பட்டறிவு அற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளது நாட்டிற்குத் தலை குனிவல்லவா? இழிவல்லவா! அவலத்தின் வெளிப்பாடல் லவா, என மனம் நொந்து வினவிய போது பார்ப்பனிய அரசியல்வாதிகள் உழைப்புச் சமூகத்திற்குக் குறிப்பாக உழவர்களுக்கு படிப்பறிவு தேவையில்லை என்று சொல்லுமளவுக்கு அகந்தையுடன் பதிலிறுத்துள்ளனர்.

இந்நாட்டின் இந்த இழி மனநிலை பார்ப்பனியச் சமயத்திற்கு காலமும் ஆட்பட்டுள்ள சட்டமன்ற, நிருவாக, அறமன்றத் துறைகளில் உயர்நிலையில் உள்ளோரின் உண்மையாகவே இயல்பாகவே அமைத்துவிட்ட உள நிலை. இக்கூற்றின் நோக்கம் யாரையும் தூற்றுவதற் கன்று. மாறாகத் தீர்வை நோக்கிப் பயணிக்க உண்மை நிலையை உணர்த்தவே. எனவே உழைப்பின் மேன்மை சொல்லில் மட்டுமல்ல; மதிப்பாலும், உயர்நிலை எய்துவது முறையான கல்வி முறையால்தான். படிப்பால் அல்ல என்பதை உணர வேண்டும்.

சமூக மேம்பாட்டுக்கான அடிப்படையான இடுபொருளான கல்வியைச் சமயத்தின் பேரால் பார்ப்பனியச் சமூகம் அச்சமயம் சார்ந்த அனைத்துப் படிநிலையிலுமிருந்த சமூகங்களுக்கும் முற்றிலுமாக மறுத்து, அவர்களை இழிமக்களாக நடத்தி வந்ததோடு, தாம் இழிமக்களாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வு அற்றவர்களாக வைத்துக் கொண்டது மட்டுமின்றி, அவ்வாறு இழிநிலையில் பிழைப்புக்கு வழி அற்றவர்களாகவும், வயிறுக்குச் சோறு அற்று வறுமையில் வாடுவதும் இழி சமூகங்களுக்காக விதிக்கப்பட்ட நியதி என்றெண்ண வைத்து விலங்கினும் கீழான நிலையில் இருப்பது நிறைவானதே என்றெண்ணத்துடனும் வைக்கப்பட்டிருக்கின்றனர். **அந்நிலையில், "உழைப்பின் விளைவு தான் எல்லாம் என்ற எண்ணம்" துளிர்விடாத வகையில் சனாதனத் தர்மப்படி உடல் உழைப்பு இழிவானது என்றெண்ணத்திலும் வைக்கப்பட்டனர். இதில் பார்ப்பனர்கள் படிப்புப் பெற முற்றுரிமை பெற்றவர் என்ற நிலை மாறி வந்த உழைக்கும் சமூகத்திலிருந்து படிப்புப் பெற்றவர்களும் உடல் உழைப்பு இழிவானதே என்ற பார்ப்பன சனாதன தர்மத்திற்கு ஆட்பட்டவர்களாகி விட்டனர்.**

முதலில் இந்த நிலை வேளாண்மை தொழில் வளர்த்தெடுக்கப்படுவதுடன் மாறிடும் வகையில் அடிப்படைப் பள்ளிக் கல்வியையாவது எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் பள்ளிக் கல்வி எனக் கல்விக்கான ஒதுக்கீட்டில் பெரும் பகுதியை ஒதுக்கீடு செய்திட வேண்டும். தற்போது கல்விக்கு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 2-3 விழுக்காடு அளவே ஒதுக்கப்படுவது ஆறு விழுக்காட்டு அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும். அதில் உயர் கல்வி பெருமளவு நிதி தற்போது ஒதுக்கீடு செய்வதை மாற்றி கல்விக்கு மேலே சொன்னவாறு பள்ளிக் கல்விக்கு பெருமளவு, நிதி ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

இதில் முதன்மையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது, பார்ப்பனியம் காலமும் படிப்பு வழிதான் ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென உளவியலை மொத்த சமூகத்தில் ஊடுருவ வைத்து உழைப்பு மதிப்பளிக்கத்தக்கதல்ல என்ற உளவியலை நிலைநிறுத்தச் செய்துவிட்டது. அதை நொறுக்கித் தவிடுபொடியாக்குவதற்கு அனைவருக்கும், இலவச உயர் பள்ளிக் கல்வி அளித்து அனைவரும் ஓர் நிறை என்ற நிலையை உருவாக்கிட வேண்டும். அதன் விளைவாகப் படிப்புப் பெற்றவர்கள் வேளாண் தொழில் முதல் எல்லாத் துறைகளிலும் நிரவி சமநிலை பெற்றவராவர். அப்போது உழைப்பு, உடல் உழைப்புக்கு உரிய மதிப்புக்குரியதாகும் என்ற உணர்வு மேலெழும்.

மேலே சொல்லப்பட்டுள்ள தீர்வுக்கான கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். இன்னும் பல தீர்வுக்கான கருத்துக்களை நம் போன்ற தன்மையுடைய நாடுகளின்றி, மேலும் பல நாடுகளைப் பற்றி வேளாண் துறை அலகின் செயல்பாடுகளை ஒப்பீட்டளவில் கணக்கிற் கொண்டு தொடராக விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது. அதாவது பல்துறை வேலை வாய்ப்புத் தளங்களில் வேலை செய்வோர் அமைப்புசார், அமைப்பு சாரா பிரிவுகளில் எந்தெந்த விகிதத்தில் உள்ளனர், குறிப்பாக வேளாண் துறையில் உள்ள இருப்பு நிலை அவர்களின் பல்வகைப்பட்ட பணிகளுக்கான வருமான அளவுகள், அவர்களின் பணி வகைகள், வேளாண் உற்பத்தித் திறன், ஆண்டுக்கு நிகரளவு உற்பத்தி, வேளாண் சாகுபடி நிலங்களின் மொத்தப் பரப்பளவு அவற்றில் எந்தளவு சாகுபடிக்கு வேறு துறைகளில் வேளாண் வேலைக்காரர்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. சாகுபடிக்கான முன் நடவடிக்கைகள் (Backward Linkages) விளைபொருள்களை மதிப்புடை பொருளாக்க தொடர் நடவடிக்கைகள் (Forward Linkages) எடுப்பது பற்றியும் எந்தளவு ஈடுபட வாய்ப்புப் பெற்றுள்ளனர், சாகுபடி முறைகள், தொழில்நுட்பப் பயன்பாடுகள், இன்றும் குறிப்பாக உரமிடல், பூச்சிக்கொல்லிகள் பயன்பாடுகள் என்பனவற்றையும் ஒப்பீடு செய்திட வேண்டும்.

வேளாண் துறையில் இன்றி அதில் ஈடுபடும் மக்களின் சமூக, கல்வி, மருத்துவ நலன் சார்ந்த நிலைகளையும் ஒப்பீட்டளவில் கொள்ளவும் வேண்டும். அதன் அடிப்படையில் கருத்துக்களையும் தொகுத்து இந்திய ஒன்றியத்தின் வேளாண் மக்களின் விடுதலையை மய்யமாகக் கொண்டு ஒவ்வொரு தளத்திலும் செயல் திட்டங்கள் சார்ந்தும் கருத்துரைக்க வேண்டியுள்ளது. தொடரும் கட்டுரைகளில் அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

இங்கு வேளாண் துறையில் வேளாண்துறை சார்ந்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் அன்றி கல்வி, மருத்துவம், சமூக விடுதலை நிலைகளில் பார்ப்பனியம் ஊடுருவி இவற்றையெல்லாம் திட்டமிட்டு இவர்களுக்கு மறுத்து வருவதை எதிர்கொள்வது, முறியடிப்பது என்பன பற்றி கருத்துக்களையும் நிரல்படுத்தி, மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்களும் வகுக்கப்பட வேண்டும். ஆனால் அரசு ஊடகங்கள், தொழில்நுட்ப ஊடகங்கள், தொழிலகங்கள், அரசுப் பணிகள், தனியார் பணிகள், இன்ன பிற தளங்களிலெல்லாம் 80-90 விழுக்காடு என நீக்கமற நிறைந்து பார்ப்பனிய சங் பரிவார் கூட்டங்களும், பிற தொங்கு சதைகளும் எந்த மாற்றத்தை செயல்படுத்த விடுமா என்ற பெரும் வினா நம்முள் உள்ளது.

ஆனால் வேளாண்சார் தொழில்களில் ஈடுபடும் உடல் உழைப்பாளிகளை ஒன்றிணைத்து, சரியான புரிதலை வகுத்தெடுத்து மக்கள் பற்றாளர்களாக உள்ள அமைப்பு, கட்சி சார்ந்த பலரும் ஒருங்கிணைந்து செயல் திட்டங்களை உடனடியானவை, நெடுங்காலத் திற்கானவை என வகைப்படுத்தி மேற்கொண்டால் தான் வேளாண்மைத் தொழிலும் மேம்படும்; வேளாண் மக்களும் மேம்படுவர். நாட்டின் மனிதவள மேம்பாடு உயரும்.

❖

# இந்தி, சமற்கிருத, ஆங்கில மொழி ஆதிக்கத்தைத் தகர்ப்போம்! மொழிவழித் தேசிய இனங்களின் தன்னுரிமையை வென்றெடுப்போம்!

**க. முகிலன்**

மனிதன் தவிர, பிற உயிரினங்கள் தாம் வாழும் சூழலில் இயற்கையில் கிடைப்பவற்றை அப்படியே துய்க்கின்றன. மனிதன் மட்டுமே கருவியைக் கொண்டு தன் உழைப்பைச் செலுத்தி, இயற்கையில் இருப்ப வற்றைப் பயன்படுத்தித் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கான உற்பத்திச் செயலில் ஈடுபடு கிறான். இந்த உற்பத்திச் செயல்தான் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான முதன்மையான வேறுபாடு.

உற்பத்திச் செயல் என்கிற நடைமுறையிலிருந்தே மனித அறிவு என்பது உருவாகி வளர்ச்சி பெற்று வந்தது. மனிதர்கள் கூட்டு உழைப்பில் ஈடுபட்ட போது, தங்களுடைய எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டிய தேவை எழுந்தது. அந்நிலையில்தான் நீண்டகாலப்போக்கில் பேச்சு மொழி தோன்றியது. இதை எங்கெல்சு, "உழைப்பிலிருந்தும், அதனுடைய மாற்றப் போக்கிலிருந்தும் மொழியின் பிறப்பை விளக்கு வது ஒன்றே சாலவும் பொருத்தமுடையது" என்று கூறுகிறார்.

பேச்சு மொழி உருவான பின் பன்னெடுங்காலம் கழித்தே அது, எழுத்து மொழியாக வரிவடிவம் பெற்றது. சமற்கிருத மொழியில் செய்யுள் வடிவில் சொல்லப்பட்ட ஆரியர்களின் வேதங்கள் பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகே எழுத்து வடிவம் பெற்றன.

உலகில் தற்போது 6,900 மொழிகள் பேசப்படுவ தாகக் கூறப்படுகிறது. இவற்றில் கால்பங்கு மொழிகள் 1000 பேருக்கும் குறைவானவர்களால் பேசப்படு கின்றன. அய்ரோப்பாவில் 230 மொழிகளும், ஆசியாவில் 2,197 மொழிகளும் பேசப்படுகின்றன. பேசப்படும் மொழிகளில் பெரும்பாலானவை எழுத்து வடிவம் பெறாதவை.

அடுத்த நூறு ஆண்டுகளில் 3000 மொழிகள் அழியக்கூடிய ஆபத்து இருப்பதாக அய்க்கிய நாடுகள் அமைப்பின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம் (UNESCO - யுனெஸ்கோ) தன்னுடைய கவலையைத் தெரிவித்துள்ளது.

தொழிற்சாலைகளில் எரிசக்தியைக் கொண்டு எந்திரங்கள் மூலம் பொருள்களை உற்பத்தி செய்யும் முதலாளிய உற்பத்தி முறை 250 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டது. முதலாளியம் தன் இலாபவேட்டைக்காகக் கண்மூடித்தனமாக இயற்கையின் கனிமவளங்களைச் சுரண்டியதால் பெரும் பரப்பில் காடுகள் அழிந்தன. இதனால் பல உயிரினங்கள் வேகமாக அழிந்து வரு கின்றன. இவ்வாறு அழியக்கூடிய நிலையில் உள்ள உயிரினங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணமும், செயல் பாடும் வலுப்பெற்று வருகின்றன.

ஆனால் இந்த அளவிற்கு மொழியின் அழிவு பற்றிய விழிப்புணர்வு இன்னும் எழுச்சி பெறவில்லை. ஒரு மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டும் அன்று; ஒவ்வொரு மொழியிலும் அதன் வரலாறு நெடுகிலும் உருவான அறிவு, ஒரு கருவூல மாகச் சேமிக்கப்பட்டுள்ளது. அம்மொழி பேசும் மக்களுக்கே உரித்தான - தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுக் கூறுகள், கலை வடிவங்கள் உள்ளன. இயற்கையில் பல்லுயிர்ப் பன்மையைப் பாதுகாத்தல் எந்த அளவுக்கு இன்றியமையாததோ அதேபோல் மொழிகளின் பன் மையையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று யுனெஸ்கோ வலியுறுத்துகிறது. அதனால்தான் ஆண்டு தோறும் பிப்பிரவரி 21ஆம் நாளைத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடித்து, தாய்மொழியின் முதன்மையை மக்கள் உணருமாறு செய்கிறது.

மனிதகுல வரலாற்றில் மத்திய காலத்தில் (கி.பி.500 -கி.பி.1500) நிலவுடைமை சமூக அமைப்பு நிலவியது. இந்தியாவைப் பொருத்த அளவில் 1775இல் ஆங்கிலேயர் ஆட்சி காலூன்றும் வரையில் நிலவுடைமை சமூகக் கட்டமைப்பே நீடித்தது. மத்திய கால வரலாற்றில் ஆளும் வர்க்கம் மதத்தை ஆதிக்கம் செலுத்துவதற்கான கருவி யாகப் பயன்படுத்தியது. அக்காலத்தில் கல்வி என்பது மதக்கல்வியாக மட்டுமே இருந்தது. மேட்டுக்குடியி னருக்கு மட்டுமே கல்வி கற்கும் உரிமை இருந்தது. இந்தியாவில் சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட மொழியே வழிபாட்டுக் குரிய மொழியாக இருந்தது. எனவே மத ஆதிக்கமும் மொழி ஆதிக்கமும் பின்னிப்பிணைந்திருந்தன. இவை அரசியல் அதிகாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்க-ஆஸ்திரேலிய கண்டங்களைக் கண்டறிவ தற்குமுன் அய்ரோப்பாவில் இலத்தீன் மொழியே கிறித்துவ மதத்தின் வழிபாட்டு மொழியாக இருந்தது.

1517இல் செருமனியைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் கிறித்துவ மதத் தலைமைக்கு எதிராகக் கிளர்ச்சி செய் தார். இதன் விளைவாகக் கிறித்துவ மதம் கத்தோலிக்கப் பிரிவு, பிராடஸ்டென்ட் பிரிவு என்று பிளவுபட்டது. அதனால் அவரவர் தாய்மொழியில் கிறித்துவ மறை நூலான விவிலியத்தைப் படிக்கின்ற - பரப்புரை செய் கின்ற நிலை உருவானது. முதலாளியம் தன் தேவைக் காகத் தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட தேசியத்தையும், தேச-அரசுகள் உருவாக்கத்தையும்

ஊக்குவித்தது. எனவே அய்ரோப்பாவில் தாய்மொழிகள் வேகமாக வளர்ச்சியடைந்தன.

இந்தியாவில் கி.பி.4ஆம் நூற்றாண்டில் பிறவியில் உயர்வு-தாழ்வு கற்பிக்கும் வருணாசிரம அடிப்படை யிலான இந்து மதமும் சமற்கிருத மொழி ஆதிக்கமும் வலிமையாக நிலைகொண்டன. மதச் சடங்குகள் செய்யும் உரிமை பார்ப்பனர்க்கு மட்டுமே உரியதாயிற்று. சமற்கிருதம் வழிபாட்டு மொழியாக மட்டுமின்றி கல்வி மொழியாகவும், மன்னர்களின் ஆட்சி மொழியாகவும் ஆதிக்கம் செலுத்தியது. இந்தியாவின் பெருநிலப்பரப்பை ஆட்சி செய்த முகலாயர் காலத்தில் (கி.பி.1526-1775) பாரசீகம் ஆட்சிமொழியாக இருந்த போதிலும்-பார்ப்பன ஆதிக்கமோ, சமற்கிருத ஆதிக்கமோ சற்றும் குலையவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1835ஆம் ஆண்டில்தான் பொதுக்கல்வி முறை கொண்டுவரப்பட்டது. அனைத்துச் சாதியினருக்கும் கல்வி கற்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் ஆங்கில வழியிலான கல்வியே தரப்பட்டது. அதனால் காலங்காலமாகக் கல்வி உரிமை பெற்றிருந்த பார்ப்பனர்களே கல்வி கற்று, பெருமளவில் அரசு வேலை களில் அமர்ந்தனர். கல்வி கற்ற பார்ப்பன, சத்திரிய, பனியா வகுப்பினர் ஆங்கிலேயரிடமிருந்து முழு ஆட்சியதி காரத்தைக் கைப்பற்றுவதை நோக்க மாகக் கொண்டு, 1885இல் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியைத் தொடங் கினர். இதற்காக இந்து மதத்தின் பேரால் மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். திலகர் இதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

காந்தியார் 1915இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பினார். 1920இல் காங்கிரசு காந்தியின் தலைமையின்கீழ் வந்தது. பல்வேறு தாய்மொழிகளைப் பேசும் மக்களை ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக அணிதிரட்டுவதற்காக, காங்கிரசுக் கட்சியை மொழி வழியில் அமைத்தார். சென்னை மாகாணம் ஒரே ஆட்சி நிருவாகத்தின்கீழ் இருந்த போதிலும், தமிழ் மாகாண காங்கிரசு, தெலுங்கு மாகாண காங்கிரசு என்கிற கட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. 1923இல் தமிழ் மாகாண காங்கிரசு உருவான போது பெரியார் அதன் செயலாளராகவும், தலைவராகவும் பதவி வகித்தார். காங்கிரசுக் கட்சி, சுதந்தர இந்தியா வில் மொழிவழிப்பட்ட மாநிலங்கள் அமைக்கப்படும் என்று கூறிய போதிலும், இந்திதான் இந்தியாவின் தேசிய ஆட்சி மொழியாக இருக்கும் என்றும் கூறிவந்தது. காந்தியாரும் இந்தியைத் தீவிரமாக ஆதரித்து வந்தார்.

1937இல் நடைபெற்ற தேர்தலில் பெரும்பாலான மாகாணங்களில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. இராசகோபாலாச்சாரி சென்னை மாகாண முதலமைச்சர் (பிரதமர்) ஆனார். 10.8.1937 இல் இராசகோபாலாச்சாரி இந்தியை சென்னை மாகாண உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு கட்டாயப் பாடமாக வைக்கப் போவதாக அறிவித்தார். இதற்கான அரசு ஆணை 21.4.1938இல் வெளியிடப்பட்டது. இதை எதிர்த்து பெரியாரின் தலைமையில் மாபெரும் மக்கள் போராட்டம் நடந்தது. இந்தித் திணிப்பு என்பது மொழி ஆதிக்கம் மட்டுமன்று, வடஇந்திய மேல்சாதி இந்துக் களின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே இதன் நோக்கம் என்பதைத் தமிழர்கள் புரிந்து கொண்ட தால்தான் இன்றுவரை இந்தித் திணிப்பை எதிர்த்து வருகின்றனர்.

இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டபோது, இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி இருப்பதா? ஆங்கிலமே தொடர்வதா? என்கிற விவாதம் எழுந்தது. தில்லியில் அரசியல் சட்ட அமைப்பு இல்லத் தில் (Constitution House) நடந்த காங்கிரசுக் கட்சியின் கூட்டத்தில் இது விவாதிக்கப்பட்டது. அப்போது நடத்தப் பட்ட வாக்கெடுப்பில் இந்திக்கு ஆதரவாகவும் எதிராக வும் சமமான வாக்குகள் இருந்தன. அப்போது காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்த பட்டாபி சீத்தாராமய்யா தலைவருக்கான வாக்கை இந்திக்கு ஆதரவாக அளித் தார். காங்கிரசுக் கட்சி இந்தியை ஏற்றுக்கொண்டதால் அரசமைப்புச் சட்ட அவையில் 14.9.1948 அன்று இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்கப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தில் 17ஆம் பகுதியில் விதி 341(1)-இல், ''இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழி யாக (அ) ஆட்சி மொழியாக, தேவநாகரி எழுத்து வடிவில் உள்ள இந்தி இருக்க வேண்டும்'' என்று எழுதப்பட்டது, 343 முதல் 349 முடிய உள்ள விதிகள் இந்திய ஒன்றியத்தின் பல துறைகளிலும் அலுவல் மொழி இந்தி தான் என்று கூறுகின்றன.

இந்திய நாட்டின் ஒற்றுமையைக் காக்க, பெரும் பகுதி மக்களால் பேசப்படும் இந்தியே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று காங்கிரசுக்காரர்கள் கூறு வதில் வியப்பதற்கு ஏதுமில்லை. ஆனால் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் இதை வலியுறுத்துவதுதான் வியப் புக்கு உரியதாகும்.

சுதந்தர இந்தியாவில் மொழிவழிப்பட்ட மாநிலங் கள் அமைக்கப்படும் என்று நீண்டகாலமாகக் காங்கிரசுக் கட்சி அளித்து வந்த வாக்குறுதியைப் பிரதமர் நேரு நிறைவேற்ற மறுத்தார். அதனால் தெலுங்கு மொழி பேசும் மக்களுக்குத் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று ஆந்திரப் பகுதியில் மாபெரும் போராட்டங்கள் நடந்தன, 1952இல் பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் உண்ணாநோன்பிருந்து (19.10.1952இல் 15.12.1952 வரை) இக்கோரிக்கைக்காக உயிர் துறந்தார். அதன் பிறகு ஆந்திரம் 1-10-1953இல் முதலாவது மொழிவழி மாநிலமாக அமைக்கப்பட்டது. இந்திய அளவில் 1956இல் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன.

அந்நிலையில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 1955 திசம்பர் 23 அன்று ''மொழிவழி மாநிலங்கள் குறித்த என் எண்ணங்கள்'' என்கிற தலைப்பிட்ட நீண்ட அறிக்கையைக் குறுநூல் வடிவில் வெளியிட்டார், அதில் அவர் கூறியிருப்பது :



இந்தித் திணிப்பை எதிர்த்து 1965ல் மாணவர்கள் நடத்தியப் போராட்டம்

"மொழிவழி மாநிலங்களால் ஏற்படும் நன்மைகளைக் கூறியது போலவே, அவற்றின் தீமைகளையும் எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிராந்திய மொழியை ஆட்சிமொழியாகக் கொண்ட மொழிவழி மாநிலம் சுதந்தரமான தேசியமாக எளிதில் உருவெடுக்கும். சுதந்தர அரசு என்பதற்கும் சுதந்தரமான தேசியம் என்பதற்கும் இடையிலான இடைவெளி மிகவும் குறைவாகும். மொழிவழி மாநிலங்கள் அமைந்தால் இப்போது நாம் பெற்றுள்ள நவீன இந்தியா என்பது மறைந்து போகும், போட்டிகளும் போர்களும் கொண்டதாக இருந்த பல அரசுகள் வரலாற்றின் மத்திய காலத்தில் இருந்தது போன்ற நிலைமை உருவாகும்.

இந்த ஆபத்தை எதிர்கொள்வது எப்படி? மொழிவழி மாநிலங்களின் ஆட்சிமொழியாக அம்மாநிலத்தின் மொழி இருக்கக்கூடாது; இந்தியே மாநிலங்களில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற அரசமைப்புச் சட்டத்தில் விதி செய்ய வேண்டும், இந்த நிலை உருவாகும் வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கலாம்" (அம்பேத்கர் நூல் திரட்டு (ஆங்கிலம்) முதல் தொகுதி, பக்கம் 144, 145).

**மொழிவழிப்பட்ட தேசிய இனங்களின் விடுதலை உலக அளவில் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக தனித்த தேசிய இனங்களாக வளர்ந்த மொழிவழித் தேசிய மக்களின் அடிப்படையான மொழி உரிமையை மறுக்கும் வகையில் "இந்தியே இந்தியா" என்கிற சிறைக்குள் அடைக்க முயலும் அம்பேத்கரின் கருத்தை ஏற்க இயலாது. அடுப்பங்கரையிலும் ஆங்கிலம் பேச வேண்டும் என்கிற பெரியாரின் கருத்தைப் புறக்கணிப்பது போலவே, இந்தியனாக இருக்க வேண்டுமானால் இந்தியைத் தாய்மொழியாகக் கருதவேண்டும் என்கிற அம்பேத்கரின் கருத்தையும் புறக்கணிப்போம்.**

அரசமைப்புச் சட்டத்தில் 1965 முதல் இந்தி மட்டுமே இந்தியாவில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. அதனால் 1963இல் தமிழ் நாட்டில் இந்த விதியை மாற்றக்கோரி போராட்டங்கள் எழுந்தன. அதனால் பிரதமர் நேரு, "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாகத் தொடரும்" என்று வாக்குறுதி அளித்தார், நேருவின் மறைவுக்குப்பின் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்தபோது தமிழ்நாட்டில் 1965இல் மாணவர்கள் முன்னின்று மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார்கள். தி.மு.க. இதில் முதன்மையான பங்காற்றியது. இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காவல்துறையினரின் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தனர். அதன்பிறகே நேருவும் லால்பகதூர் சாஸ்திரியும் அளித்த வாக்குறுதிகள் சட்ட வடிவம் பெற்றன.

**தமிழ்நாட்டில் நடந்தது போல் இந்தி பேசாத பிற மாநிலங்களில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடக்காதது ஏன்? தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தமிழ் மொழியிலிருந்து காலப்போக்கில் கிளைத்தவை என்றாலும், ஆரியப் பார்ப்பன ஆதிக்கத்தால் சமற்கிருத மொழியுடன் பெருமளவில் கலப்புக்குள்ளாயின. தேவாரம், நாலாயிரப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள் சமற்கிருத ஆதிக்கத்தை எதிர்த்துத், தமிழின் தனித்து இயங்க வல்ல ஆற்றலைக் காத்தன. மேலும் தமிழர்க்கு திருவள்ளுவர் காலம் தொடங்கி, சித்தர்கள், இராமலிங்க அடிகள் என நெடிய ஆரிய எதிர்ப்பு மரபு உண்டு. நீதிக்கட்சியின் ஆட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்கிற வலிமையான "பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்" போன்ற இயக்கம் பிற மாநிலங்களில் இல்லை.**

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக இருக்கும் என்கிற சட்டம் இயற்றப்பட்ட போதிலும் நடுவண் அரசில் ஆட்சியில் அமர்ந்த காங்கிரசு, பா.ச.க. உள்ளிட்ட எல்லாக் கட்சி களும் இந்தி மட்டுமே அலுவல் மொழியாவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றன.

**அரசமைப்புச் சட்டத்தில் இந்தி அலுவல் மொழி என்று மட்டுமே எழுதப்பட்டுள்ள போதிலும், இந்தி இந்தியாவின் தேசிய மொழி - பொது மொழி என்கிற கருத்து ஆரியப் பார்ப்பன ஆளும் வர்க்கத்தால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகிறது.**

இந்தி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான சூழ்ச்சி களில் ஒன்று, பிறமொழிகளைப் பேசுவோர்களையும் இந்தி மொழியைப் பேசுவோராகப் பொய்யாகக் கணக்குக் காட்டுவதாகும். அரசமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் முதலில் 15 மொழிகள் இடம்பெற்றிருந்தன. 1991ஆம் ஆண்டில் கொங்கனி, நேப்பாளி, மணிப்பூரி ஆகிய மூன்று மொழிகளும் 2001ஆம் ஆண்டில் சந்தாலி, டோக்கிரி, போடோ, மைத்திலி ஆகிய நான்கு மொழிகளும் சேர்க்கப்பட்டன. தற்போது இப்பட்டியலில் 22 மொழிகள் உள்ளன.

முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1872இல் எடுக்கப்பட்டது. அதன்பின் 1881 முதல் ஒவ்வொரு பத்தாவது ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. 1961ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தான் முதன்முதலில் நாட்டிலுள்ள மொழிகள் கணக்கு எடுப்பையும் உள்ளடக்கியதாக இருந்தது. அப்போது 1652 தாய்மொழிகள் பேசப்படுவதாகக் கணக்கிடப் பட்டது. அதன்பின், பத்தாயிரம் பேருக்கு மேற்பட்டவர் களால் பேசப்படும் மொழிகளை மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும் என்று நடுவண் அரசு முடிவு செய்தது.

இதன்படி 2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின், மொழிகள் - அவற்றைப் பேசுவோர் பற்றிய விவரம் ஏழு ஆண்டுகள் கழித்து அண்மையில்தான் வெளியிடப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளைப் பேசுவோர் விவரம் பகுதி-அ என்றும், இதில் இடம்பெறாத 99 மொழிகளைப் பேசுவோர் விவரம் பகுதி-ஆ என்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, மொத்தம் 121 (22+99) மொழிகள் உள்ளன. இவற்றின் உட்பிரிவு மொழிகள் உட்பட 270 தாய் மொழிகள் உள்ளன. தமிழ் என்கிற தலைப்பின்கீழ் இருளம், கைக்கடை, கொரவ, எருக்கலா ஆகிய தாய்மொழிகளைப் பேசுவோர் வைக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு மொழியின் கீழும் அய்ந்தாறு மொழிகளுக்கு மேல் வைக்கப்படவில்லை. ஆனால் இந்தி என்கிற தலைப்பின்கீழ் 61 மொழிகள் அடைக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் இடநெருக்கடி கருதி இந்தி மொழிக்கு மட்டுமே உட்பிரிவுகள் இங்கே தரப்பட்டுள்ளன.

**2011ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மொத்தம் 121.01 கோடி மக்கள் உள்ளனர். இவர்களில் இந்தி மொழி பேசுவோர், 52.83 கோடிப் பேர். அதாவது மொத்த மக்கள் தொகையில் 43.65 விழுக்காட்டினர். இதன் மூலம் இந்தியே அதிகம் பேரால் பேசப்படும் மொழி என்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 32.22 கோடிப் பேர் - 26.62 விழுக்காட்டினர் மட்டுமே ஆகும்.**

இந்தி பேசுவோர்என்கிற பட்டியலில் போஜ்புரி 5.05 கோடி, இராஜஸ்தானி 2.58 கோடி, சத்தீஸ்கரி 1.62 கோடி, மகதி 1.27 கோடி, ஹர்யான் 98 இலட்சம், மார்வாரி 78 இலட்சம் பேர்களும் சேர்த்திருப்பது, திட்டமிட்ட இந்தி ஆதிக்க சூழ்ச்சியாகும். போஜ்புரி மொழி பேசும் 5 கோடி மக்கள் தங்கள் மொழியைத் தனியான மொழி யாக அங்கீகரிக்க வேண்டும் என்று போராடி வருகின்ற னர். போஜ்புரி மொழியில் திரைப் படங்கள் தயாரிக்கப் படுகின்றன. போஜ்புரி மொழிக்குத் தனியான இலக்கணம், இலக்கியம் இருக்கிறது. உலகில் உள்ள நாடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவை. ஆனால் இந்தியாவில் இந்தி மொழியின் ஆதிக்கத்திற்காகப் பல இலட்சம் பேர்கள் பேசும் தாய்மொழிகளை அழித்திடப் பார்ப்பன ஆளும் வர்க்கம் தொடர்ந்து முயன்று வருகிறது.

**இதுவரை கண்டறியப்பட்ட அறிவியல் உண்மை களையும் இனி கண்டுபிடிக்கப்படப் போகும் அறி வியல் தொழில்நுட்பங்களையும் தன்னுள் கொண்டி ருப்பதாகக் கூறப்படும் சமற்கிருத மொழியைப் பேசுவதாக 24,821 பேர் மட்டுமே கூறியுள்ளனர்.**

மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினராக உள்ள பார்ப்பனர்கள் தங்கள் தாய்மொழியாக சமற்கிருதத் தைக் கூறியிருந்தால் அதைப் பேசுவோர் 6 கோடிப் பேர் என்று கணக்கில் வந்திருக்கும். தாய்மொழி என்பது குழந்தையின் தாய் பேசுகிற மொழி என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, சமற்கிருதம் உண் மையில் எவருக்கும் தாய்மொழியாக இல்லை. இந்து மத ஆதிக்கத்தை-ஆரியப் பண்பாட்டை நிலைநிறுத்து வதற்காகவே சமற்கிருத மொழி இந்திய ஆளும் வர்க்கத்தால் உயர்த்திப் பிடிக்கப்படுகிறது. சமற்கிருதம் இந்துமத வழிபாட்டு மொழியாக நீடிப்பதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் அரணாக நிற்கிறது. பள்ளி முதல் கல்லூரி வரை சமற்கிருதம் கற்பிக்கப்பட வேண்டும் என்று மோடி அரசு வலியுறுத்துகிறது. அவரவர் தாய்மொழியில் கோயில்களில் இந்துக் கடவுள்களை வழிபடும் உரிமையை நிலைநாட்டுவதன் மூலம் பார்ப்பனிய-சமற்கிருத ஆதிக்கத்தை முறியடிக்க முடியும். கிறித்துவ தேவாலயங்களில் விவிலியம் அவரவர் தாய்மொழியில் படிக்கப்படுவதுபோல், மசூதி களில் குரானும் தத்தம் தாய்மொழியில் படிக்கும் நிலை

| வ. எண். | மொழியின் பெயர் (இந்திக்கு மட்டும் அதனுடன் இணைக்-கப்பட்ட தாய்மொழிகள் விவரம் தரப்பட்டுள்ளது) | அவரவர் தாய்மொழி என்றும் தாங்கள் பேசும் மொழி என்றும் பதிவு செய்தோர் மற்றும் கணக்கெடுப்பு ஆண்டு 2001 | 2011 | 2011 கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் அம்மொழி பேசுவோர் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | அசாமி | 1,31,68,484 | 1,53,11,351 | 1.26 |
| 2. | பெங்காலி | 8,33,69,769 | 9,72,37,669 | 8.03 |
| 3. | போடோ | 13,50,478 | 14,82,929 | 0.12 |
| 4. | டோக்ரி | 22,82,589 | 25,96,767 | 0.21 |
| 5. | குசராத்ரி | 4,60,91,617 | 5,54,92,554 | 4.58 |
| **6.** | **இந்தி** | **42,20,48,462** | **52,83,47,193** | **43.65** |
| | 1. அவதி | 25,29,308 | 38,50,906 | |
| | 2. பகேல் | 26,65,011 | 26,79,129 | |
| | 3. பக்ரி ராஜஸ்தான் | 14,34,123 | 2,34,227 | |
| | 4. பஞ்சாரி | 12,59,821 | 15,81,271 | |
| | 5. பத்ராவஹி | 66,918 | 98,806 | |
| | 6. பஹார்மௌரி | 66,246 | 1,81,069 | |
| | 7. போஜ்புரி | 3,30,99,497 | 5,05,79,447 | 1.21 |
| | 8. பிரஜ்பாஷா | 5,74,245 | 15,56,314 | |
| | 9. பண்டேலி | 30,72,147 | 56,26,356 | 0.46 |
| | 10. சம்பீலி | 1,26,589 | 1,25,746 | |
| | 11. சதீஸ்கரி | 1,32,60,186 | 1,62,45,190 | |
| | 12. சௌராஹி | 75,552 | 61,199 | |
| | 13. துந்தாரி | 18,71,130 | 14,76,446 | |
| | 14. கர்வாலி | 22,67,314 | 24,82,089 | |
| | 15. கோஜ்ரி | 7,62,867 | 12,27,901 | |
| | 16. ஹரௌட்டி | 24,62,867 | 29,44,356 | |
| | 17. ஹர்யான்வி | 79,97,192 | 98,06,519 | 0.81 |
| | **18. இந்தி** | **25,79,19,635** | **32,22,30,097** | **26.62** |
| | 19. ஜன்சாரி | 1,14,733 | 1,36,779 | |
| | 20. கங்ரி | 11,22,843 | 11,17,342 | |
| | 21. கரிபோலி | 47,730 | 50,195 | |
| | 22. கொர்த்தா/கோட்டா | 47,25,927 | 80,38,735 | 0.66 |
| | 23. குல்வி | 1,70,770 | 1,96,295 | |
| | 24. குமௌனி | 20,03,783 | 20,81,057 | |
| | 25. குர்மாலிதார் | 4,25,927 | 3,11,175 | |
| | 26. லமானி லம்பாடி | 27,07,562 | 32,76,548 | |
| | 27. லரியா | 67,697 | 89,876 | |
| | 28. லோதி | 1,39,321 | 1,39,180 | |
| | 29. மகதி | 1,39,78,565 | 1,27,06,825 | 1.05 |
| | 30. மால்வி | 55,65,167 | 52,12,617 | 0.43 |
| | 31. மண்டேலி | 6,11,930 | 4,22,590 | |
| | 32. மார்வாரி | 79,36,183 | 78,31,749 | 0.65 |
| | 33. மேவாரி | 50,91,697 | 42,12,262 | 0.35 |
| | 34. மேவாத்தி | 6,45,291 | 8,56,643 | |
| | 35. நிமாடி | 21,48,146 | 23,09,265 | |
| | 36. நாக்பூரியா | 12,42,586 | 7,63,014 | |
| | 37. பகரி | 28,32,825 | 32,53,889 | |
| | 38. பஞ்ச்பர்கனியா | 1,93,769 | 6,44,914 | |
| | 39. பங்வலி | 16,285 | 18,668 | |
| | 40. பவரி/பொவர் | 4,25,745 | 3,25,772 | |

| வ. எண். | மொழியின் பெயர் (இந்திக்கு மட்டும் அதனுடன் இணைக்கப்பட்ட தாய்மொழிகள் விவரம் தரப்பட்டுள்ளது) | அவரவர் தாய்மொழி என்றும் தாங்கள் பேசும் மொழி என்றும் பதிவு செய்தோர் மற்றும் கணக்கெடுப்பு ஆண்டு | | 2011 கணக்குப்படி மொத்த மக்கள் தொகையில் அம்மொழி பேசுவோர் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | | 2001 | 2011 | |
| | 41. ராஜஸ்தானி | 1,83,55,613 | 2,58,06,344 | 2.13 |
| | 42. சடன்/சட்ரி | 20,44,776 | 43,45,677 | |
| | 43. சிமௌரி | 31,144 | 1,07,401 | |
| | 44. சோண்ட்வாரி | 59,221 | 2,29,788 | |
| | 45. சுகலி | 1,60,736 | 1,70,987 | |
| | 46. சுர்குஜியா | 14,58,533 | 17,38,256 | |
| | 47. சுர்ஜபுரி | 12,17,019 | 22,56,228 | |
| | மற்ற தாய்மொழிகள் | 1,47,77,266 | 1,67,11,170 | |
| 7. | கன்னடம் | 3,79,24,011 | 4,37,06,512 | 3.61 |
| 8. | காஷ்மீர் | 55,27,698 | 67,97,587 | 0.56 |
| 9. | கொங்கணி | 24,89,015 | 22,56,502 | 0.18 |
| 10. | மைதிலி | 1,21,79,122 | 1,35,83,464 | 1.12 |
| 11. | மலையாளம் | 3,30,66,392 | 3,48,38,819 | 2.88 |
| 12. | மணிப்புரி | 14,66,705 | 17,61,079 | 0.15 |
| 13. | மராத்தி | 7,19,36,894 | 8,30,26,680 | 6.86 |
| 14. | நேப்பாளி | 28,71,749 | 29,26,168 | 0.24 |
| 15. | ஒடியா | 3,30,17,446 | 3,75,21,324 | 3.10 |
| 16. | பஞ்சாபி | 2,91,02,477 | 3,31,24,726 | 2.74 |
| 17. | சமற்கிருதம் | 14,135 | 24,821 | 0.002 |
| 18. | சந்தாலி | 64,69,600 | 73,68,192 | 0.61 |
| 19. | சிந்தி 25,35,485 | 27,72,264 | 0.23 | |
| 20. | தமிழ் | 6,07,93,814 | 6,90,26,881 | 5.70 |
| 21. | தெலுங்கு | 7,40,02,856 | 8,11,27,740 | 6.70 |
| 22. | உருது | 5,15,36,111 | 5,07,72,631 | 4.19 |

ஏற்பட வேண்டும். மதத்துக்குரிய வழிபாட்டு மொழி என்கிற பெயரால், தாய்மொழி உரிமைப் பறிப்பு இருத்தல் கூடாது.

ஆங்கிலத்தைத் தாய்மொழியாகப் பதிவு செய்திருப்பவர் எண்ணிக்கை 2,59,678 ஆகும். இவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலோ-இந்தியர்; மற்றவர்கள் இந்திய மேட்டுக்குடியினருள் வீட்டில் ஆங்கிலம் பேசும் சிறுபகுதியினர்.

ஆனால் இந்திய அளவில் பள்ளிக்கல்வியில் 50 விழுக்காட்டிற்கு மேலும் உயர்கல்வியில் 80 விழுக்காடும், தொழிற்கல்வியில் 100 விழுக்காடும் ஆங்கில வழிக்கல்வி இருக்கிறது. இத்தகைய நிலை கல்வியில், பிற துறைகளில் தாய்மொழிகளின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட, பழங்குடி இன, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இது உள்ளது. பன்னாட்டு - உள்நாட்டு முதலாளிய நிறுவனங்களின் தொழில் மற்றும் சேவைப் பிரிவுகளில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்வதற்கான இளைஞர்களை உருவாக்குவதற்காகவே ஆங்கில வழிக் கல்வி முறை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி; ஆங்கிலம் இணை ஆட்சி மொழி என்கிற நிலையை மாற்ற வேண்டும். சமற்கிருதம் தவிர்த்த 21 மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகள் என்று ஆக்கப்பட வேண்டும். அந்நிலையில் மொழிவழி மாநிலங்களில் உள்ள நடுவண் அரசின் அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், முதலானவற்றில் அம்மாநில மொழியே அலுவல் மொழியாக இருத்தல் வேண்டும். இந்நிலையை எய்தும் போது, இந்தி படித்தால் இந்திய அளவில் வேலை கிடைக்கும் என்கின்ற எண்ணம் மறையும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உண்மையான கூட்டாட்சி கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும். பாதுகாப்பு, அயலுறவு, நாணயம் அச்சிடல் ஆகிய அதிகாரங்கள் தவிர்த்து, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மொழிவழி மாநிலங்களிடமே இருக்க வேண்டும்.

இந்தி, சமற்கிருத, ஆங்கில மொழி
ஆதிக்கத்தைத் தகர்ப்போம்!

மொழிவழித் தேசிய இனங்களின்
தன்னுரிமையை வென்றெடுப்போம்!

❖

# தில்லியில் பெரியார் 100ஆம் பிறந்தநாள், இடஒதுக்கீடு கோரிக்கைப் பேரணி நினைவு நிகழ்ச்சிகள் - கலசம் பங்கேற்பு

அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவையின் சார்பில் தலைவர் இராம் அவதேஷ் சிங், புரவலர் - தலைவர் வே.ஆனைமுத்து மற்றும் பல சமுதாய அமைப்புகளின் பொறுப்பாளர்கள் ஆகியோரின் பெருமுயற்சியில் **40 ஆண்டுகளுக்கு முன் தில்லியில் 1979 மார்ச்சு 23ஆம் நாள் "மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு கொடு"** என்னும் கோரிக்கை முழக்கத்தை ஒலித்தவாறு 35 ஆயிரம் பேர் கொண்ட மாபெரும் பேரணி பழைய தில்லி பெரோஷா கோட்லா திடலிலிருந்து புறப்பட்டு திலகர் பாலம், பெரோஷாசாலை, ஜன்பத் வழியாக புதுதில்லி போட்கிளப் திடலை அடைந்தது. அங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் லோகியாவின் 80ஆவது பிறந்தநாள் விழா, பெரியாரின் நூற்றாண்டுவிழா, இடஒதுக்கீடு பற்றிய **பெரியாரின் எழுத்தும் பேச்சும் அடங்கிய இந்தியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இந்தி நூலின் வெளியீட்டு விழா,** பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசில் இடஒதுக்கீடு கோரிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றன, அன்றைய அந்த நிகழ்வில் கலச.இராமலிங்கமும் கலந்துகொண்டார்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மாபெரும் நிகழ்வின் நினைவால் இன்று உந்தப்பட்டவராகி, இப்போது தில்லி சென்ற ஒடுக்கப்பட்டோர் பேரவையின் இன்றைய பொதுச் செயலாளராக உள்ள கலச.இராமலிங்கம், இப்போது அதே மார்ச்சு 23ஆம் நாள் 40 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அன்றைய பேரணிப் பாதையில் தில்லித் தோழர்களுடன் பயணித்து படம் எடுத்துக் கொண்டார். அப்போதைய பேரணியில் கலந்துகொண்ட தில்லிவாழ் தமிழர் புதேரிதானப்பன் இப்போதும் வந்து அதன் நினைவாக இந்தப் பயணத்திலும் கலந்துகொண்டு பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்தார்.**



நிற்பவர் இடமிருந்து : கலசம், புதேரிதானப்பன், டாக்டர் கிருஷ்ணகபீர், திருமதி. கபீர் அமர்ந்திருப்பவர் : திருமதி & திரு. ராம்அவதேஷ் சிங்




இடம்: திலகர் பாலம், நாள்: 23.3.2019
இடமிருந்து: கலசம், பா.இராமமூர்த்தி, இராசசேகரன், புதேரிதானப்பன்


இன்றைய தலைமுறையினர் வே.ஆனைமுத்துவின் பெரும் பணியை அறிதல் வேண்டி, இப்போது எடுத்துக் கொள்ளப்பட்ட நினைவுப் பயணப் படங்கள் இங்கே வெளியிடப்படுகின்றன.



இடம்: தியாகிகள் பூங்கா நாள்: 23.3.2019
இடமிருந்து : பா.இராமமூர்த்தி, கலசம், புதேரிதானப்பன், இராசசேகரன், லெனின் வினேபா




இடம்: ஜன்பட், நாள்: 23.3.2019
இடமிருந்து: புதேரிதானப்பன், கலசம், இராசசேகரன்



இடம்: போட்கிளப், நாள்: 23.3.2019
இடமிருந்து: பா.இராமமூர்த்தி, கலசம், புதேரிதானப்பன்

மேலும் இப்போது புதுதில்லியில் 23.4.2019 மாலை பெரியார் அம்பேத்கர் தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் உயர் சாதியினரில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான 10 விழுக்காடு இடஒதுக்கீடு பற்றிய அரசமைப்புச் சட்டத் திருத்தம் சமூகநீதிக்கு எதிரானது என்பதை தகுந்த காரணங்களுடன் விளக்கி கலசம் உரையாற்றினார்.

தில்லியில் செயல்படுகின்ற பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனத் தோழர்கள் பா.இராமமூர்த்தி, வழக்குரைஞர் லெனின் வினோபா், புதேரிதானப்பன், தாமஸ் எடிசன், வழக்குரைஞர் ச.முத்துக்கிருட்டிணன், இராசசேகரன், கிருட்டிணமூர்த்தி மற்றும் தோழர்களும், கரோல்பாக் அம்பிகா தங்கும் விடுதி உரிமையாளரும் தில்லியில் கலசம் பணிகளுக்கு உடனிருந்து ஒத்துழைப்பு நல்கினர்.

**அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் தலைவர் இராம் அவதேஷ் சிங் அவர்களை தில்லியில் புறநகர்ப் பகுதியில் அவருடைய இளையமகன் டாக்டர் கிருஷ்ணகபீர் இல்லத்தில் 21.3.2019ஆம் நாள் கலச.இராமலிங்கம் சந்தித்து நலம் உசாவினார்.**

செய்தி : **கலசம்**

# தமிழாய் நீ வாழ்வாய்!

இருண்டு போயினது இறுதிப் பக்கம்!
திரண்டது தமிழர் நெஞ்சினில் ஏக்கம்!

நெருப்புச் சொற்களால் பாடல்கள் யாத்தவன்!
எதிர்த்த பகைகளை எழுத்தினால் சாய்த்தவன்!

பெரியார் சிந்தனைப் படையில் நடந்தவன்!
அறியார் பழிச்சொல் ஆயிரம் கடந்தவன்!

தமிழ்நிலம் தமிழினம் தமிழ்மொழி உய்வுற
இமைமூ டாமல் இயங்கிய வினைமகன்!

வேதியம் மண்ணில் விளைத்த தீங்குகளை
மோதி அழிப்பதில் முனைமுகம் நின்றவன்!

தடம்மாறி நடந்த தமிழக இளைஞர்க்கு
விடைகளை நல்கி வெளிச்சம் தந்தவன்!

வாழ்வெலாம் மாணவர் மனங்களை உழுதவன்!
தாழ்வுணர்வு அகற்றிச் சமன்மையை விதைத்தவன்!

மொழி இன மானம் போற்றிய தலைமகன்!
பழி அணு காதவன்! பழுதிலாப் பார்வையன்!

**தமிழேந்தி எழுதாத் தாளும் கலங்கிடும்!**
**தமிழேந்தி ஏறாக் களமும் வறண்டிடும்!**

**தமிழ்ஏந்திக் களம் கண்ட தமிழேந்தி யே,நின்**
**தமிழ்உள்ளது எம்மோடு! தமிழாய் வாழ் வாய்நீ.**

- **இரணியன்,** கோவை

## பொது நிகழ்ச்சிகளில்
# சுசீலா ஆனைமுத்து

தந்தை பெரியார் அவர்கள் 1950 முதல் 1973 வரையில் திருச்சி பெரியார் மாளிகையில் குடியிருந்தார்.

நான் என் குடும்பத்துடன் 1957 முதல் 1982 வரையில் திருச்சியில் குடியிருந்தேன்.

அதனால் திருச்சியில் நடந்த தி.க. பொதுக் கூட்டங் கள், தேவர் மன்றத்தில் நடந்த தி.க. மாநாடுகள் ஆகிய வற்றில் ஆ. சுசீலா குழந்தைகளோடு பங்கேற்றார். அதனால் அவரும், என் குழந்தைகளும் சுயமரியாதைக் கொள்கையாளர்களாக உருவானார்கள்.

23.3.1979-இல் தில்லியில் பெரியார் நூற்றாண்டு விழா, லோகியா 80-ஆம் பிறந்த நாள் விழா மற்றும் பேரணியும் நடந்தன. அந்தப் பேரணியில் தமிழ்நாட்டுப் பெண்களும், அரியானா பெண்களும் கலந்து கொண்டனர்.

சுசீலா ஆனைமுத்து, து. தில்லைவனம் மகள் மலர் வாலண்டினா, கோவிராமலிங்கம் மற்றும் சில பெண்கள் 27 ஆயிரம் பேர் கொண்ட அந்தப் பேரணியில் 8 கி.மீ. தூரம் நடந்து வந்தனர். ஊர்வலத் தலைப்பில் தலைவர்கள் வரிசையில் பெரியார் பாவட்டா, அம்பேத்கர் பாவட்டா, லோகியா பாவட்டா, நாராயணகுரு பாவட்டா இவற்றை ஏந்தி வந்தனர். **“பெரியார் பாவட்டாவை சுசீலா ஆனைமுத்து ஒரு பக்கமும், திருச்சி இரா. கலியபெருமாள் ஒரு பக்கமும் ஏந்திக் கொண்டு வந்தனர். 8 கி.மீ. தூரம் “பெரியார் வாழ்க!” என்று முழக்கமிட்டுக் கொண்டு நடந்தே வந்தனர்.**

திருவனந்தபுரத்தில், “ஞானும் நீங்களும்” என்ற தலைப்பில் பெரியாருடைய பேச்சுகளையும் கட்டுரைகளையும் மலையாள மொழியில் பேரா சிரியர் கே.எம்.பிரபாக வாரியர் மொழிப்பெயர்த்து அச்சிட்ட நூலை 1982 வாக்கில் வெளியிட்டோம், திருச்சியிலிருந்து சுசீலா ஆனைமுத்து அவர்களும், இரா. கலியபெருமாள் அவர்களும் திருவனந்தபுரம் வந்தார்கள். அப்போது திருவனந்தபுரத்திலுள்ள பத்ம நாபசாமி கோயில் முழுவதையும் சுசீலாவுக்குச் சுற்றிக் காட்டினேன்.

தந்தை பெரியார் மறைவுக்குப் பிறகுதான், நான் குடும்பத்தோடு சென்னைக்கு 1982இல் குடியேறினேன். சென்னையில் முடிந்த வரை சுசீலா ஆனைமுத்து சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

**அவரிடம் சொல்லாமல் எந்த நிகழ்ச்சிக்கும் நான் சென்றதில்லை. நான் போக வேண்டிய நிகழ்ச்சி ஒரு திருமணம் என்றால் அதைக் குறிப்பாக நினைவு வைத்துக் கொண்டு, அதை எனக்கு நினை வூட்டுவார். அதில் அவர் பொறுப்பாக இருந்தார்.**

- **வே. ஆனைமுத்து**

# தொடர்பியல் பார்வையில் கார்ல்மார்க்சும் தந்தை பெரியாரும்

- பேராசிரியர் **கோ. இரவீந்திரன்** *தலைவர், இதழியல் & தொடர்பியல் துறை சென்னைப் பல்கலைக்கழகம்*

சமகால உலகமயமாக்கல் சூழலில் சிக்கித் திணறும் பல்வேறு நாடுகளில் வசிக்கும் வெகுமக்களின் எதிரிகளை அடையாளப்படுத்த, இனம் கண்டுகொள்ள, அவர்களைச் சமூக, பொருளாதார, சமய, பண்பாட்டுத் தாக்குதல்களிலிருந்து காக்கப் பெரியாரிய மற்றும் மார்க்சிய முன்னெடுப்புகள் அவசியம்.

எது மார்க்சியம்? எது பொதுவுடைமை? எது மார்க்சியப் பொதுவுடைமை? எது பெரியாரியப் பொதுவுடைமை? எது தமிழர்களின் பண்டைய மரபில் உதித்த பொதுவுடைமைக் கருத்தியல்? போன்ற கேள்விகளை நாம் இன்று எழுப்பும் வேளையில், கடந்த பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் விளைந்த சமமற்ற சமூக, சமய, பொருளாதாரச் சூழல்களில் எழுந்த அறிவார்ந்த எதிர்வினைகளுக்குச் சொந்தக்காரர்களான எண்ணிலடங்காப் பேரோசான்களில் இருவர்தான் கார்ல் மார்க்சும் தந்தை பெரியாரும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டால், சமமற்ற புனிதப்படுத்தலிலிருந்து இவர்களையும், இவர்களின் கருத்தியல்களையும் நாம் காப்பாற்றி, நமது அறிவார்ந்த, ஆனால் சார்புத் தன்மையிலிருந்து விடுதலை பெறாத நிலைகளிலிருந்தும், நாம் நம்மையும், நாம் எந்த வெகுமக்களின் சமூக, பொருளாதார, சமய, பண்பாட்டு விடுதலையைப் பற்றிச் சிந்திக்கிறோமோ அவர்களையும் கடையேற்றம் செய்ய இயலும்.

இல்லையேல், காலத்தால் முந்திய நிலையில், 2600 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய சமூகப் போராளிகளில் முக்கிய மானவரான புத்தரை அவரது சீடர்கள் புனிதப்படுத்தி, அவரது கருத்தியல் எதிரிகள் விரும்பிய நிலையில், அவரைக் கடவுளாக்கம் செய்து, அவரைச் சமூகச் சீர்திருத்தவாதி என்ற நிலையிலிருந்து தள்ளியதுபோல், திருவள்ளுவரைப் பொதுவுடைமை ஆசானாகப் பார்க்காமல், மார்க்சின் - பெரியாரின் முன்னோடியாகப் பார்க்காமல், பெரியார் விமர்சித்த இலக்காகவும், மார்க்ஸ் மட்டும்தான் பொதுவுடைமைக் கருத்தியலின் தந்தை என்று பார்ப்பதும் புனிதப்படுத்தி வளர்த்தெடுக்கப்படும் வைதீக மரபுக்குச் சற்றும் மாறுபட்டதல்ல. 19ஆம் நூற்றாண்டில் தோன்றி, தமது முன்னோர்கள் சொல்லிச் சென்றதை, அடுத்த தலைமுறைகள் மறந்த கருத்தியல்களை, அழுத்தமாகவும், புதிய கருத்தியல் நீரோட்டங்களாகவும் அவற்றை உருவாக்கித் தந்தவர்தான் பெரியார் என்பதை உணர்தல் அவசியம்.

மகாவீரர், புத்தர், மக்கலி கோசலர் ஆகிய மூவர் கட்டமைத்த பொதுவுடைமைத் தளங்கள்தான் அன்றைய சமணம், பௌத்தம் மற்றும் ஆசீவகம். வேதங்களில் விளைந்த ஏற்றத்தாழ்வுகளின் பொதுவுடைமைக் கருத்தியல் எதிரிகள் இவை. அதனால்தான், இந்த எதிர்வினைகள் நமது மண்ணில், எந்த வெகுமக்களின் நலனுக்காக இவை தோற்றுவிக்கப்பட்டனவோ அதே மண்ணில், அதே மக்களால் அழித்தொழிக்கப்பட்டன, மறக்கப்பட்டன அல்லது வைதீகமாகி, புனிதமாகி, பொதுவுடைமைக்கு எதிரான தளங்களாகி மாறிப் போயின. சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகியவை சமயத் தளங்கள் மட்டும் அன்று. சங்க இலக்கியங்களும், தமிழ்ச் சித்தர்களின் இலக்கியக் கொடைகளும் இலக்கியங்கள் மட்டுமன்று. அவை ஆதிப் பொதுவுடைமைத் தளங்கள். மிகவும் காத்திரமான ஆதி வெகு மக்கள் தொடர்பியல் தளங்கள். இந்த ஆதிப் பொதுவுடைமைத் தளங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தொடர்பியல் சூழல்கள் நமக்கு இன்று பல படிப்பினைகளை உணர்த்தும் பாங்கு வியப்புக்குரியது. நாம் அவற்றைச் சரியாக அணுகினால் குறிப்பாக, இந்தியத் துணைக்கண்டம் முழுக்க வியாபித்திருந்த இந்தச் சமய / பொதுவுடைமைத் தளங்கள், தங்களின் வீழ்ச்சியைக் காணும் வரை சந்தித்த சில ஆயிரமாண்டுகள், பல நூற்றாண்டுகள் சார்ந்த வரலாறைத் தொடர்பியல் வரலாறாக, சமூகத் தொடர்பியல் வரலாறாக, இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுவுடைமை மரபின் வரலாறாக நாம் ஆய்ந்து தெளிதல் வேண்டும்.

உதாரணமாக, சங்க இலக்கியத் தளங்களை வெறும் இலக்கியத் தளங்களாக அணுகாமல், அன்றையத் தமிழர்களின் பொதுவுடைமைக் கருத்தியல் கொடைகளாகப் பார்க்கப் பழக வேண்டும். நமக்குத் தமிழ் ஆசிரியர்கள் சிலாகித்துக் கற்பித்த,

> "யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
> யானும் நீயும் எவ்வழி அறிதும்?
> செம்புலப் பெயல் நீர் போல,
> அன்பு உடை நெஞ்சம்தாம் கலந்தனவே"

என்று இயம்பும் குறுந்தொகையின் 40ஆவது பாடல், அதி அற்புதமான பொதுவுடைமைக் கருத்தியலைத் தன்னகத்தே கொண்டுள்ளதை நாம் மாற்றுப் பார்வையில், மாற்றத்திற்கான பார்வையில் பார்த்தால்தான் தெரியும். இப்பாடலில், அனைத்து சமமற்ற சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளையும் அழித்தொழிக்கும் நிலையிலிருக்கும் இயற்கைச் சூழலில் பொதுவுடைமைக் கருத்தியல் காதலால் தோற்றுவிக்கப்பட்டது உண்மையான பெயர் தெரியாத சங்க கால அறிஞரால்.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்தியலில் விளைந்த சுயமரியாதை மணங்கள் சார்ந்த மனங்களின் இணைவு "செம்புலப் பெயல் நீரின்" தன்மையைப் போற்றும் பொதுவுடைமைக் கருத்தியல் என்பதில் அய்யமில்லை. இங்குப் பொதுவுடைமை பற்றிய தப்பிதமானப் புரிதல்களிருந்தும் நாம் தப்பிக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம்.

பெரியாரின் பொதுவுடைமைக் கருத்தியல் நம் மண்ணில் தோன்றிய எண்ணிலடங்காச் சமூகப் பொதுவுடைமைக் கருத்தியல்களின் வெளிப்பாடு. 19ஆம் நூற்றாண்டின் தொடக் கக் காலத்தில் பிறந்து, பெரியார் பிறப்பதற்கு முன் மறைந்த தமிழ்ச் சித்தர் மரபில் கடைசியாகத் தோன்றிய ஆகச்சிறந்த தத்துவஞானி, சமூகச் சீர்திருத்தவாதி இராமலிங்க வள்ளலார் (5.10.1823-30.1.1874). இவரும் பெரியாரின் கருத்தியலுக் கான வித்தை விதைத்தவர். பெரியார் காங்கிரஸ் இயக்கத்தி லிருந்து வெளியேறி, சுயமரியாதை இயக்கத்தைக் கட்டமைத்த வேளையில், அவர் முதலில் கையகப்படுத்த நினைத்த தொடர்பியல் தளம் 'குடிஅரசு' இதழ். அதன் முதல் நாள் பிரதியில், முதல் பக்கத்தில் அரங்கேறிய பொன்மொழி "சாதி இராமல் ஒழிக என்றார் இராமலிங்க அடியார்". ('ஆடும் பருவத்திலேயே எனை ஆட்கொண்ட பெரியார்', கோபாலன், 2013, பக்.8).

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே

இந்தப் புரட்சி கருத்துக்குச் சொந்தக்காரர் இராமலிங்க அடிகள். "சாதிகள் ஒழிய வேண்டும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற சனாதன தருமம் ஒழிய வேண்டும்" என்று போராடிவந்த பெரியார் தம்முடைய 'குடிஅரசு' இதழில் வள்ளல் பெருமான் இராமலிங்கனாரின் புரட்சிக் கருத்துக்கு முதலிடம் தந்தார் (மேற்படி நூல், ப.9).

சித்தர்கள் அன்றைய சமூக சீர்திருத்தவாதிகள். அதனால் தான், புத்தரை அவரது சீடர்கள் புனிதப்படுத்தியது போல, வைதீகம் போட்டத் திட்டப்படி, சித்தர்களைச் சித்திகளுக்குச் சொந்தக்காரர்கள், சித்த மருத்துவத் தளத்தை வளர்த்தெடுத்த வர்கள் என்ற குறுகிய பார்வையில் மட்டும் பார்த்தோம்; அவர்களின் சமூகச் சீர்திருத்த மற்றும் பொதுவுடைமைக் கருத்துகளைச் செவிமடுக்க மறந்தோம். பெரியார் தம் கருத்தியல் தளத்தின் ஆணிவேராக நிலைநிறுத்திய சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, கடவுள் மறுப்பு போன்றவை தமிழ்ச் சித்தர்கள் பல நூறாண்டுகளாகக் கட்டமைத்த மரபில் தோன்றியது.

ஆனால், மார்க்சியப் பொதுவுடைமை வாதம், வரலாற்று ரீதியாக எழக்கூடிய மூலதனம் சார்ந்த வர்க்கப் போராட்ட வரலாற்றை மையப்படுத்துவது. அதன் ஆணிவேர் நூற் றாண்டுகளாகக் கடந்த கருத்தியல் தளங்களில் உதயமாக வில்லை எனலாம். மார்க்சின் கருத்தியல் அவரது காலத்தில் சந்தித்த தொழிற்சாலைகள் சார்ந்து இயங்கிய உழைப்பாளி களின் உழைப்பு மூலதனவாதிகளுக்கு எவ்வாறு மடை மாற்றம் செய்யப்படுகிறது என்பதைப் பற்றியது. உழைப் பாளியைச் சுரண்டும் மூலதனப் பெருக்கங்களை எவ்வாறு வரலாற்றுப் பொருள் முதல்வாதப் பார்வையில் அணுகலாம் என்று சொன்னதன் ஆணிவேர் அய்ரோப்பாவின் ஆதிக் கருத்தியல் தளங்களில் இல்லை எனலாம்.

மேலும், மார்க்சின் பார்வையில் பொதுவுடைமை பொருளாதாரப் பொதுவுடைமையை மட்டும் குறிப்பதாகிறது. இக்கருத்தியலில் குறைப்பாட்டைக் கண்டவர்களில் முக்கியமான வர்கள், புதிய மார்க்சியவாதிகள் என்றழைக்கப்பட்ட பிராங்பர்ட் அறிஞர்கள். முக்கியமாக, ஹார்கைமர் மற்றும் அடர்னோ. இவர்கள் களைய விரும்பியது, பண்பாட்டுத் தொழிற்சாலை களை. ஏனென்றால், பண்பாட்டுத் தொழிற்சாலைகள், பொரு ளாதாரப் பார்வையில் இயங்கினாலும், பண்பாட்டை மூலதன மாக மடைமாற்றம் செய்யும் காரணத்தினால் எவ்வாறு வெகுமக்களை ஏமாற்றுகின்றன; சமமற்ற நிலைகளில் வைத்திருக்க உதவுகின்றன என்பதைப் புதிய மார்க்சியப் பார்வையில் இவர்கள் ஆய்ந்த காரணத்தினால் விளைந்த கருத்தாக்கம்தான் "பண்பாட்டுத் தொழிற்சாலை". தொழிற் சாலைகள், அவற்றின் உற்பத்தித் தளங்கள், மூலதனம், உழைப்பு, மதிப்பு, உபரி மதிப்பு, ஏனைய பிற செவ்வியல் மார்க்சியக் காரணிகளின் துணைகொண்டு எவ்வாறு மார்க்சின் செவ்வியல் பொருளாதாரப் பொதுவுடைமைத் தளத்தைக் குறைபாடு உள்ள கருத்தியல் தளமாக வைத்திருக்கின்றன என்று நமக்குப் புரிய வைத்த கருத்தாக்கம் இது.

நமது மண்ணில் இயங்கிய புதிய மார்க்சிய வாதிகளில் முதன்மையானவர் தந்தை பெரியார். பொதுவுடைமைக் கருத்தியல், மார்க்சியத் தளத்திலிருந்து வெளியே வந்து, இந்திய மண்ணுக்குச் சொந்தமான சாதியக் காரணிகளை மையப்படுத்தி இயங்காதவரை உண்மையான பொதுவு டைமை சாத்தியமில்லை என்று சூளுரைத்தவர் பெரியார். அவரது கருத்தியல் மார்க்சியத்தை விஞ்சியது. ஏனென்றால், ஆதிப் பொதுவுடைமை மரபுகளான சமணம், பௌத்தம் மற்றும் ஆசீவகச் சமய மரபுகளிலும், சங்ககாலத் தமிழர்களின் பொதுவுடைமைக் கொள்கைகளிலும் தனது கருத்தியல் வேர் களை நிலைநிறுத்திக் கொண்டது பெரியாரியம். அதனால் தான் "ஆம்! ஆம்! பொதுவுடைமைப் பிரச்சாரம் நிறுத்திக் கொண்டேன்..." என்று பெரியார் முழங்கினார். அதற்குக் காரணம், அவர் பொதுவுடைமைத் தோழர்களை வெறுக்கவில்லை. பொதுவுடைமை இயக்கத்தை ஆதரிப்பதால், சுயமரியாதை இயக்கத்திற்கு அரசாங்கத்திடம் இருந்து வரக்கூடிய நெருக்கடி களுக்கு அஞ்சி அங்ஙனம் பேசவில்லை. சுயமரியாதை இயக்கத்தை வளர்த்தெடுப்பது நெருக்கடி மிகுந்த காலகட் டத்தில் மிக முக்கியமானதாக அவரால் பார்க்கப்பட்டதன் காரணம்தான் அவரை 21.3.1936 அன்று திருத்துறைப்பூண்டி சுயமரியாதை மாநாட்டில் மேற்குறிப்பிட்ட தலைப்பில் பேச வைத்தது.

"மாமிசம் சாப்பிடுவதனால் எலும்பைக் கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டுமா? என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல் நமது சமதர்மமும், பொதுவுடைமையும் போலிப் புலி வேஷம் போல் விளம்பரத்தில் காட்டுவதில் பயனில்லை. சர்க்கார் உத்தரவை மீறுவதே சமதர்மமாகிவிடாது. உத்தரவு மீறினவர்களின் கதியை நாம் பார்த்துவிட்டோம். ஆரம்பத்தில்

மேல்சாதி - கீழ்ச்சாதி கூடாதென்று சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தோம். அதற்கு அனுகூலமாகவே ஏழை பணக்காரத் தன்மை கூடாதென்றோம். அதைத்தான் நாம் சமதர்மம், பொதுவுடைமை என்றோம். சர்க்கார் பொதுவுடைமை கூடா தென்றால் விட்டுவிட்டு மேல்சாதி - கீழ்ச்சாதி கூடாதென்கிற வேலை செய்வதில் என்ன தடை இருக்கிறது. மற்றும் மூடப் பழக்கம் ஒழித்தல், மதத் தொல்லை ஒழித்தல் முதலிய காரியங்கள் செய்வதற்கு மார்க்சும் இல்லாமல் போகவில்லை'' (பெரியார் ஈ.வெரா. சிந்தனைகள்', வே. ஆனைமுத்து, 2009, ப.1185-1194).

அவர் விரும்பிய, தேடிய பொதுவுடைமை அன்றும், இன்றும் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தினரால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருப்பதுதான் இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகள், இரண்டு மூன்று மாநில மக்களைத் தவிர, பெரும் பான்மை மக்களிடம் சென்றடையாமல் இருப்பதற்குக் காரணம் எனலாம். அவர் விரும்பிய பொதுவுடைமை புத்தர் மையப் படுத்திய கடவுளற்ற, ஆன்மாவை மையப்படுத்தாத, மூடநம்பிக் கைகளற்ற, ஏற்றத்தாழ்வற்ற மனிதநேயம் சார்ந்து இயங்கும் தளம். அது வெற்றுப் பொருளாதாரத் தளம் மட்டும் அன்று.

அவர் விரும்பிய பொதுவுடைமைத் தளத்தில் இயங்கும் உழைப்பாளிகள் வர்ணாசிரம முறைப்படி இயங்கும் சாதியத் தொழிற்பாடுகளுக்குத் தங்களைப் பறிகொடுத்த மனிதர்கள், தொழிற்சாலைகளில் இயங்கும் உழைப்பாளிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டது கார்ல்மார்க்சின் பொதுவுடை மைக் கருத்தியல். மார்க்சிய வரையறையில் ''யார் தொழிலாளி?'' என்ற கேள்விக்கான விடையை பெரியார் இந்தியச் சாதியச் சூழலுக்குப் பொருந்தாத வரையறையாகப் பார்த்தார்.

''எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவே தான். நாங்களும் தொழிலாளிகள்தாம். ஆகவே, வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளல்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தாம் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் உண்மைத் தொழி லாளிகளில் 1000-த்தில் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்'' (மேற்படி நூல், ப.948) என்ற புரட்சிகரமான வரையறையை வகுத்தார்.

கார்ல்மார்க்சு, அவர் படித்த பல்கலைக்கழகங்களின் அறிவுத் தளத்திலும், அவர் வசித்த நாடுகளின் சூழல்களில் தொழிற் புரட்சி மற்றும் பிரெஞ்சுப் புரட்சி ஏற்படுத்திய தாக்கத்தினாலும் விளைந்தவர். தொழிற்புரட்சி மூலதனம், உழைப்பாளி, சந்தை, மதிப்பு, உபரிமதிப்பு சார்ந்து இயங்கும் உற்பத்தித் தளங்களை வெகுவாக உருவாக்கிய காலகட்டத்தில் தோன்றியவர் கார்ல் மார்க்சு. ஹெகலியத் தத்துவ மரபின் மாணவர் என்பதால், அவரால் இயங்கியல் பார்வையில் இந்த உற்பத்தித் தளங்கள் எவ்வாறு வரலாற்றுப் பொருள் முதல்வாதக் காரணிகளுக்குத் தீனிபோடுகின்றன என்பதை அதி அற்புதமான கருத்தியல் களமாக வார்த்தெடுக்கிறார். அவரது காலத்திலும் அதன் பிறகும் அய்ரோப்பாவில் பொதுவுடைமை இயக்கங்கள் பல்கிப்பெருக ஆரம்பிக்கின்றன. லெனினது வரவால் முதலும் கடைசியுமான பொதுவுடைமைப் புரட்சி அன்றைய சார் மன்னராட்சியை ஒழித்து, சோவியத் ஒன்றியம் என்ற மக்கள் மாமன்றத்தால் நடத்தப்பட்ட ஆட்சி அரங்கேறுகிறது. வெகுவிரைவில், அதே மண்ணில், லெனினின் மறைவுக்குப் பிறகு, தலைக்கீழ் மாற்றங்கள் ஸ்டாலினின் சர்வாதிகாரப் போக்கினாலும், அதன் பின் வந்த தலைவர்களாலும் அரங்கேறுகின்றன. முடிவில், 1989-இல் சோவியத் ஒன்றியம் பல நாடுகளாக உடைந்து சிதறும் வேளையில், கார்ல் மார்க்சின் சிலைகள் உடைக்கப் படவில்லை. லெனினின் சிலை உடைக்கப்படுகிறது. காரணம், மார்க்சை ஒப்பிடும் பொழுது லெனின் தவறானவர் என்றல்ல. இருவரும் பொருளாதார வாதத்தைமட்டுமே நம்பிய பொது வுடைமையை நம்பினார்கள்; முன்னிறுத்தினார்கள். லெனின் அதன் செயற்முறை வடிவத்தின் வெற்றிகரமான சிற்பி என்பதால் அவரது சிலைகள் அவரது கருத்தியல் எதிரிகளின் கோபத்தை எதிர்கொண்டன.

இன்றும், அன்றும் பெரியார் அவரது கருத்தியல் எதிரி களுக்குச் சிம்ம சொப்பனம். ஏனெனில், மார்க்சுடன் ஒப்பிடும் போது அவர் மார்க்சை விஞ்சிய தொடர்பியலாளர், அனைத்துத் தட்டு மக்களையும் தனது இடைவிடாத சுற்றுப்பயணங்கள், சொற்பொழிவுகள், போராட்டங்கள், செய்திக் கட்டுரைகள், தலையங்கங்கள், கடிதங்கள் மூலமாக, தனது பொருளாதாரம் மட்டும் பேசாத பொதுவுடைமைக் கருத்தியலால் கவர்ந்தார். கோபம் கொள்ளச் செய்தார். புத்தர், மகாவீரர், மக்கலி கோசலர், வள்ளுவர், வள்ளலார் விட்டுச் சென்ற சமூகப் பொதுவுடைமை மரபை வளர்த்தெடுத்தார். அவர்களைப்போல், வெகுமக்கள் விரும்பியதை, செய்ததை, நம்பியதை மாற்றுப் பார்வையில் பார்த்தார். தான் பார்த்து, தெளிந்து அறிந்ததை, அவர்களும் பகுத்தறிவு கொண்டு அறிந்து, தெளியப் பரப்புரைகள் செய்தார். பரப்புரைகளைச் செய்தது மட்டுமன்றி, தனது சமூகச் சூழலில், தான் வாழ்ந்த காலத்தில் சுயமரியாதை, திராவிடம், இன-மொழி உணர்வு, பகுத்தறிவு, பெண் விடுதலை, கடவுள் மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பல தளங்களைச் சார்ந்து தனது கருத்தியல்களை வளர்த்தெடுத்து அவற்றின்பால் உணர்வு கலந்த அறிவுத் தெளிவை வெகுமக்கள் மனங்களில் விதைத்தார்.

கார்ல் மார்க்சின் கருத்தியல் வட்டம் பெரியது, அறிவார்ந்தது, ஆகச்சிறந்தது. இன்றளவும் மூலதனவாதிகளிடம் சிக்கித் தவிக்கும் கடைத்தட்டு மக்களின் விடுதலைக்கான சாளரங் களைப் பற்றிச் சிந்திக்க வைக்கும் 'பொதுவுடைமைக் கருத்தியல் சூரியன்' மார்க்சு எனலாம். ஆனால், நமது நாட்டிற்கு இந்தக் கருத்தியல் சூரியன் குறைபாடுள்ள கதிரவனாக மட்டுமே இயங்க முடியும் என்று தீர்க்கமாக நம்பியவர் பெரியார். அதனால்தான், அவர் செயலாக்கம் தர விரும்பிய விடுதலைத் தளங்கள், பொருளாதாரப் பொதுவுடைமையை நம்பி இருக்க வில்லை. அவரது எழுத்துசார் எழுச்சிகளும், பேச்சுசார் கிளர்ச்சி களும் நம் மண்ணின் ஆதிப்பொதுவுடைமைவாதிகள் வளர்த் தெடுத்த சமூகப் பொதுவுடைமைத் தொடர்பியல் முறைமை

களை வளப்படுத்தி, அவரது காலச்சூழலின் சமூகச் சிக்கல் களுக்கு ஏற்ப அவற்றைச் சுயமரியாதை, திராவிடம், இன-மொழி உணர்வு, பகுத்தறிவு, பெண் விடுதலை, கடவுள் மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு சார்ந்து செம்மைப்படுத்தி, வெகுமக்களை அவர்தான் பெரியார், அவர் மட்டும்தான் பெரியார் என்று ஏற்றுக்கொள்ள வைத்தது.

அவரது கொள்கைகளை ஏற்காதவர்கள் கூட, அவரை ஏற்றுக்கொண்டனர். அவர் நேர்மையாளர், பண்பாளர், அறிவாளி, மக்கள் நலன் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்குபவர் என்று கருதினர். எனது தந்தை, பள்ளி மாண வனாக இருக்கும் பருவத்திலேயே பெரியாரியக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு அவரது தொண்டனாகச் செயல்பட்டு இறுதிக் காலத்தில் அவரது அனுபவங்களைத் தொகுத்து "ஆடும் பருவத்திலே எனை ஆட்கொண்ட பெரியார்" என்ற நூலை எழுதியவர். இந்நூலில் "ஆர்.எஸ்.எஸ்.சில் இயங்கிய அவரது தாய்மாமன் துளசிங்கம் என்பவர் என் தந்தையார் திராவிட கழகத்தில் பணியாற்றுவதை விரும்பவில்லை. தடுக்க நினைத்தார்" என்று பதிவு செய்கிறார். தனது தந்தையிடம் பல அச்சுறுத்தல்கள் தரும் தகவல்களை அவர் சொன்ன போதும், எனது தாத்தா ஆர்.எஸ்.எஸ்.சில் பணியாற்றிய நபரிடம், "பெரியார் வயதில் மூத்தவர்; யாதொரு தீய பழக்கமும் இல்லாதவர்; பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; பல தலைவர் களால் மதிக்கப் பெறுபவர். அப்படிப்பட்டவரோடு அவன் பழகுவதை நான் பெரிய பேறாகக் கருதுகிறேன்" என்று கூறியது அவரைப் போன்ற எண்ணிலடங்காத் தமிழ்ப் பெரியோர் ஏற்றுக்கொண்ட தீர்மானமானக் கருத்து எனலாம்.

பெரியாரது தொடர்பியல் வெற்றிகள் ஏராளம். அவற்றின் ஒரு அடையாளம்தான் இது. ஜேம்ஸ் காரி என்ற தொடர்பியல் அறிஞர் தொடர்பியல் முறைமைகளை இரு தன்மைகளால் வகைப்படுத்துவார். ஒன்று, பரப்புரை செய்வது, ஊடகங்கள் செய்ய விழைவது. மற்றொன்று, பரப்புரையின் உள்ளடக்கத்தைப் பார்வையாளன் / வாசிப்பவன் மையப்படுத்தாமல், தனது சூழலில் தன்னையும், தன்னை வந்து சேர்ந்த தகவலையும் பொருத்திப் பார்த்து தனக்கும், தனது சூழலுக்கிடையேயான உறவையும் உணர்தல், அறிதல், தெளிதல் ஆகும். பெரி யாரின் தொடர்பியல் வெற்றிகளுக்கான காரணிகள் அவரது கருத்தியல் வளங்களில் இருந்தாலும், அவரது பரப்புரைகளின் உள்ளடக்க முறைமைகளில் இருந்தாலும், அவற்றின் முக்கிய மான காரணி ஜேம்ஸ் காரி சுட்டிக்காட்டிய இரண்டாவது தொடர்பியல் தன்மையான 'சடங்கு'ப் பார்வையைக் கட்ட மைப்பதில் இருக்கிறது எனலாம். இங்கு 'சடங்கு'ப் பார்வை என்பது தட்டையான பொருளில் அடையாளப்படுத்தும் மூட / சமய நம்பிக்கைகள் சார்ந்த பார்வை அன்று. சூழலில் நம்மை எவ்வாறு தகவமைத்துக் கொள்கிறோம் என்பது பற்றியது. ஒற்றுமை உணர்வுடன், பங்களிப்பையும், பகிர்த லையும், கருத்தியல் நிலைப்பாடுடன், நமக்கு வந்துசேரும் தகவல் களை வைத்து எவ்வாறு கையகப்படுத்துகிறோம் என்பதாகும்.

கார்ல் மார்க்சின் தொடர்பியல் தளங்கள் நான்கு வகைப் படும். முதல் மூன்றும் அச்சுப் பண்பாட்டில் விளைந்தவை. அவை அவரது புனைவு எழுத்தாக்கங்கள், அவரது உயர் கல்விசார் அணுகுமுறைகளால் விளைந்த முனைவர் பட்ட ஆய்வேட்டிற்கான எழுத்தாக்கங்கள் மற்றும் அவரது இதழியல் எழுத்தாக்கங்களால் விளைந்த கட்டுரைகள். 1930-களின் இடைப்பகுதியில் சிறு புதினங்களை எழுதத் தொடங்கி, பின் னாளில் பல்கலைக்கழக வேலைக்காக முனைவர் பட்ட ஆய்வில் ஈடுபட்டு, பின் அவரது புரட்சிகரமான சிந்தனைகளால், அத் தகைய வேலை வாய்ப்புகள் சாத்தியமில்லை என்றுணர்ந்து, இதழியல் தளம் பக்கம் திரும்பிய வேளையில், மார்க்ஸ் 'ரைன்லண்ட் நியூஸ்', 'ஜெர்மன்-பிரெஞ்சு அனல்ஸ்', 'நியூயார்க் டெய்லி டிரிபூயூன்' மற்றும் 'நியூயார்க் சன்' செய்தித்தாள்களில் 1842 முதல் 1862 வரை பலல நாடுகள் / நகரங்களை விட்டுத் தொடர்ந்து வெளியேற்றப்பட்ட / துரத்தப்பட்ட நிலைகளிலும் பணியாற்றினார்.

மார்க்சின் சொற்பொழிவுகள் நான்காம் வகை. அவரது 27 சொற்பொழிவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை எட்டு ஆண்டுக்கால அளவில் (1864-1871) நிகழ்த்தப்பட்டவை. அவரது இரண்டாவது வகை எழுத்தாக்கங்கள், அவரது ஜெனா பல்கலைக்கழகத்திற்கான முனைவர் பட்ட ஆய்வேட்டில் தொடங்கி அவரது கருத்தியல் தளங்களை ஆலமரமாக வளர்த்தெடுத்தன. 'மூலதனம்', 'கம்யூனிச அறிக்கை' மற்றும் 'செர்மனியக் கருத்தியல்' அவரது அதிமுக்கியமான இரண்டாம் வகை எழுத்தாக்கங்கள். இவற்றில்தான் மார்க்சியம் என இன்றைய தலைமுறையும் சிலாகித்துக் கொண்டாடும் கருத்தியல் அண்டம் தோன்றியது.

கார்ல் மார்க்சு பிறந்து 200 ஆண்டுகளாகியும் அவர் உயிர்ப்புடன் நம்முடன் உலாவுகிறார், கடைத்தட்டு மக்களின் பொருளாதார விடுதலைக்காக நம்மைக் கருத்தியல் மற்றும் போராட்டக் குரல் எழுப்பச் செய்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவரது இரண்டாம் வகை எழுத்தாக்கங்கள்தான்.

தந்தை பெரியார் இந்தியாவில் / தமிழகத்தில் தோன்றிய காரணத்தினால், ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகளை நிகழ்த்தி தான் பேச்சுவழித் தொடர்பியல் பண்பாட்டு மாந்தர் என்று அடையாளப்படுத்திக் கொண்டார். அதேவேளையில், அச்சு ஊடகங்கள் சார்ந்து வெகுவாக இயங்கினார். 'குடிஅரசு' மற்றும் 'விடுதலை' அவரது இதழியல் திறன்களினால் வளம் பெற்றன. நேரிடையான, இயங்கியல் பார்வையில் தோற்று விக்கப்பட்ட வாதப்போர் தொடர்பியல் முறைமை தமிழகத்தின் சமணம், பௌத்தம், ஆசீவகம், வைதீகம், சாங்கியம், வைசோடிக சமயத்தினரிடம் மூண்ட சமய அரசியல் தொடர்பியல் சூழல் களில் வளர்த்தெடுக்கப்பட்டது.

தமிழர்களின் ஆதி இயங்கியல் தொடர்பியல் மரபைப் பற்றி அறிய வேண்டுவோர், 'நீலகேசி' (1936/1984) எவ்வாறு தனது சமயத் தத்துவத்திற்கு எதிரானவர்களை இயங்கியல் தொடர்பியல் பார்வையில் எதிர்கொண்டு வீழ்த்தினாள் என்பதைப் படிக்க வேண்டும். தமிழர்களின் ஆதித் தொடர்பியல் மற்றும் பேச்சுவழிப் பண்பாட்டு மரபுகளுக்குச் சொந்தமான இந்த முறைமை, பெரியாரால் தனது பேச்சு, எழுத்து மற்றும் போராட்டத்

தொடர்பியல் தளங்களுக்கு அச்சாணியாக மாற்றப்பட்டது. போராட்டங்களும், கிளர்ச்சிகளும் தொடர்பியல் தளங்களாகப் பெரியாரால் வளர்த்தெடுக்கப்பட்டன.

பெரியாரின் எழுத்துசார் போராட்ட வடிவம் அவரது பேச்சு வழி வாத முறைமைக்குச் சொந்தம். மக்களுடன் தனது சொற்பொழிவுகளில் பேசியது போலவே அவர் எழுதினார். முக்கியமாக, தனது கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்ல விழையும்போது, அவர் பேசியது போலவே எழுதினார் என்று சொல்லலாம். உதாரணமாக, "... நமது தொண்டில் இதைத் தவிர வேறு இரகசியம் ஒன்றுமில்லை. ஆதலால், இவற்றிற்கு எதிராக உள்ளவர்கள் எம்முறையிலாவது நம்மோடு போராடட்டும். அதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால், சூழ்ச்சி முறை மாத்திரம் வேண்டாம் என்கிறோம். அதாவது, பவுத்த சமயத்தை அழிக்க, சிலர் பவுத்த மதத்தி லேயே சேர்ந்து துரோகம் செய்தது போல், நம்முடன் கூட இருப்பவர்கள் போல் காட்டிக் கொண்டும் நம்மையே சதா புகழ்ந்து கொண்டும் வேறுவிதமாக அயோக்கியதனமாக யாரும் நடக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்கிறோம். நாம் எழுதுவதற்கோ, பேசுவதற்கோ யோக்கியமாகச் சமாதானம் சொல்லத் தயாராகவே இருக்கின்றோம்" ('பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்', வே. ஆனைமுத்து, ப.4313).

இந்திய இதழியலின் எழுத்துத் தன்மை, அதன் போராட்ட குணம், மக்களுக்கான குரலாக அந்த எழுத்துத் தன்மை வெகுவாக மாறியது. நெருக்கடி காலகட்டத்திலும் அதற்குப் பிந்தையக் காலகட்டத்திலும் என்று நான் சொல்வதுண்டு. காரணம், அருண்சோரி என்ற பொருளாதாரம் படித்த, இதழியல் எழுத்துக்குச் சற்றும் பரிச்சயம் இல்லாத 'வெளி நபர்', இந்திய இதழியலின் போராட்ட வடிவமாக அதன் எழுத்துசார் அணுகு முறைகளைத் தலைக்கீழாக மாற்றினார், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித்தாளின் ஆசிரியராக அவர் பணியாற்றிய காலத்தில். எப்படியெனில், அதுவரை தலையைச் சற்றிச் சுற்றி, வலம் வந்து இலக்கை அடைந்த வண்டுபோல் அல்லாமல், நேரிடை யாக இலக்கை எட்டிய வண்டைப் போல் அருண் சோரி எழுதி னார். இதற்குக் காரணம், அவருக்கு வாய்த்த முதலாளியும் (ராம்நாத் கோயங்கா), அவருக்கு பிடித்த தாக்குதல் இலக்கும் (இந்திரா காந்தி). பெரியாரின் எழுத்தாக்கங்களை ஆய்வு செய்யும் போது புலப்படுவது, அருண்சோரி பிறப்பதற்கு இருபது வருடங்களுக்கு முன்பே, 1920-களிலேயே, அருண்சோரி கனவிலும் கண்டிராத, செய்யாத, செய்ய இயலாத இதழியல் எழுத்துத் தாக்குதல்களைப் பெரியார் கையாண்டார் என்ற உண்மையாகும்.

பெரியாரின் உடலும், ஆடையும் அவற்றை அவர் பேண மறுத்ததும் அவரது தொடர்பியல் முறைமைகளில் முக்கியமா னவை. "தினமும் குளிக்கமாட்டார்" என்று பெரியாரது உடல் சார்ந்த தூய்மை பற்றிக் குறிப்பிடுவார்கள். அதற்குச் சொல்லப் பட்ட காரணம், "குளிப்பதற்கான நேரத்தை மக்கள் தொண்டிற் காகச் செலவிடலாம் என்று அவர் நினைத்ததுதான்" என்று நாம் அறிவோம். அவரது ஒழுங்கற்ற ஆடைகள் ஆடை வடிவமைப்புக் கலையைப் புறம் தள்ளியவை எனலாம்.

அவர் அணிந்த லுங்கி, கடைத்தட்டு மனிதனின் ஆடை, இஸ்லாமியர்களுக்குச் சொந்தமான ஆடை என்ற பார்வைகளை உடைத்துத் தொடர்பியல் முறைமை எனலாம். அவரது விருப்ப மான அசைவ உணவு அவரது மூப்பை மீறிய நலத்தை அவருக்கு அளித்து; அகவை 94 வரை ஓய்வின்றி உழைக்க உதவி செய்தது எனலாம்.

மார்க்சின் முகமும், தாடியும் அவரது தொடர்பியல் முறை மைகளின் அடையாளமாகிப் போன காட்சிப் படிமங்கள். பெரியாரின் முகமும், தாடியும் கண்ணாடியும் அவரது தொடர் பியல் முறைமைகளின் அடையாளமாகிப் போன காட்சிப் படிமங்கள். பெரியாரும், மார்க்சும் தொடர்பியல் பார்வையில் அண்டமாக விரிபவர்கள். அவர்களது கருத்தியல்களில் நாம் அணுக வேண்டியது அவர்கள் நேரிடையாகப் பேசாத, எழுதாத, ஆனால் கட்டமைத்த தொடர்பியல் கருத்தியலும் அடக்கம் என்பதே இக்கட்டுரையின் மையக் கருத்து ஆகும். ❖

## ஆம்பூரில் பாவேந்தன் கலை இலக்கிய மன்றம் சார்பில் தமிழேந்திக்கு இரங்கல்

ஆம்பூரில் 22.5.2019ஆம் நாள் பாவேந்தன் கலை இலக்கிய மன்றத் தலைவர் மா. இராமமூர்த்தி தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பு. சுவாமிதாசு, கோ. பழனி முன்னிலை வகித்தனர். சா.பி. மாருதி இம்மானுவேல் வரவேற்புரை ஆற்றினர்.

மன்றத்தின் செயலாளர் சா. பிச்சை, சோளிங்கர் சுப்பிரமணி, யுவராசன் கவிஞர் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துத் தீர்மானம் கொண்டு வந்தார். கவிஞர் நா. ஜீவா அவர்களும், கவிஞர் யாழன் ஆதி அவர்களும் தமிழேந்தி அவர்களின் பேராற்றலைப் பாராட்டி இரங்கல் கவிதை படித்தனர்.

ஒய். கிளர்பர்ட் ஆசீர்வாதம், கவிஞர் யுவராசன் 1968-70 வரை அரசு ஆண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இலக்கிய மன்றம் உருவாக்கி அனைவருக்கும் பேச்சாற்றலையும் தமிழுணர்வையும் ஊட்டி யது; பயிற்சிப் பள்ளி வளாகத்திலே ஞாயிற்றுக்கிழமைதோறும் வாரம் ஒரு திருக்குறள் எனும் தலைப்பிலே வள்ளுவத்தை ஆராய்ந்ததையும் எடுத்து இயம்பினார்.

சிந்தனையாளன் இதழின் கடைசிப் பக்கத்திலே அனல் தெறிக்கும் கவிதை இடம்பெறுவதையும் அனைவரும் படித்துப் பாராட்டியதையும் எடுத்துப் பேசினார். தோழர் ஆனைமுத்து மற்றும் மார்க்சியப் பெரியாரியத் தோழர்களுக்கு நெருக்கமாகப் பணியாற்றியதையும் கூறினார். தோழர்களுக்கும் தமிழுக்கும் தமிழர் இனத்துக்கும் தமிழ் உள்ளங்களுக்கும் சிந்தனை யாளன் குழுமத்துக்கும் ஈடுசெய்யா பேரிழப்பு என்று தனது உரையில் குறிப்பிட்டார். இறுதியாகப் பொருளாளர் எ. மதியழகன் நன்றி கூறினார்.

### வேலூரில் காரல் மார்க்சு, மேதை அம்பேத்கர், புரட்சிக் கவிஞர்

## பிறந்தநாள் கருத்தரங்கம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் சார்பில் 12.5.2019 அன்று வேலூரில் மேற்காணும் கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கத்தின் தொடக்கத்தில் 30.4.2019அன்று இயற்கை யெய்திய தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் துணைவியார் ஆ.சுசீலா அம்மா அவர்களுக்கும், 5.5.2019இல் இயற்கையெய்திய புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் பாவலர் தமிழேந்தி அவர்களுக்கும் இரங்கல் தெரிவித்து அனைவரும் ஒரு மணித்துளி எழுந்து நின்று நினைவுவணக்கம் செலுத்தினர்.

நிகழ்வில் பாவலர் தமிழேந்தியின் உருவப்படத்தை தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தோழர் தியாகு திறந்துவைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் தோழர் தியாகு எழுதிய மார்க்சியம் அனா ஆவன்னா நூல் வெளியிடப்பட்டது. நூலினைத் தோழர் முகிலன் வெளியிட்டார். முதல் படியை வேலூர் கண்மருத்துவர் தி.ச.முகமதுசயி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மா.பெ.பொ.க.வேலூர் மாவட்டச் செயலாளர் தோழர் மோ.சி.சங்கர் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார். நிகழ்வில் முதன்மை உரை நிகழ்த்திய தோழர் தியாகு ஆ.சுசீலா அம்மாவைப் பற்றி மே மாத சிந்தனையாளன் இதழில் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் "என் ஜென்னி ஆ.சுசீலா அவர்களை இழந்தேன்!" என எழுதியிருந்த ஆசிரியவுரை பற்றி, நெகிழ்வுரை ஆற்றினார். காரல் மார்க்சின் பிறந்தநாளை ஒட்டி "மார்க்சியம் அனா ஆவன்னா" நூல் தூயதமிழ்ப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது பற்றியும் உரையாற்றினார். “நிகழ்வில் தமிழக மக்கள் முன்னனி ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன், க.முகிலன், தமிழி யக்கம், வேலூர் தமிழ்ச் சங்கச் செயலாளர் தோழர் மு.சுகுமார், சா.குப்பன், நா.ப.செந்தமிழ்க்கோ, மரு.தி.ச.முகமதுசயி, முனைவர் ஆ.முத்தமிழ்ச்செல்வன், பேராசிரியர் இர.நடராசன், தோழர் காஞ்சிஅமுதன், த.ஒ.வி.இ. தோழர் செவ்வேள், இராணிப் பேட்டைத் தோழர் பா.ச.அரசமாணிக்கம், தோழர் மு.சுவாமி நாதன், தோழர் அ.சி.சின்னப்பத்தமிழர் ஆகியோர் உரை யாற்றினர். மா.பெ.பொ.க.வேலூர் மாநகரச் செயலாளர் தோழர் மீ.டில்லிபாபு நன்றியுரைத்தார்.

## “பா”ச் சுடர் மறைந்ததே!

மார்க்சு பெரியார் அம்பேத் கரியத்தை
மார்பில் சுமந்த பெரும் புலவன்
பொதுமைத் தத்துவக் கொள்கைஏந்தி தமிழர்க்குத்
தன்பாட்டால் புதுக்குருதி ஏற்றிய தமிழேந்தி

ஆரியத்தின் அடி வயிற்றைக் கலங்கவைப்பாய்
அடிமைத் தமிழர்க்கு இடியாய் முழங்கிடுவாய்
கொடிய சாதியத் திமிரைச் சாடிடுவாய்
கொண்ட கொள்கையில் உறுதியாய் நின்றாய்

அறிஞர் ஆனைமுத்துக்கு ஏங்கெல்சாய் துணையிருந்தாய்
கட்சி மாநாட்டைத் தலைமையேற்று நடத்திடுவாய்
பிறர் அமைப்புப் பணிகளையும் விரும்பிச்செய்வாய்
தமிழ் நாடெங்கும் சுழன்று களமாடினாய்

நான் கண்ட பாவேந்தர் நீ
நான் கொண்ட பாவலன் நீ
நான் வியந்த அறிஞன் நீ
என் பாட்டுத் தலைவன் நீ

மாபெபொ கவின் தளபதி நீ
தளராக் கொள்கைக்கு அதிபதி நீ
போராட்டக் களத்தில் மாவீரன் நீ
முழக்கமாய் முழங்கும் சங்கு நீ

உன்பாடல் மொழியின மானம் ஊட்டும்
உன்பாடல் தன்மான உணர் வூட்டும்
உன்பாடல் அறியாமை இருள் நீக்கும்
உன்பாடல் சாகாது நிலைத்து நிற்கும்

சிந்தனையாளன் இறுதி அட்டைஉன் பாவேட்டை
சிந்தையில் அடைத்திடுமது அறிவு ஒட்டை
அந்தோ தழல்தெறிக்கும் பாச்சுடர் மறைந்ததே
நொந்தோம் மனம் இனிகாண் பதென்றோ?

**- நா. மதனகவி**

## வாழ்க்கை ஒப்பந்த விழா



பெரம்பலூர் மாவட்டம், சந்நாசி நல்லூர் புலவர் வே. ஆறுமுகம் - தமிழரசி இணையரின் பேத்தி யும், ஆ. தேன்மொழி - தமிழரசன் இணையரின் மகளும் ஆன செல்வி த. எழில்கோதை, M.D.; அழகேசன்-ரஜினி இவர்களின் மகன் செல்வன் சதீஷ், M.D. ஆகியோரின் திருமண வரவேற்பு விழா, சென்னை எழும்பூர் அசோகா விடுதியில் 5.5.2019 அன்று மாலை இனிதே நடைபெற்றது. மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.5000/- வழங்கினர்.

# பாலியல் குற்றச்சாட்டும் உச்சநீதிமன்றமும்

குட்டுவன்

பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் குற்றங்கள் நீண்ட காலமாக மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தொடர்கின்றன. இதன் தொடர்பாக அந்தந்த மாநிலங்களில் உள்ள சட்டங்கள் வழியாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பொதுவாக காவல் நிலையங்களில் விசாரணைக்காக வரும் பெண்கள் மீது நடத்தப்படும் பாலியல் தாக்குதல்கள் பெருமளவில் மறைக்கப்பட்டு வந்தன. காரணம் சாதாரண ஏழை மக்கள் இதில் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். அரசியல் இயக்கங்கள் பெண்ணுரிமை இயக்கங்கள் போராடி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்த பல நிகழ்வுகள் தமிழ்நாட்டிலும் உண்டு. 2012 திசம்பர் திங்களில் புது தில்லி நகரில் இரவு நேரத்தில் பயணம் செய்த நிர்பயா என்ற பெண் மீது ஒரு இளவர் உட்பட 6 நபர்கள் கூட்டுப் பாலியல் வன்முறையில் ஈடுபட்டனர். இச்செய்தி உலக அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தலைநகர் தில்லியில் நடந்த இந்நிகழ்வால் இந்தியாவிற்கே தலைக்குனிவு என்று பலர் கருத்துத் தெரிவித்தனர். இதன் காரணமாக 2013இல் நாடாளுமன்றத்தில் இவ்விதக் குற்ற நடவடிக்கை களைத் தடுக்கும் நோக்கோடு விழிப்புணர்வை இந்தியாவின் சென்னை உட்பட எட்டு நகரங்களில் உள்ள கல்வி உயர் கல்வி நிறுவனங்களில் பெண்கள் பாதுகாப்புக்கென்று தனி அமைப்பை ஏற்படுத்த ரூ.1000 கோடி அளவில் ஒரு நிதியம் உருவாக்கப்பட்டது. பிறகு ஒன்றிய அரசின் நிதித் திட்டமாக அறிவிக்கப்பட்டு ரூ.3600 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்நிதியிலிருந்து 60 விழுக்காடு ஒன்றிய அரசின் பங்காகவும் மாநில அரசின் பங்கு 40 விழுக் காட்டு அளவாகவும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி உத்தரப்பிரதேசத்தின் லக்னோ நகரைத் தவிர மற்ற மாநிலங்கள் இந்த நிதியைப் பயன்படுத்தாதது பெரும் அவலமாகும். நீண்ட உறக்கத்தில் உள்ள தமிழ்நாடு அரசும் இந்நிதியைப் பயன்படுத்தவில்லை. இந்நிகழ்வைத் தொடர்ந்து 2013இல் பணிபுரியும் இடங்களில் பெண்கள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுககும் சட்டம் (தடுத்தல் பாதுகாத்தல் குறைதீர் சட்டம்) நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி இந்தியாவில் பல மாநிலங்களில் பலர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் தலைசிறந்த புலனாய்வு ஏடு என்று புகழப்பட்ட தெகல்கா ஆசிரியர் தருண் தேஜ்பால் மீது வழக்குப் பதிவு செய் யப்பட்டு கைது செய்யப்பட்டார். சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் ஆய்வாளர் இந்திய அரசின் சார்பில் பலப் பன்னாட்டுச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளில் பங்கு பெற்ற 79 வயது நிரம்பிய திருவாளர் இராசேந்திர கே. பச்சோரி மீதும் 2015 வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டு சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவர் பதவியிலிருந்து பச்சோரி விலகினார். 2007இல் அமைதிக்கான நோபல் பரிசை இருவருக்கு அளித்த போது பச்சோரியும் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி அல்கோருடன் பகிர்ந்து கொண்டனர். இவர் நீதிமன்றத்தில் பிணை கேட்ட போது. பச்சோரியை கைது செய்யாமலே கீழமை நீதிமன்றம் விசாரணையைத் தெடருமாறு கேட்டுக்கொண்டது. ஆனால் தெகல்கா முன்னாள் ஆசிரியர் தருண் தேஜ்பால் வழக்கில் கோவா உயர்நீதிமன்றம் பாலியல் குற்றச்சாட்டுகளைத் தண்டனைச் சட்டத்தின் பல பிரிவுகளின் கீழ்ப் பதிவு செய்து விசாரணையை 2013இல் தொடங்கியது. இதை எதிர்த்து தேஜ்பால் தன்னை வழக்கிலிருந்து விடுவிக்கும்படி கேட்டு உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளார். கோவா நீதிமன்றம் தேஜ்பாலுக்கு முன்பிணை வழங்காமல் கைது செய்த பின் பிணை 2014இல் வழங்கியது. இவ்வாறு அவரவர் துறைகளில் புகழப் பெற்ற இருவர் மீது தொடர்ந்து வழக்குகள் நடைபெற்று வரும் நிலையில், உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் மீது பாலியல் குற்றப் புகாரை, உச்ச நீதிமன்ற முன்னாள் பெண் பணியாளர் உச்ச நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளுக்கும் 2019 ஏப்ரல் திங்களில் அனுப்பினார். இதற்கு முன்பு 2014இல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்று மேற்கு வங்கத்தின் மனித உரிமை ஆணையத் தலைவராகப் பணியாற்றிய அசோக் குமார் கங்குலி மீது, பெண் சட்டப் பயிற்சியாளர் தனக்குப் பாலியல் தொல்லைகள் கொடுத்ததாக கங்குலி மீது புகார் அளித்தார். 2012இல் தன்னை உணவு விடுதி அறைக்கு அழைத்துச் சென்று அங்குதான் தவறாக நடக்க முயன்றார் என்ற கடுமைன புகாரையும் அந்தப் பெண் பயிற்சியாளர் குற்றம் சாட்டினார். மற்றொரு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் பஞ்சாப் அரியானா மாநிலங்களின் சுற்றுச்சூழல் ஆணையத்தின் தலைவருமான சுவதன்தர் குமார் மீது பெண் சட்டப் பயிற்சியாளர் 2014இல் பாலியல் குற்றம் சாட்டினார். இந்த நீதிபதிகள் இருவரும் எப்படியோ ஒரு விதத்தில் வழக்குகள் பதியாமல் பாதுகாக்கப்பட்டனர்.

இச்சூழலில் ரபேல் விமான ஒப்பந்த விவாகாரத்தை மீண்டும் கோகாய் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு விசார ணைக்கு எடுத்துக் கொண்ட போது கோகாய் மீது பாலியல் குற்றச்சாட்டு ஒரு பெரும் விவாதத்தைச் சட்ட வல்லுநர்கள் மத்தி யிலும் முன்னாள் நீதிபதிகள் ஊடகக் கட்டுரையாளர்கள் மத்தியிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2019 நவம்பர் திங்களில் கோகாய் ஓய்வு பெறுகிறார். இவர் மீது சுமத்தப்பட்ட பாலியல் குற்றச்சாட்டில் பல வினாக்கள் எழுப்பப்படுகின்றன. இந்த வழக்கை விசாரித்த அமர்வில் இவர் தலைமை தாங்கலாமா? உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்குத் தார்மீக பொறுப்பு ஒன்றும் இல்லையா? சட்ட அடிப்படையில் தலைமை நீதிபதி தன் மீது உள்ள வழக்கையே விசாரிப்பது முறையா? பிறகு மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு அவசர அவசரமாக வழக்கை விசாரித்த முறையும், அந்த அமர்வு முன் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் வழக்கறிஞர் உதவியில்லாமல் விசாரணை நடத்தப்பட்டது சரியா? இவ்வித வினாக்களுக்கு ஒரு முடிவான விடைகள் காண்பது அரிதானதாகும். 2013ஆம் ஆண்டு பணி புரியும் இடங்களில் பெண்கள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் சட்டம் வருவதற்கு முன்பு 1972இல் மதுரா பாலியல் வழக்கை விசாரித்து உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஒரு காவல் நிலையத்தில் இரண்டு காவலர்கள் இளம் வயது பழங்குடியின பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் போதிய ஆதாரங்கள் இல்லை என்று விடுதலை செய்தது. இதற்கு

நாடெங்கும் பெண்கள் அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் கடும் கண்டனங்களைத் தெரிவித்தன. 1992ஆம் ஆண்டு இராஜஸ்தான் மாநிலத்தின் பெண்கள் முன்னேற்ற நிறுவனத்தில் சமூகப் பெண் ஊழியர் பன்வாரி தேவி பணியாற்றினார். சமூகத் தீமையான சிறுமிகள் திருமணத்தை ஊர்ப்புறங்களில் தடைசெய்ய வேண்டும் என்பதற்குப் பரப்புரை மேற்கொள்ளவதே இந்த அமைப்பின் நோக்கமாகும். இப் பணியின் காரணமாக சிறுமிகள் திருமணத்தை ஒரு நிகழ்வில் தடுத்து நிறுத்தினார். இதற்குப் பழிதீர்க்கும் நோக்கோடுதான் உயர் சாதியினர் 1992ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 5 நபர்கள் பன்வாரி தேவியின் கணவரின் முன்னிலையிலேயே அவர் பணி செய்யும் இடத்தில் கூட்டுப் பாலியல் பலாத்காரத்தைச் செய்தனர். உயர் சாதியினர் அழுத்தத்தால் பன்வாரிதேவியின் வழக்கு காவல் நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அரசு மருத்துவரும் மருத்துவப் பரிசோதனை செய்யவும் மறுத்து விட்டார். இதன் காரணமாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங் களும் பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனமும் இணைந்து உச்ச நீதிமன்றத்தில் 1997இல் வழக்குத் தொடர்ந்தனர். இதை ''விஸாகா வழக்கு'' என்று கூறுவர். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் மனித உரிமை மீறலாக இவ்வழக்கு இருப்பதால் ஒரு விரிவான வழிகாட்டும் நெறிகளைத் தீர்ப்பில் அன்றைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வர்மா தலைமையிலான நான்கு நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கியது.

அதில் பின்வரும் நெறிமுறைகளை அரசமைப்புச் சட்டம் 141ஆம் பிரிவின்படி அமைக்கும்படி வலியுறுத்தியது. அரசமைப்புச் சட்டம் 141ஆம் பிரிவின்படி அளிக்கும் தீர்ப்புகள் இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் பின்பற்ற வேண்டிய கடமையும் கட்டாயமும் உள்ளது. விஸகா வழிகாட்டுதல் நெறி: 1.பணியாற்றும் இடங்களில் உள்ள பணியமர்த்துவர் பணியாற்று பவர் அனைவருக்கும் பொருந்தும். 2.பணியாற்றும் இடங்களில் பணியமர்த்துபவர் எவ்விதப் பாலியல் தொல்லைகளையும் தடுக்கும் பொறுப்பு உள்ளது. 3.இந்தப் பாலியல் தொல்லைகளை விசாரிக்க ஒரு புகார் கூறும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். 4.பாலியல் புகார்களை இந்த அமைப்பின் விசாரணைக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 5.1993ஆம் ஆண்டின் மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் படி எவ்விதத் தடையையும் வழக்கு விசாரணையின் போது ஏற்படுத்தக்கூடாது. 6.தொழிலாளர்கள் கூட்டத்தில் பாலியல் குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்குப் பணியமர்த்துபவர்கள் இடமளிக்க வேண்டும். 7.பணியிடங்களில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு இவ்வித உயர் நெறிகளை அறிந்து கொள்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த நெறிமுறைகளில் பலவற்றை 2013ஆம் ஆண்டின் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் முழுமையாகப் பின்பற்றவில்லை என்று பல சட்ட வல்லுநர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர். 1997ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் அளித்த நெறிமுறைகளை உடனடியாகப் பின்பற்றாத காரணத்தினால் தான் பல மாநிலங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பெருகின. உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டு நெறிகளை உச்ச நீதிமன்றமே தற்போது ஏன் பின்பற்றவில்லை? என்ற வினாவும் எழுகிறது. தமிழ்நாட்டில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் திரு.சந்துரு, திரு.அரி பரந்தாமன் போன்றவர்கள்தான் உச்ச நீதிமன்றம் தனக்குத்தானே வழங்கிய தீர்ப்பை நடுநிலையோடு அணுகினர்; கண்டனங்களை எழுப்பினர். பெண் வழக்கறிஞர் களான அருள்மொழி; அஜிதா போன்றவர்கள் கடும் கண்டனங் களைத் தெரிவித்துள்ளனர். பெண்கள் பாதுகாப்பு, அதற்குரிய சட்டங்கள் இன்றைக்குக் கேள்விக்குறியாக மாறியுள்ளன போன்ற ஐயங்கள் ஏற்பட்டு வருகின்றன. சனாதன தர்மம்தான் உச்ச நீதிமன்றத்தில் கோலேச்சுகின்றதா என்ற ஐயத்தையும் எழுப்பு கிறது. தலைமை நீதிபதி கோகாய், ஏ.கே.கங்குலி, சுவதன்தர் குமார் ஆகியோர் சனாதனத்தின் உச்சத்தில் அமர்ந்திருக்கின்ற சாதியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக இந்த விதிவிலக்கா? எல்லாப் பாலியல் வழக்குகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் சனாதனத் தின் கீழ்நிலைச் சாதி அமைப்பைச் சார்ந்தவர்கள் என்பதால் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற கருத்தை மறுக்க இயலாது. இதற்காக அண்மையில் இந்து ஆங்கில நாளிதழில் (மே 24) முன்னாள் நீதிபதி மார்கண்டேய கட்சு, ஆதித்ய மனுபர்வாலா இணைந்து எழுதிய கட்டுரையில் உச்சநீதிமன்றம் மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்படும் சமூக இயல் சார்ந்த சட்ட இயலைப் பின்பற்றுவதைக் குறைத்துக் கொண்டு ஆக்கபூர்வமான சட்ட இயல் கோட்பாட்டைத் தனது தீர்ப்புகளில் பின்பற்ற வேண்டும் என்று கருத்துரை வழங்கியுள்ளனர். இந்த ஆக்கபூர்வமான சட்ட இயலில் நீதிபதிகள் தங்களை வரையறுத்துக் கொண்டு சமூகச் செயற்பாட்டாளர்கள் போல செயல்படாமல் இருக்க வேண்டும் என்று ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளனர். அரசு நிர்வாகத்தின் மற்ற துறைகளையும் மதிக்க வேண்டும். சட்டம் இயற்றும் அதிகாரம் நீதிபதிகளுக்குக் கிடையாது என்றும் இக்கட்டுரையில் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்கூறிய இரு சட்ட இயல் கோட்பாடுகளும் மேற்கத்திய சட்ட வல்லுநர்களால் முன்மொழியப்பட்ட கருத்துகளாகும். சாதியக் கட்டமைப்பைக் கொண்ட இந்தியச் சமூகத்தில் இன்றும் ஆதிக்கச் சாதியினர் நீதித் துறையில் 80 விழுக்காட்டிற்கு மேல் இருந்து கொண்டு தங்களின் பாதுகாப்பிற்காகவே நீதித் துறையைப் பயன்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டையும் மறுத்துவிட முடியாது. சான்றாக, நீதி சட்ட வரையறைகளை மீறிவிட்டார் என்ற காரணத்திற்காக கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியான கர்ணன் அவர் பதவியில் இருக்கும் போதே தண்டிக்கப்பட்டு சிறை சென்றார். பாலியல் தொடர்பாக பல சட்டங்களும் தீர்ப்பு களும் இருக்கின்ற நிலையில் பாலியல் குற்றச்சாட்டுத் தொடர்பான இன்றைய உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு பெரும் ஐயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சாதிக்கொரு நீதி என்ற கோட்பாடு உயர் நீதிமன்ற முறைகளிலும் செயல்களிலும் இருக்கவே கூடாது என்பதை வலியுறுத்திய தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கரின் சமூக இயல் சார்ந்த படைப்புகளை நீதிபதிகள் படித்துத் தெளிந்திருந்தால் சனாதன சாதியக் கோட்பாடுகளைத் தகர்க்கும் எண்ணம் வந்திருக்கும். இந்திய சமூகக் கட்டமைப்பில் இந்த இரு பெரும் சமூக சீர்த்திருத்தச் செம்மல்களும் வழங்கிய கருத்துகள் குறிப்பாக நீதிமன்ற வழிகாட்டுதல் நெறிகளாக அமைந்தால்தான் உண்மையான அனைத்துத் தரப்பினருக்குமான நீதி கிட்டும். ❖

## மதுரையில்
# பாவலர் தமிழேந்தி படத்திறப்பு




மாபெபொக பாவலர் தமிழேந்தி படத்திறப்பு நினைவேந்தல் கூட்டம் மதுரை 12 05 2019 ‘‘தலைமை: தோழர் மீ.த.பாண்டியன், தலைவர், தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகம் ‘‘படத்திறப்பு: தோழர் சு.தளபதி ‘‘பெரியார் சிந்தனையாளர்‘‘ ‘‘நினைவேந்தல் உரை: ‘‘தோழர் ஐ.செயராமன் - புரட்சிக் கவிஞர் பேரவை ‘‘தோழர் கிட்டுராசா - த.பெ.தி.க.‘‘தோழர் மணி அமுதன் - தி.வி.க.‘‘தோழர் துளிர்‘‘ தோழர் பொற்கொடி‘‘ தோழர் நல்ல பெருமாள் - மா.பெ.பொ.க. ஆதரவு‘‘ ‘‘தமிழேந்தி கவிதை வாசித்தல் மற்றும் ‘‘பாடல்: ஆ.பா.வானவில்‘‘ ‘‘நிகழ்ச்சி

ஒருங்கிணைப்பு: ‘‘தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகம்‘‘ பெரியார் சிந்தனையாளர்கள்



பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மைஅறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களைவேலூர் தோழர் லோ.இரத்தினகுமார் 28.3.2019 பிற்பகல் 3.30 மணிஅளவில் சந்தித்து உரையாடினார். இருவரும் ஒருவருக்கொருவர் நலம் உசாவிக் கொண்டனர். கலசம் உடனிருந்தார்.

# தோழர் அரசமாணிக்கம் மறைந்தார்



வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டை புரட்சிகர தொழிலாளர் முன்னணியின் பொறுப்பாளர் தோழர் அரசமாணிக்கம் அவர்கள் 25.05.2019 அதிகாலை 04.00 மணியளவில் உடல் நலக்குறைவால் இயற்கை யெய்தினார். தொழிற்பேட்டை பகுதி பாவேந்தர் தமிழ் மன்றத்தின் அலோசகராக இருந்து தமிழ்ப் பணியாற்றி வந்தார். இரண்டு கண்களும் வேலூர் அகர்வால் கண்மருத்துவமனைக்குக் கொடையாக அளிக்கப்பட்டது.. 26.05.2019 காலை 9.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை இரங்கல் கூட்டம் நடைபெற்றது. தோழர் தமிழ் அன்பன் தலைமை தாங்கினார். புரட்சிகர தொழிலாளர் முன்னணித் தோழர்கள் ஏபன் மணிவாசகம் தமிழ்கனல் புரட்சிகர இளஞர் முன்னணித் தோழர்கள் செந்தமிழ்முருகன் சீராளன் வெற்றிச்செல்வன் பசுமைச் செல்வன் புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் முன்னணி தோழர்கள் சுகதேவ்செந்தில் ஒ.ம.வி.மு. தோழர்.பிரதாபன் இ.பொ.க.(மார்க்சிட்) தோழர். வெங்கடேசன் ம.தி.மு.க பால் சத்தியன் தி.க. பொன்.பெருமாள் வி.சி.க தோழர். இரத்தின நற்குமரன் மா.பெ.பொ.க தோழர்கள் முகிலன் மோ.சி.சங்கர் வாலாசா வல்லவன் ச.குப்பன் மக்கள் அதிகாரம் தோழர் எழில் த.ஒ.வி.இ. தோழர்.பெரும்சித்திரன் வழக்கறிஞர் மார்த் தாண்டன் பேராசிரியர்கள் தமிழ்வேல் எழிலரசிபெருமாள் முருகன் பாவேந்தர் தமிழ் மன்றம் தோழர்கள் பழ.அம்பிகாபதி துரைபாலகிருட்டிணன் முகிலன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். முழக்கமிட்டு ஊர்வலமாகச் சென்று முத்துக்கடை பேருந்து நிலையம் அருகில் உடல் வேலூர் சி.எம்.சி மருத்துவமனைக்கு கொடையாக அளிக்கப்பட்டது.

நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு 23.06.2019 அன்று காலை 9.00 மணிக்கு இராணிப்பேட்டை தொழிற்பேட்டை பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# பாவலர் **தமிழேந்தி** விடைபெற்றுக் கொண்டார்



சீரிய பெரியாரியலாளரும் கவிஞருமான தமிழேந்தி (69) அரக்கோணத்தில் உள்ள அவரது இல்லத்தில் மே 5ஆம் தேதி காலை 7 மணியளவில் முடிவெய்தினார். தோழர் ஆனைமுத்து அவர்களின் மார்க்சிய-பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் முன்னணி அமைப்பான புரட்சிக் கவிஞர் கலை இலக்கியப் பேரவையின் செயலாளராகப் பணியாற்றி வந்த தோழர் தமிழேந்தி, பெரியார் இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு செயல்பட்டவர். குறிப்பாக திராவிடர் விடுதலைக் கழகத்துடன் மிகவும் நெருக்கம் கொண்டு கழக நிகழ்வுகள் மாநாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றும் பேசியும் வந்தவர். சிந்தனையாளன் இதழ் தயாரிப்புப் பணியிலும் அதன் பொங்கல் ஆண்டு மலர் தயாரிப்பிலும் முக்கியப் பொறுப்பேற்று செயல்பட்டு வந்தார். சமகால அரசியலை மரபுக் கவிதை வடிவத்தில் கவி புனையும் ஆற்றல் அவரது தனித்துவமான சிறப்பு.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புழல் சிறை வளாகம் முன்பு 7 தமிழர் விடுதலையை வலியுறுத்தும் பொதுக் கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது உணர்ச்சி மேலிட்டு மயங்கி விழுந்தார். உடனடியாக புழலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்குக் கொண்டுச் செல்லப் பட்டபோது, மூளை நரம்பு பாதிக்கப்பட்டது கண்டறியப் பட்டது. பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு பேச்சுத் திறன் இழந்து, போரூர் இராமச் சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று ஓரளவு நலன் பெற்றார். ஆனாலும், பெரியார் இயக்கப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லையே என்ற வருத்தமும் கவலையும் அவருக்கு இருந்தது.

பாவேந்தன் என்ற மகனும், அருவி, கனிமொழி என்ற மகளும் இருக்கிறார்கள். மூவருக்கும் சாதி மறுப்புத் திருமணத்தையே நடத்தினார். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தாலும் தலித் இயக்கங்களோடு இணைந்து சாதி ஒழிப்புக் களமாடியவர். பல்வேறு தலித் அமைப்புகளின் நம்பிக்கையைப் பெற்றவர்.

அவரது உடல் அவரது விருப்பப்படி வேலூர் மருத்துவ மனைக்கு மே 5 அன்று மாலை எவ்விதச் சடங்குகளும் இன்றி ஒப்படைக்கப்பட்டது. அரக்கோணம் சுவால் பேட்டை இராஜாஜி வீதியில் உள்ள அவரது இல்லத்தின் வாயிலில் நடந்த இரங்கல் கூட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமை கட்சியின் செயல் தோழர்கள் வாலாசா வல்லவன், முகிலன் மற்றும் சுப. வீரபாண்டியன், வே. மதிமாறன், வன்னியரசு (விடுதலை சிறுத்தைகள்), பெ. மணியரசன் (தமிழ்த் தேசப் பேரியக்கம்), பொதட்டூர் புவியரசன் உள்ளிட்ட பலரும் இரங்கல் உரையாற்றினர். கழகச் சார்பில் செயலவை உறுப்பினர் நெமிலி திலீபன், மலர் வளையம் வைத்து இரங்கல் உரையாற்றினார். கழகத்தின் சார்பாக ஆசிரியர் பார்த்திபன், பிரியா, அன்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்பு கள் இயக்கங்கள், குறிப்பாக தலித் அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் கவுதமன் பேசும்போது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முதல் அமைப்புக் கூட்டமே தோழர் தமிழேந்தியின் இல்ல மாடியில் நிகழ்ந்ததையும், தலித் அமைப்புகளின் கூட்டங்களுக்கு அவரது இல்லத் தின் கதவுகள் எப்போதுமே திறந்திருக்கும் என்பதையும் உணர்ச்சிபூர்வமாக நினைவு கூர்ந்தார்.

கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தின் தீவிர வாசகர் தோழர் தமிழேந்தி. கழகச் செயல்பாடுக ளையும், கழக ஏட்டில் வெளிவரும் கட்டுரைகளையும் அவ்வப்போது பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் உரையாடுவார். உடல் நலிவுற்ற காலத்திலும்கூட தொடர்ந்து அலைபேசி வழியாகப் பாராட்டி உற்சாகப் படுத்துவார். இறப்பதற்கு மூன்று நாட்கள் முன்பு கூட பொதுச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு 'நிமிர்வோம்' வெளியிட்ட தேர்தல் சிறப்பிதழை பேச முடியாத நிலையிலும் பெரிதும் சிரமப்பட்டுப் பேசிப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இறப்பு மனிதருக்கு இயற்கையானது என்றாலும், சொல்லையும் செயலையும் இணைத்து வாழ்ந்து காட்டிய பெரியாரியவாதியின் இழப்பு சமூகத்துக்குப் பேரிழப்பே ஆகும். **'புரட்சிப் பெரியார் முழக்கம்'** தனது உறுதி யான வாசகர் ஒருவரை இழந்து தவிக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தோழர் தமிழேந்திக்கு வீர வணக்கம்.

நன்றி : **புரட்சிப் பெரியார் முழக்கம்** (9-5-2019)

# படைப்புகளால் என்றும் வாழ்வார் தமிழேந்தி!
## படத்திறப்பு நிகழ்ச்சியில் ஆ. வந்தியத்தேவன் புகழாரம்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றப் மாநிலச் செயலாளரும் எழுச்சிக் கவிஞருமான தமிழேந்தி அவர்களின் தன்னிகரில் லாத தமிழ்ப் பணிக்கு வீரவணக்கத்தையும் அவரது பிரிவால் துயருற்றிருக்கிற அவரது இல்லத்தினருக்கும், இயக்கத் தோழர்களுக்கும் எங்கள் தலைவர் வைகோ அவர்களின் சார்பிலும், நான் சார்ந்திருக்கிற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை, அன்பான ஆறுதலை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரங்கத்தினுள் வந்து அமர்ந்ததும், கவிஞர் தமிழேந்தி அவர்களின் நினைவைப் போற்றும் இரங்கல் செய்திகளைக் காட்சிப்படுத்தி வைத்துள்ளதைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து போனேன்! கவிஞரின் பிறந்த ஊர் 'மின்னல்' என்ற அழகுத் தமிழ்ப் பெயரிலான ஊர்! யுவராசன் என்ற பெயரை 'தமிழேந்தி' என்று அழகுத் தமிழ்ப் பெயராக மாற்றி, தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் என்பது மட்டுமல்ல; பாவேந்தன், அருவி, கனிமொழி (இரசியா) எனத் தன் மக்களுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் அழகுத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தவர் நம் கவிஞர் என்பதை நாம் அறிவோம்!

பெருமை மிக்க இந்தத் தமிழ்க் குடும்பத்தின், கவிஞரின் பெயர்த்தியான அ.சோ. கனலி எழுதிய 'தாத்தா ஏன் மறைந்து போனாரோ?' என்ற இரங்கல் கவிதையும் இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. நம் கவிஞர் தமிழேந்தி தன் மக்களையும், பேரப் பிள்ளைகளையும் எப்படி வளர்த்திருக்கிறார் என்பதற்குச் சான்றளிப்பதைப் போல அவரின் பெயர்த்தி கனலியின் கவிதை திகழ்கிறது; நம் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

"தோளில் சுமந்து தாலாட்டுப் பாடினார்
மத்தாப்புக் கொளுத்தி நான் மகிழ்வதைக் கண்டார்
பூங்காவில் என்னுடன் பூங்கொத்து பறித்தார்
மிதிவண்டியில் ஏற்றிக்கொண் டூரெல்லாம் சுற்றினார்
கவிதை இயற்றக் கற்றுக் கொடுத்தார்
முதல் மதிப்பெண் பெற்றிடச் செய்தார்
உலகச் செய்திகள் அறியச் செய்து
புலவி எனவும் பெயர் பெறச் செய்தார்
என்சிறு வயதிலும் பதின்ம வயதிலும்
தந்தைபோல் உடனிருந்து பார்த்துக் கொண்டார்
வலதுபக்கச் செயல்பாட்டை இழந்து
மூளைக் கட்டியால் முடங்கிப் போனார்
மனமுடைந்த நிலையிலும் முதிர்ந்த அறிவுடன்
இடக்கரம் வைத்துக் கவிதைகள் இயற்றினார்
சோகம் தலைமுட்டிச் சோர்ந்த நிலையிலும்
அதே பழைய குரலுடன் இலக்கணம் நடத்தினார்
எல்லா வேளையும் பேத்தி உடனிருந்து
அவளை வளர்த்த கடமை முடித்திட்டு
பேத்தி தன்கடமை ஆற்றும்முன்
தாத்தா ஏன் மறைந்து போனாரோ!"

இதுதான் பேத்தியின் இரங்கல் பாட்டு!

அன்புத் தோழர்களே, தன் குடும்பத்தினரையும் எழுச்சி மிகு கவிஞர்களாக்கியவர் என்பது மட்டுமல்ல; தன் இல்லத்தில் நடைபெற்ற அனைத்துத் திருமணங்களையும் சாதி மறுப்புத் திருமணங்களாக நடத்திக் காட்டிய சாதனையாளர்தான் கவிஞர் தமிழேந்தி!

"சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் மற்றப்
பாதி துலங்குவது இல்லை"

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடினாரே, அந்தப் புரட்சிக்கவியின் செயல்வடிவம்தான் கவிஞர் தமிழேந்தி!

மானமும் அறிவும் உள்ள மக்களாகத் தமிழ் மக்களை உயர்த்தி வைக்கத் தொண்டு செய்த பெரியாரை, அண்ணாவை, திராவிடர் இயக்கத்தை அவதூறுகளை அள்ளிவீசி கொச்சைப்படுத்தி திசைதிருப்பும் திரிபுவாதிகள் மலிந்துவிட்ட காலம் இது!

"இருப்பு கொள்ளா எரிச்ச லோடு
வெறுப்பை உமிழ்வதே சிலருக்கு வேலை
முத்திரப் பையை முக்கிச் சுமந்து
சூத்திரத் தமிழன் இழிவு தொலைக்க
பன்னூறாண்டின் பழிக்குழி மூட
தொண்ணூற்றைக் கடந்தும் தொண்டில் துலங்கினார்
தந்தை பெரியார் என்றொரு தலைவர்; அவர்
இந்த மண்ணில் இருந்தார் இயங்கினார்"

என்று பெரியாரின் பெரும் பணியைப் புகழ்ந்து பாடியவர் தமிழேந்தி!

"என்னடா யார்அவர் என்று கேட்டால்
கன்னடர் எனச்சில கிறுக்கர் கழறுவார்
திராவிடர் என்றசொல் தேள்கொட்டு போலக்
குடையு தென்று குறுக்குச்சால் ஓட்டுவார்"

என்று கோடரிக் காம்புகளை அடையாளம் காட்டிய கவிஞர் தமிழேந்தி!

"ஆரியம் என்னும் அழும்பு தொலைக்க
பிடரி உலுக்கிய சொல்பேர் திராவிடம்
அதுவரை அமுக்குண்ட மக்கட் கெல்லாம்
முதுகுத் தண்டாய் முகிழ்த்தது திராவிடம்"

என்று நெஞ்சை நிமிர்த்தித் திராவிடம் புகழ்ந்தவர் தமிழேந்தி!

"காட்டுமிராண்டி மொழிதமிழ் என்ற தெல்லாம்
பிள்ளையைக் கடியும் பெற்றவள் சாடல்
அறிவின் உச்சத்தை தமிழ் அவாவிட
விரும்பிய நெஞ்சின் வேதனைப் புலம்பல்
பெரியார் முதலில் திராவிடம் கேட்டதும்
பின்னர் அதுவே தமிழ் நாடானதும்
சரியான இடத்தில் வந்து சேர்ந்த
தன்னலம் மறுத்த தத்துவ முடிவே"

என்று சரியான விளக்கம் தந்தார் கவிஞர் தமிழேந்தி!

"நோண்டி நோண்டி நொட்டை சொல்வது
தோண்டிப் புளுகர்க்குத் தோதான வேலை
இனநலக் காப்பாளர் என்போர் இந்தப்
பிணமறுக்கும் தொழில் பிழைத்தும் செய்யார்"

என்று குள்ளநரிக் கூட்டத்தின் சூதுமதிச் செயலைக் கனல் கக்கும் கவிதையில் கண்டித்தவர் கவிஞர் தமிழேந்தி!

பெரியாரின் பெரும் சிறப்பைப் பாடியவர்; பெரியாரின் தலைமாணாக்கராம் நம் அண்ணாவின் பண்பு நலன்களையும் பாப்புனைந்து பாராட்டினார்.

"செந்தமிழ் நாட்டு மக்கள் ஒருவரைச்
சிந்தை குளிரப் 'பெரியார்' என்றார்
அடுத்த ஒருவரை 'அண்ணா' என்றார்
இந்த நாட்டின் இளையர் பெரியர்
எல்லோருக்கும் சொந்த அண்ணா
திருக்குறள் போலச் செதுக்கிய குள்ளம்
திருவாய் மலர்ந்தால் தேன்தமிழ் வெள்ளம்

தம்பி யரைத் தன்அன்பில் வென்றார்
மக்கள் மனங்களில் மலைபோல் நின்றார்
எளிய தமிழை எடுத்துப் பேசினார்
சந்தனத் தைத்தன் எழுத்தில் பூசினார்
மணக்கும் தாழையாய்த் தம்பிக்கு மடல்கள்
அலைகடல் ஆயின மேடைத் திடல்கள்
வணக்கம் வந்தது நமஸ்காரம் போனது
அரசியல் இவர்க்கே அறுவடை ஆனது

பூச்சோ புனைவோ இல்லை இவரோ
மாற்றான் தோட்டத்து மணந்த முல்லை
வினை நரம்பின் வெண்கலக் குரலால்
மொத்த இனத்தையும் கட்டிப் போட்டார்
தில்லித் திமிரைத் தட்டிக் கேட்டார்
உச்சி வான்போல் உயர்ந்துநின்ற
அண்ணா என்னும் அரும்பேர்
பண்ணாய்த் தமிழர் செவியில் பாயுமே!"

என்ற தமிழேந்தியின் புகழாரம் சூட்டும் கவிதைகள், அண்ணாவின் தன்மானம் - தமிழ்மானம் காக்கும் தன்னேரற்ற பணிகளுக்கு அணிவிக்கப்பட்ட வாடாமாலையாய் என்றென்றும் மணம் வீசிக்கொண்டே இருக்கும்!

தமிழீழ விடுதலைக்குக் களமாடி புதிய புறநானூறு படைத்திட்ட தமிழினப் போராளித் தலைவரான பிரபாகரன் புகழ்பேசும் தமிழேந்தியின் உணர்ச்சிப் பாக்கள் நம் நெஞ்சில் காலக் கல்வெட்டாய் நிலைத்து நிற்பவை.

"புறநானூற்றுத் தமிழன் வீரம்பற்றி
புத்தகத்தில் மட்டுந்தான் படித்துள் ளோம்யாம்
வரலாற்று நாயகனே!ஈழ மண்ணின்
வரிப்புலியே! புலிப்படையின் தலைவா!உன்தன்
பெருமைக்கும் ஈடுண்டோ? தமிழினத்தின்
பெருமானங் காத்தவனே! சிங்கப் போத்தே
உரிமைச்செம் பயிர்வளர்த்த உரமே!ஈழ
ஒளிவானின் எரிதழலே! எங்கள் மூச்சே!

பிரபாக ரன்என்னும் பேரைக் கேட்டால்
பேருலகத் தமிழர்க்கோ பேரெழுச்சி
நரம்புக்குள் மின்சாரம் பாய, ரத்த
நாளங்கள் அத்தனைக்கும் புத்துணர்ச்சி
உரம்பெய்த தமிழ்க்குலத்தின் வீரமெல்லாம்
ஒரே கருவில் பெற்றாளோ அத்தமிழச்சி
இறும்பூதிச் சிலிர்க்கிறதே வன்னிக்காடும்
இறக்கை கட்டிப் பறக்கிறதே அன்னை நாடும்"

என்ற தமிழேந்தியின் எழுச்சிக் கவிதையை எப்படி நம்மால் மறக்க இயலும்?

இத்தகைய இன எழுச்சிப் பாடல்களை மேடைதோறும் பாடியவர், இதழ்களில் எழுதிக் குவித்தவர், நூல்களாய்த் தொகுத்துத் தந்தவர் தமிழேந்தி!

"கெடல்எங்கே தமிழர்நலன் – அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!"

என்று பாவேந்தரின் பாடல் வரிகளுக்குச் செயல் வடிவம் அளிக்கும் வண்ணம் களத்தில் நின்று போராடியவர் என்ற பெருமைகளுக்குரிய நம் கவிஞர் தமிழேந்தி நோயில் விழுந்து மூன்றாண்டுகளாய் முடங்கிப் போனார். அந்த நிலையிலும் உணர்வால் இயங்கிக் கொண்டே இருந்தார்.

**'சிந்தனையாளன்' பொங்கல் மலர் தயாரிப்பில் இவர் பங்கு எப்போதும் நிரம்ப உண்டு. வழக்கம் போல் மலரில் எனக்கு எழுதத் தலைப்பு தந்தார்;** தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசினார்; "கட்டுரை கிடைத்தது, நன்றி" என்று தெரிவித்தார். கட்டுரையில் கலைஞரைப் பற்றி உள்ள சிறப்புகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினார். மலர் கிடைத்து விட்டதா என்று கேட்டறிந்தார். உடல்நலம் குன்றிய நிலையிலும் பணிகளைச் செம்மையாகச் செய்யும் பாங்கினை நாம் தமிழேந்தியிடம் பாடம் கற்க வேண்டும்!

அத்தகைய பண்பாட்டுப் பெருமகனாரை நாம் இழந்து தவிக்கிறோம்.

தன்னுடைய திருமணத்தை நடத்தி வைத்த உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் மறைந்த போது,

"வெள்ளைமனச் சுரதாவே போய்விட்டாயா?
வெற்றிடமாய் உன்னிடத்தை ஆக்கிவிட்டாயா?"

என இரங்கல் கவிதை தீட்டினார் தமிழேந்தி!

பாவேந்தர் மறைந்த போது, "தேனீ பறந்ததே" எனப் பாடல் புனைந்தார்.

"தீட்டிய கூர்வாள் போல் தினவெடுத்த
தோள்களாலே வீரம் தன்னை
காட்டவல்ல செம்மாப்பு களமறவன்
பாவேந்தன் படைப்புக்குண்டு

படித்தாலே நெஞ்சினிலே பரபரவென
உணர்வூறி எழுச்சி பாயும்
வெடித்தெழுந்த தீக்கிடங்காய் உள்ளத்தில்
தமிழ்நெருப்பு வேகம் கொள்ளும்

அடித்த பெரும் சாட்டையதன் ஆவேச
விச்சாகச் சொல் தெறிக்கும்
வடித்த நறுந்தமிழ்வீரம் அவன்பாட்டில்
வழி தேனாய் ஒழுகி நிற்கும்!
வழிகின்ற சுவைதரும் தேனை
வழங்கிய 'தேனீ' பறந்ததே
இப்புவியை விட்டு மறைந்ததே"

என, சோகம் ததும்பும் பாடலைத் தந்தார் தமிழேந்தி!

"செஞ்சொல்லில் பாட்டெடுத்துச் செந்தமிழன்
விடுதலைக்காய் முழங்கி எங்கள்
நெஞ்சுமுகப் பாவலனே! நிறையன்புப்
பெட்டகமே! மறைந்தாயோ நீ!
வஞ்சகர்கள் தமிழ்வீழ்த்த வரும்பகைவர்
தோலுரிக்க உனது பாட்டை
செஞ்சமத்து மறவர்கை வாளாக
வீசுவமே விரைந்தாயே நீ?"

எனப் பாவலரேறு அய்யா பெருஞ்சித்திரனார் மறைந்த போது, கண்ணீர் சிந்தும் துயரப் பாக்களைத் தம் தூவலால் தீட்டியவர் கவிஞர் தமிழேந்தி!

"எங்கள் மானத் தமிழ்மறத்தி – என்றும்
இறவா மாந்தரில் நீ ஒருத்தி
செங்கொடிப் பெண்ணே செவ்வணக்கம் – உன்பேர்
செப்பும் போதே வாய் மணக்கும்!
நோயில் படுத்த தமிழினத்தை – ஒரு
நொடிப்போ தில்நீ எழுப்பினையே!
தீயில் வெந்(து) எம் கண்திறந்தாய் – எமைச்
'சீ'யென உமிழ்ந்தா நீ இறந்தாய்?"

என, செங்கொடி தீயைத் தழுவி மாண்டபோது, கொந்தளிக்கும் கனல் கவிதையை வடித்துத் தந்தவர் நம் தமிழேந்தி!

இத்தகைய கண்ணீர்க் கவிதைகளைத் தந்திட்ட கவிஞர் தமிழேந்தி, நம் கண்களில் விழிநீர் சொரியச் செய்து, நம்மை விட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார். உடலால் நம்மை விட்டுப் பிரிந்தாலும் உணர்வாலே நம்மோடு என்றென்றும் வாழ்வார் தமிழேந்தி!

தமிழேந்தியின் கண்கள் மருத்துவமனைக்குக் கொடையளிக்கப்பட்டுவிட்டன. அதன்மூலம் நான்கு பேர் கண்ணொளி பெறுவர். அவர்கள் மூலம் தமிழேந்தி உலகைப் பார்த்துக் கொண்டே வாழ்வார். அவருடைய உடல் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குக் கொடையாக வழங்கப்பட்டுவிட்டது. மருத்துவ ஆராய்ச்சி மாணவர்கள் அவர் உடலை ஆய்வு செய்து பார்க்கும் போதெல்லாம் தமிழேந்தி வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்.

**"விடற்கரும் மூச்சை விட்டும் புகழில்**
**விளங்கிடுவர் சிலபண்பாளர்**
**உடற்கொடை விழிக்கொடை எல்லாம்ஈவர்**
**உயிர்போயும் அவர் வாழ்வாளர்!"**

**என்று கவிஞர் தமிழேந்தி இலக்கணம் தீட்டிப் பாடினாரே, தமிழேந்தி, அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாய் நம்மோடு நெடுவாழ்வு வாழ்வார், தமிழேந்தி!**

வாழ்நாள் முழுக்க எழுதியும், பேசியும் கொடையாகத் தந்த அறிவுசால் படைப்புக்களாலே தமிழேந்தி எந்நாளும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பார்! அவர் புகழ் தமிழ் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்று தெரிவித்து, அவரது பிரிவால் துயரில் மூழ்கியுள்ள அனைவருக்கும் அன்பான ஆறுதலைத் தெரிவித்து என் இரங்கல் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்! ❖


**சிந்தனையாளன் இதழுக்கு நேரடியாக வங்கிக் கணக்கு மூலம் பணம் கட்ட விரும்புவோர்**

**TAMILNADU STATE APEX CO-OPERATIVE BANK LTD.**

Triplicane Branch, Chennai - 600 005.

**A/c. No. : 232007660**

**Branch Code (TPL) (32) - IFSC Code : TNSC0000001**

பணம் அனுப்பியபின் அதற்கு உரிய தகவலை மடல் வழியாகச் சிந்தனையாளன் அலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். – ஆசிரியர்


## வேண்டுகோள்

தோழர் வே.ஆனைமுத்துவும் தோழர்களும் 1978 ஏப்பிரல் முதல் தம் பணிகளை இந்திய அளவில் கொண்டு சென்றனர். அது தொடங்கி மண்டல் குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது வரையான வே.ஆனைமுத்துவின் வடஇந்தியப் பயணங்கள் சிந்தனையாளனில் விரிவாகப் பதிவாகியுள்ளன. அதற்குப் பிந்திய காலப் பயணங்களின் பதிவுகள் முழுமையாகவும் விரிவாகவும் சிந்தனையாளனில் காணப்படவில்லை.

வே. ஆனைமுத்து வடஇந்தியப் பயணங்களின் போது அவ்வப்போது தோழர்களுக்கு அஞ்சல் அட்டை, உறைமடல் என எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவற்றில் அவர் தம் பயணத்தின் சில நிகழ்வுகளைக் குறிப்பிட்டிருப்பார். அவை கிடைப்பின் அதில் உள்ள செய்திகளைக் கொண்டு அவரின் பணிகளைத் தொகுத்து எழுத முடியும். எனவே தோழர்களிடம் அத்தகைய கடிதங்கள் இருந்தால் அவற்றை எனக்கு விடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

26.5.2019 - **கலசம்**

கைப்பேசி : 94446 07804

# தமிழேந்தியும் நானும்



**மா. முருகேசன்**

அறிவு இல்லம், தீத்தாண்டப்பட்டு

**ஒப்பற்ற தமிழறிஞர், உணர்ச்சிப் பாவலர், ஓய்வறியா உழைப்பாளி, போராளி, சமத்துவச் சாரல், தன்னேரில்லா ஆளுமை, தமிழேந்தியை (சோ.சு. யுவராசன்) 5.5.2019-இல் இழந்தோம். அவருக்கும் எனக்குமான நட்பு ஐம்பது ஆண்டுகாலமாகத் தொடர்ந்தது. அவரின் அனைத்து ஆளுமைகளுக்கும் அடித்தளமாய் அமைந்த எங்களின் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி வாழ்வு பற்றிய ஒரு சில செய்திகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.**

1967-1969-இல் போளூர் அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் எங்கள் சந்திப்பு; இருவரும் ஒரே விடுதியில் ஒரே அறையில் தங்கிப் படித்தோம்; பயிற்சி பெற்றோம். அவர் ஓர் தமிழ் ஆர்வலர். தனித்தமிழ் ஆர்வலர். ''ஓர் இறைப் பேராற்றல் உண்டு'' எனும் நம்பிக்கையாளர்.

நானோ கடவுள் மறுப்பாளன்; பெரியார் பற்றாளன். தமிழைக் ''காட்டுமிராண்டி மொழி'' எனப் பெரியார் பேசியதை இறுக்கமாகப் பற்றிக் கொண்டவன். ஒருவரை ஒருவர் எதிரிகள் போல ஓராண்டுக் காலம் நினைத்துக் கொண்டிருந்தோம். எண்ணற்ற கலந்துரையாடலுக்குப் பின் இணைந்தோம்.

தமிழ்-தமிழ்நாடு-தமிழர் நலம் பற்றிய அவரின் கருத்துகள், பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சி மிக்க கவிதைகள் பற்றி அவர் வழி அறிந்து மகிழ்ந்தேன். இன்னுயிர் நண்பராய் ஏற்றுக் கொண்டேன். அவரும், நான் வழங்கிய பெரியாரின், பகுத்தறிவாளர்களின் நூல்களைப் படித்து பெரியாரின் ஆளுமையை, தேவையை அறிந்து கொண்டு பெரியாரியலை ஏற்றுக்கொண்டார்.

அவர் எனக்கு பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), இசையமுது, தமிழியக்கம், இரணியன் அல்லது இணையற்ற வீரன் போன்ற நூல்களை வழங்கினார். நானும் அபாயச் சங்கு, இந்திப் போர் முரசு, பேய் பூதம் பிசாசு, ஏன் நான் கிருத்துவனல்ல? (ரஸ்ஸல்), பெண் ஏன் அடிமையானாள்? சமதர்மம் சமைப்போம் ஆகிய நூல்களை வழங்கினேன். (மேற்கண்ட நூல்கள் செங்கத்தில் நடந்த பெரியார் கூட்டத்தில் என் பள்ளி இறுதி வகுப்பு காலத்தில் (1965) வாங்கப் பெற்றவை).

அவரும் நானும் பயிற்சிப் பள்ளியில் இணைந்து ஆற்றிய செயல்கள் சிலவே. ஆனால் அவர் ஆற்றிய பணிகள் பல. அவற்றுள் சிலவற்றை குறிப்பிடுகிறேன்.

1. ''அருவி'' என்னும் கையேட்டு இதழைத் தொடங்கி திங்கள் தோறும் வெளியிடுவார். ஆசிரிய மாணாக்கரின் படைப்பாற்றலை வளர்த்தார். சிறந்த ஓவியங்கள், கவிதைகள், கட்டுரைகள் (அவரே தலைப்புக் கொடுப்பார்) இலக்கியப் படைப்புகள், சிறுகதைகள், துணுக்குகள், அறிவியல் செய்திகள் போன்றவை 'அருவி'யில் மிளிரும். அவரின் 'நிகழ்வும் நிழலும்' என்ற தலைப்பில் அழகிய ஓவியத்துடன் வெளியிடப்படும் இலக்கியப் படைப்பை அனைவரும் விரும்பிப் படிப்பர் (சிந்தனையாளன் கடைசிப் பக்கக் கவிதை போல்).

2. விடுதி நிருவாகப் பொறுப்பில் மூன்று மாதங்கள் தணிக்கையாளராகப் பொறுப்பேற்று சுரண்டலற்ற நாணயமான வகையில் பணியாற்றினார். அவர் நிருவாகத்தில் நான் உணவு அமைச்சராக ஒரு மாதம் பணியாற்றினேன். அந்த ஒரு மாதத்திற்கான சராசரி உணவுக் கட்டணம் ரூ.28 மட்டுமே. இது அந்த ஆசிரியப் பள்ளி வரலாற்றில் மிகக் குறைந்த கட்டணம். தரமான உணவு. அவர் இரவு பகலாக சுற்றித்திரிந்து தரமான உணவுப் பொருள்களை மலிவான விலையில் வாங்குவார். பொறுப்பாளர்களை இன்முகத்தோடும் தோழமையோடும் நடத்துவார். 400-க்கும் மேற்பட்ட அன்றைய ஆசிரிய மாணவர்கள் அவரின் ஊழலற்ற நிருவாகத் திறமையைப் பாராட்டினர்; பின்பற்ற முடிவெடுத்தனர்.

3. கலை இலக்கிய மன்றச் செயலாளராக மீண்டும் மீண்டும் அவரே தேர்ந்தெடுக்கப்படுவார். காரணம் உங்களுக்கும் புரியும். திங்கள் தோறும் இலக்கிய விழாக்கள், பட்டிமன்றம்-கவியரங்கம்-கருத்தரங்கம்-ஒட்டி வெட்டிப் பேசுதல் போன்ற பல தலைப்பு களில் நிகழ்ச்சியை நடத்துவார். அனைவரையும் பங்குகொள்ளச் செய்வார். பல்துறையில் சிறந்த ஆளுமைகளை அழைத்து பங்கேற்கச் செய்வார்.

4. திருவள்ளுவர் விழா-'பட்டிமன்றம்' ஏற்பாடு செய்தார்.

தலைப்பு : திருக்குறளுக்குச் சிறப்பு

1. சொல்லும் முறையாலா?
2. கருத்தாலா?

நடுவர் பொறுப்பிற்கு திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியின் தமிழ்த் துறைப் பேராசிரியர் சம்பந்தம் (கி. வீரமணியின் சகலர்) அவர்களை அழைக்கச் சென்றார். நானும் உடன் சென்றேன். தலைப்பைப் படித்த பேராசிரியர், ஆகா! இப்படி ஒரு அருமையான தலைப்பு என் சிந்தனைக்கே எட்டாத தலைப்பு. அவரை ஆரத் தழுவி மனதாரப் பாராட்டி, அவசியம் வருகிறேன் என்றார். நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இருவரும் இரண்டு அணிக்குத் தலைவர் பொறுப்பேற்றோம். என் அணி (கருத்தால்) வெற்றி பெற்றது. ஆனால் நடுவரின் பாராட்டு அவருக்கே குவிந்தது.

5. ‘ஆளுக்கொரு நூலகம்’ எனும் தலைப்பின் செயல் பாடாகப் பல பதிப்பகங்களிலிருந்து பலதுறை நூல்களை வரவழைத்துக் கழிவு விலையில் பலரையும் நூல்கள் வாங்கிப் படிக்கும் பழக்கத்தை ஊட்டினார்.

புத்தகக் கட்டுகளை அன்றைய சட்டமன்ற சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்களை அழைத்து அவர் கையில் கொடுத்து அனைவருக்கும் கொடுக்கச் செய்தார். அதிக நூல்கள் வாங்கியவருக்கான பரிசை எனக்கு கொடுக்கச் செய்தார்.

**இலக்கிய மன்றச் செயலாளர் யுவராசனை புலவர் பாராட்டியதை இன்றும் மறக்க முடியவில்லை.**

மாவட்டம் தோறும் நூலகம் இருந்ததை, வட்டம்தோறும் இருக்க காமராசர் பாடுபட்டார். அண்ணாவோ வீதிக்கொரு நூலகம், வீட்டுக்கொரு நூலகம் வேண்டும் என்றார். ஆனால் அதையும் விஞ்சி இலக்கிய மன்றச் செயலாளர் (தமிழேந்தி) ‘‘ஆளுக்கொரு நூலகம்’’ என்பதைச் செயல்படுத்திக் காட்டியுள் ளார். மனதாரப் பாராட்டுகிறேன் எனப் புகழ்ந்தார்.

6. பயிற்சிப் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு வருகை தந்த அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்களுக்குச் சிறப்பான முறையில் வர வேற்பு அளிக்கப்பட்டது. அவ்வேற்பாடுகளையெல்லாம் தமிழேந்தியே முன்னின்று செய்தார். வரவேற்புக் கவிதை தமிழேந்தியால் எழுதப்பட்டு சிறப்பாக வடிவமைக்கப் பட்டது. பள்ளி முதல்வர் திரு. சேதுமாதவன் (பார்ப்பனர்) அமைச்சருக்குப் படித்தளித்தார். அமைச்சர் பள்ளி முதல்வரைப் பாராட்டினார். முதல்வர் தமிழேந்தியைப் பாராட்டினார். அப்படிப்பட்ட முத்தாய்ப்பான கவிதையை அப்போதே எழுதியவர்தான் தமிழேந்தி.

அண்ணா மறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இரங்கல் நினைவேந்தல் நிகழ்வு - ஆண்டு விழாவில் அவர் எழுதி அரங்கேற்றிய கவிதை நாடகம் என இப்படிச் சிறப்பு மிக்க செயற்பாட்டாளராய் விளங்கினார். பயிற்சிப் பள்ளி முதல்வரால் நடத்தைச் சான்றிதழில் மிகப் பெரிய பாராட்டு தலைப் பெற்ற ஒரே ஆசிரியர் தமிழேந்தி மட்டுமே.

**‘விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்று ஒரு பழமொழி உண்டு. அதை மெய்ப்பித்தவர் தமிழேந்தி. ‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்றார் வள்ளுவர். தமிழேந்தி புகழொடு தோன்றினார். வானளாவ உயர்ந்தார். புகழ் வாழ்வு வாழ்ந்தார்.**

**அவரின் கட்டுக்கடங்காக் கவிதையாற்றல், களங்க மில்லா வெடிச்சிரிப்பு, ஈடில்லா உழைப்பு, சமரசமில்லாப் போராட்டம், எளிய, தூய வாழ்வு, அளவில்லா மனிதநேயம். இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.**

**தமிழேந்தி நம்மோடு இல்லையென்றாலும், தமிழகம் உள்ள மட்டும் அவர் கோட்பாடுகள் நிலைபெறும். அவர் வழி நடப்போம். அவர் எண்ணங்களைச் செயலாக்குவோம்.**

## ‘‘சிந்தனையாளன்’’ புரவலர் இரா. குப்புசாமி மறைந்தார்!



சிந்தனையாளன் ஏட்டில், இராகுலன் என்னும் புனை பெயரில் ‘‘இந்தியாவில் பொது வுடைமை இயக்கம்-ஒரு கண் ணோட்டம்’’ என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதி வந்தவர்; அதனைப் பின்னர் நூலாக வெளியிட்டவர்; கடந்த நாற்பது ஆண்டுகளாகச் சிந்தனையாளன் இதழின் வாசகராகவும் புரவல ராகவும் விளங்கியவர்; ஆனைமுத்து ஐயா அவர்களின் மீது அளப்பரிய நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவர்; உயர்ந்த பண்பாளர்; மார்க்சியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்; கரூர் பூ.அர. குப்புசாமி அவர்களின் உற்ற நண்பர்; முன்னாள் எல்.ஐ.சி. ஊழியர் - தோழர் இரா.குப்புசாமி அவர்கள் கடந்த 28.4.2019 அதிகாலை 3.50 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித் துக் கொள்கிறேன்.

ஆழ்ந்த மார்க்சிய இலெனினிய ஈடுபாட்டாளர், தோழர் பூ.அர.குப்புசாமி அவர்களின் கருத்துகளால் பெரியாரியத்தின்மீது ஈடுபாடு கொண்டவர்.

1960-இல் நடைபெற்ற நடுவண் அரசு ஊழியர் களின் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் முழுமையாகக் கலந்துகொண்டு தண்டனை பெற் றார். 1970-இல் நடைபெற்ற கரூர் கைத்தறி நெச வாளர்களின் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டு சிறைப்படுத்தப்பட்டார். அனைத்திந்திய இளைஞர் கூட்டமைப்பின் (All India Youth Federation) செயற்குழு உறுப்பினர்; அனைத்துக் காப்பீட்டுக் கழகங்களின் பணியாளர் கழகத்தில் (All India Insurance Employees Association) பொதுக்குழு உறுப்பினராகச் செயலாற்றியவர்; கரூர் தொழிற் சங்க மைய இணைச் செயலர்; தொடர்வண்டித் துறையிலும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலும் ஊழியர்; முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்களுக்கு மாபெரும் உந்தாற்றலாக விளங்கியவர்; நீதிக்கும் நலத்திற்கும் தொண்டாற்றியவர்.

**உடல்நலம்குன்றிப் படுத்தப்படுக்கையாகும் வரை, சிந்தனையாளன் இதழ்ப் புரவலர்; மார்க்சிய இயக் கங்களுக்குப் புரவலர்.**

**அன்பும் கனிவும் தெளிவும் நிறைந்த தோழர் இரா. குப்புசாமியின் மறைவு முற்போக்கு இயக் கங்களுக்கு ஒரு பேரிழப்பு.**

**- இரணியன் நா.கு. பொன்னுசாமி,** கோவை

# நிலத்தடி நீர்மட்டம் எழுப்பும் அபாய ஒலி

## மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மாவட்டங்களின் நிலத்தடி நீர்மட்டம்

'நீரின்றி அமையாது உலகு' என்றான் வான்புகழ் வள்ளுவன். இதை வெறும் ஏட்டுப்பாடமாக மட்டுமே வைத்துக் கொண்டு, நீர் வளத்தைக் காக்க மறந்துவிட்டதன் விளைவால் தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் நகரைப் போன்ற, பூஜ்ஜிய குடிநீர் நகரங்கள் பெருகி வருகின்றன.

இந்த நிலைமை தமிழகத்துக்கும் விரைவில் வந்துவிடுமோ? என்ற அச்சம் நாளுக்குள் நாள் அதிகரித்து வருகிறது. காரணம், மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. மாநிலத்தின் பிற மாவட்டங்களின் நிலைமை ஒருபுறம் மோசம் என்றால், சென்னை நகரின் நிலைமையோ இன்னும் மோசமாகி வருகிறது.

ஏனெனில். சென்னையின் நிலத்தடி நீர்மட்டம் பாறைகளின் அடிவரை சென்றுவிட்டது. நகரின் ஏரிகளின் நீர்மட்டம் பூஜ்ஜிய அடியாக இருக்கும் நிலையில், சென்னைவாசிகள் பெரும்பாலும் நிலத்தடி நீரைச் சார்ந்தே வாழ்கின்றனர்.

ஆனால் நகரின் நிலத்தடி நீர்மட்டமோ கடந்த ஜனவரி மாத நிலவரப்படி 5.4 மீட்டர் ஆழத்துக்குச் சென்று உள்ளது. கடந்த 2010-ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில் 3.4 மீட்டர் ஆழம் வரையே இருந்தது. இவ்வாறு சென்னை மட்டுமின்றி மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் அபாய அளவிலேயே இருக்கிறது.

மாநிலம் முழுவதும் சுமார் 19 இலட்சம் ஆழ்துளைக் கிணறுகள் தற்போது இருக்கும் நிலையில், இவற்றில் 30 விழுக்காடு ஆழ்துளைக் கிணறுகள் ஏற்கெனவே வறண்டு விட்டன. 27 விழுக்காடு ஆழ்துளைக் கிணறுகளில் குடிநீர் உவர்ப்புத் தன்மை கொண்டதாக இருக்கிறது. மீதமுள்ள கிணறுகளில் உள்ள நீரும் 4 முதல் 6 மணிநேரத்துக்குள் காலியாகும் நிலையிலேயே உள்ளது.

இத்தகைய ஆழ்துளைக் கிணறுகளின் வருகையால் குளத்துப் பாசன சாகுபடி நிலம் 10 இலட்சம் ஏக்கராகச் (2018-ஆம் ஆண்டு நிலவரப்படி) சுருங்கிவிட்டது. இது கடந்த 1960-ஆம் ஆண்டில் 22.50 இலட்சம் ஏக்கராகவும், 2000-ஆம் ஆண்டில் 15.75 ஏக்கராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

நிலத்தடி நீரைச் சேமிப்பதற்காகத் தமிழக அரசு ஏற்கெனவே களத்தில் இறங்கியது. அதன்படி மழைநீர் சேமிப்புத் தொடர்பாகக் கடந்த 2002-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சட்டம் ஒன்றை இயற்றியது. பின்னர் மழைநீர் சேகரிப்பைக் கட்டாயமாக்கி 2003-ஆம் ஆண்டு சூன் மாதம் அவசர சட்டம் ஒன்றையும் பிறப்பித்தது.

இதன்மூலம் அனைத்துக் கட்டடங்களிலும் அந்த ஆண்டு அக்டோபர் 11-ஆம் தேதிக்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்பை நிறுவ வேண்டியது கட்டாயம் என ஆணையிடப்பட்டது. இந்தச் சட்டத்தை உருவாக்கியதில் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் உருவெடுத்தது.

மொத்த நீர்த் தேவையில் 60 விழுக்காடு அளவுக்கு நிலத்தடி நீரை நம்பி இருக்கும் சென்னையில், பழைய மற்றும் புதிய கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் கட்டாயமாக்கப்பட்டது. இதன்மூலம் சென்னை நகரில் உள்ள கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. மொத்தம் 8.20 இலட்சம் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் சென்னையில் உள்ளன.

இதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் மேலும் குறையாமல் பாதுகாக்கப்பட்டது. அதாவது மழைநீர் சேகரிப்புத் திட்டம் தொடங்கிய காலகட்டத்தில் சென்னையில், 8 மீட்டர் ஆழத்தில் இருந்த நிலத்தடி நீர்மட்டம், இந்தத் திட்டத்தின் காரணமாக இதுவரை 8 மீட்டருக்குக் கீழே செல்லாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளதாக சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

சென்னையைப் பொறுத்தவரை மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அடையாறு, கூவம், நீலாங்கரை போன்ற மணற்பாங்கான பகுதிகளில் 100 விழுக்காட்டுச் செயல்திறனைக் கொண்டிருக்கின்றன. அதேநேரம் அண்ணாநகர் போன்ற களிமண் பகுதிகளில் 80 விழுக்காட்டுச் செயல்திறனைக் கொண்டிருக்கின்றன.

சென்னையில் கடந்த 2 ஆண்டுகளாக மழையளவு குறைந்திருக்கும் நிலையில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்திருப்பதாகக் கூறியுள்ள அதிகாரிகள், கடந்த 2010 முதல் 2019-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்துவருவது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும் அச்சம் வெளியிட்டு உள்ளனர். இது மிகப்பெரும் குடிநீர் தட்டுப்பாட்டைச் சந்திக்க இருப்பதற்கான அறிகுறி என எச்சரித்து இருக்கிறார்கள்.

சென்னை நகரக் குடிநீர் வினியோகம் குறித்துத் தமிழகப் பொதுப்பணித் துறை முன்னாள் சிறப்புத் தலைமைப் பொறியாளர் ஏ. வீரப்பன் கூறுகையில், 'கடல்நீரைக் குடிநீராக்கும்' ஆலையில் இருந்து 200 மில்லியன் லிட்டர் மற்றும் விவசாயக் கிணறுகள், குவாரிகளில் இருந்து 200 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னை நகருக்கு நாள்தோறும் வினி யோகிக்கப்படுகிறது. நகரில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் 50 அடிக்கும் கீழே குறைந்துவிட்டது. மழையளவு குறைந்துள்ள நிலையில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மூலம் நீர் மட்டத்தை மீண்டும் அதிகரிக்க முடியாது. நிலத்தடி நீர்மட்ட அளவு மிகவும் குறைந்து காணப்படுகிறது என்று தெரிவித்தார்.

இது ஒருபுறம் இருக்க, மழைநீர் சேகரிப்புத் திட்டம் சரியாக அமைக்கப்பட்டு உள்ளதா? என்ற கேள்விக்கும் எதிர்மறை பதிலே கிடைத்து வருகிறது.

இதுகுறித்து மழைநீர் சேகரிப்புச் சட்ட மசோதாவுக்கான உயர்மட்ட ஆலோசனைக்குழுவில் இடம்பெற்று இருந்தவரும், 'மழை மையம்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவன இயக்குநருமான சேகர் ராகவன் கூறுகையில், மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்து மக்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. வெறும் 40

முதல் 50 சதவீத மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் மட்டுமே சரியான முறையில் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றிலும் பெரும்பாலானவை சரியான முறையில் மேற்பார்வை யிடவோ, பராமரிக்கவோ இல்லை. அப்படியிருந்தும் கூட நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு இந்தத் திட்டம் பெரும் பங் காற்றி வருகிறது என்று கூறினார்.

சென்னையில் கடந்த 2005-ஆம் ஆண்டு பெய்த பெருமழைக்குப்பின் நிலத்தடி நீர்மட்டம் 6 மீட்டர் அளவுக்கு உயர்ந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. நகரில் உள்ள 39 கோவில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்தது. நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததால்தான் இது சாத்தியமாயிற்று.

எனவே நகரில் சரியான முறையில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அமைத்து அதை முறையாகப் பராமரித்து வந்தால் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த முடியும். சமீபத்திய காலத்தில் 2018-ஆம் ஆண்டு மட்டுமே வடகிழக்குப் பருவமழை பொய்த்தது. ஆனால் முறையான மழைநீர் சேகரிப்புத் திட்டத் தால் இத்தகைய பருவ மழை பற்றாக்குறையால் ஏற்படும் நீர்த் தேவையை சரிக்கட்ட முடியும்.

'மழை மையம்' அமைப்பினர் கடந்த மார்ச் மாதம் சென்னையின் பல இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறித்து ஆய்வு செய்தனர். இதில் அண்ணா நகர், சூளைமேடு, பார்த்தசாரதி கோவில், வடபழனி, அசோக் நகர், மயிலாப்பூர், அடையாறு புற்றுநோய் மையம் போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் வறண்டு காணப்பட்டது.

மாநிலக் கல்லூரிப் பகுதியில், நிலத்தடி நீர்மட்டம் 11.75 மீட்டராகவும், வளசரவாக்கம் மற்றும் விருகம்பாக்கம் போன்ற பகுதிகளில் 9 மீட்டராகவும் இருந்தது தெரிய வந்தது. சென்னை யில் ஏராளமான கிணறுகள் வறண்டுவிட்டன. இதனால் அவை மூடப்பட்டு ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு உள்ளன.

பூமிக்கு அடியில் பாறைகளுக்கும் கீழ் மிக ஆழத்தில் உள்ள தண்ணீரை உறிஞ்ச ஆழ்துளைக் கிணறுகள் போடப் படுகின்றன. ஆனால் மிகவும் ஆழத்தை நோக்கி நாம் செல்லச் செல்ல தண்ணீரின் தரம் குறைந்துவிடுகிறது. தண்ணீரில் இரும்பு மற்றும் உப்பின் அளவு அதிகரித்துவிடுகிறது. நாளாக நாளாக அந்தத் தண்ணீரும் வற்றி விடுகிறது.

**சென்னையில் இவ்வாறு அதிகரித்து வரும் தண்ணீர்த் தாகத்தைத் தணிப்பதற்கு மேலும் கடல்நீரைக் குடிநீராக் கும் 2 ஆலைகளை அமைக்க அரசு திட்டமிட்டு வருகிறது. இதில் ஒரு ஆலை, நாளொன்றுக்கு 450 மில்லியன் லிட்டரும், மற்றொன்று 100 மில்லியன் லிட்டரும் கடல்நீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.**

**இத்தகைய சுத்திகரிக்கும் மையங்களை, மத்திய - மாநில அரசுகளின் விதிமுறைகளின்படி அமைத்தாலும், அந்த மையங்கள் ஏற்படுத்தும் எதிர்வினைகள் அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டு உள்ளது. அதாவது இத்த கைய ஆலைகளால் கடலில் உப்புத் தன்மை அதிகரித்து கடல்வாழ் உயிரினங்களுக்கும், கடல் சூழலியலுக்கும் பெரும் ஆபத்து ஏற்படும் என ஐ.நா. ஆதரவு பெற்ற ஆய்வறிக்கை ஒன்று கூறியுள்ளது.**

## 30 சதவீத ஆழ்துளைக் கிணறுகள் வறண்டன

* மாநிலத்தில் 19 இலட்சம் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் தண்ணீர் எடுக்கப்படுகின்றது. இதில் 30 சதவீதக் கிணறு கள் வறண்டுவிட்டன.
* சென்னையில் 8.20 இலட்சம் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் உள்ளன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் 8 மீட்டருக்குக் கீழே செல்லாமல் பாதுகாக்கப்படுகிறது.
* மழைநீர் தொட்டிகள் பெரும்பாலும் 15 அடி ஆழத்தில் அமைக்கப்படுகின்றன. இதில் தொட்டிகளின் சுற்றளவுக்கு ஏற்பச் செலவாகிறது. 3 அடி சுற்றளவு கொண்ட தொட்டி ரூ.21 ஆயிரம், 4 அடி சுற்றளவு தொட்டி ரூ.32 ஆயிரம் மற்றும் 5 அடி சுற்றளவு கொண்ட தொட்டி ரூ.47 ஆயிரம் வரை செலவாகிறது.
* **மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் தொடர்ந்து பராமரித்து, பாதுகாக்க வேண்டியது அவசியம்.**

மேற்படி சுத்திகரிப்பு ஆலைகளில் பயன்படுத்தப்படும் உப்புநீக்கும் நச்சு வேதிப் பொருட்களும் (செம்பு, குளோரின் போன்ற வேதிப்பொருட்களால் மிகவும் அச்சுறுத்தல்) கடல்வாழ் உயிரினங்களுக்கு எமனாக மாறுகின்றன. மேலும் இந்த ஆலைகளில் இருந்து வெளியேறும் உப்புக் கழிவுகள் கடலில் கலப்பதால், அந்தப் பகுதிகளில் கடல் நீரில் ஆக்சிஜன் அளவு குறைந்து உயிர்கள் வாழத் தகுதியற்ற மண்டலமாக மாறிவிடுகின்றன.

**எனவே நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாப்பதால் மட்டுமே குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். இதற்கு மழைநீர் சேகரிப்பு போன்ற தற்காப்பு நடவடிக்கைகளில் போர்க்கால அடிப் படையில் ஈடுபட வேண்டும் என வல்லுநர்கள் கூறியுள்ளனர்.**

இந்த நீர் சேமிப்புக் குறித்து சேகர் ராகவன் மேலும் கூறும்போது, 'நம்மிடம் தற்போது இருக்கும் நன்னீர் ஆதாரங்களை ஒரு வங்கியாக வைத்துக் கொள்வோம். இந்த நீர் வங்கியில் டெபாசிட் எதுவும் செய்யாமல் தொடர்ந்து எடுத்துக் கொண்டே இருந்தால் ஒருநாள் நீரில்லா நிலைக்கு வந்து நிற்போம். நீருக்காக கடல்நீரை குடிநீராக்கும் திட்டத் தைச் சார்ந்து நாம் இருக்க முடியாது' என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், 'கேப் டவுன் நிலைமை, சென்னைக்குத் தற்போது நேராமல் இருக்கலாம். ஆனால் அடுத்த 5 ஆண்டுகளில் அது ஏற்படக்கூடும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு மக்கள் அனைவரும் தண்ணீரைச் சேமிக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அது சட்டக் கட்டாயத்தி னால் அல்ல. மாறாகத் தாங்களாகவே முன்வந்து நீரைச் சேமிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தண்ணீர் பிரச்சி னைகளில் இருந்து தப்ப முடியும்' என்று தெரிவித்தார்.

சென்னை நகரின் தண்ணீர்த் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பெரும் தண்ணீர் பிரச்சி னையை எதிர்கொள்ளும் முன், தற்போதே அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்குவதுதான் அரசு மற்றும் மக்களின் கடமையாகும்.

**("தினத்தந்தி" 26.4.19)**

## தமிழேந்தி மறைந்தா போனார் !

மோனைகளோ பிசகாமல் மடமை பேசி
முன்னேற்றப் பொதுவுடமைக் கொள்கை பேசி
சேனைகளை முடுக்கிவிட்ட முரட்டுச் சிங்கம்
சிந்தனையா ளனிலேநல் இறுதிப் பக்கம்
சானைபிடி கத்தியைப்போல் சரியாய் நின்று
செம்மொழியின் பாவகையில் எழுதி வந்த
ஆனைமுத்து அய்யாவின் இதயம் பெற்ற
அறிவேந்தி தமிழேந்தி மறைந்தா போனார் !

நரிக்கண்ணன் ஆட்சியிலே ஊழல் பற்றி
நறுக்கென்று தைப்பதுபோல் சூடு வைத்துச்
செறிவோடு கருத்துகளை அடுக்கி வைத்துச்
செம்மாந்து சிறுத்தைபோல் நிமிர்ந்து நின்று
வரிபோட்டு மக்களையே கசக்கி விட்ட
வடவர்தம் தோலையுந்தான் உரித்துக் காட்டி
அறியாமை அகன்றோட எழுதி வந்த
அறிவேந்தி தமிழேந்தி மறைந்தா போனார் !

ஊருகெட்டு நாடுகெட்டுப் போகா வண்ணம்
உளம்பொங்கப் புரட்சிப்பா வரிகள் தந்து
சீருகெட்டுப் போகாமல் தமிழர் எல்லாம்
சீர்திருத்தம் பெறுவதற்கும் சீறிப் பாய்ந்து
யாருங்கெட்டுப் போகாமல் எழுதி நாளும்
இனமானம் தன்மானம் நிலைப்ப தற்கே
கூறுபோட்டு விழித்தெழவே கவிதை செய்ய
கோலெடுத்த தமிழேந்தி மறைந்தா போனார் !

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டே
இடிஅமீன்போல் ஆட்சிதனை நடத்தும் அந்த
காமமிகு ஆரியத்தைத் தோலு ரிக்கக்
கவிதைவழி சாட்டையடி கொடுக்கும் தோழர்
ஆமாந்தான் போடுவதைத் தொழிலாய்க் கொண்ட
அடிமைகளைப் படமெடுத்தே எழுதும் தோழர்
தாமதந்தான் சொல்லாமல் கால னோடு
தமிழேந்தி மறைந்தாரா நம்ப வில்லை!

**கவிஞர். முத்தரசன்**

## அன்னை சுசீலா என்றும் வாழ்க!

பெரியார்க்கு நாகம்மை கிடைத்தார் போன்று
பேரறிஞர் மார்க்கசுக்கு ஜென்னி போன்று
பெரியாராம் ஆனைமுத்தின் துணை வியாக
புரட்சிமலர் சுசீலாதான் கிடைத்தி ருந்தார்
சரியான சமுதாயச் சிற்பி யாகச்
சரித்திரத்தில் புகழ்பெற்ற அய்யா வுக்கு
உரியமுறை தொண்டாற்றி உயர்ந்தி ருந்தார்
ஊர்போற்ற அவர்புகழில் வாழ்க ! வாழ்க !!

ஒவ்வொருவர் வெற்றிக்கும் பின்னால் நல்ல
உத்தமிகள் பெண்மணிகள் இருந்தார் என்ற
வெவ்வேறு வரலாறு உலகில் உண்டு
வீரமங்கை சுசீலாவும் வரலா றாகி
அவ்வாறு வாழ்ந்திருந்தார் என்ற சேதி
அய்யாதன் வாழ்க்கையிலே சிறக்கக் கண்டோம்
இவ்வாறு ஆனைமுத்து பெற்ற வாழ்க்கை
இயற்கைவரம் என்றுரைப்போம் வாழ்க! வாழ்க!!

அன்னையர்க்கே இலக்கணமாய் வாழ்ந்த தோடும்
அய்யாவின் வாழ்க்கையிலே தாயு மானார்
தன்னைஒரு போராளி என்று காட்டித்
தடம்பதித்த போதினிலும் உடனி ருந்தார்
கண்ணைப்போல் காப்பாற்றி வந்த தோடு
கடுகளவும் பிசகாமல் வாழ்ந்தி ருந்தார்
அன்னையர்தம் பகுத்தறிவை வணங்கி நிற்போம்
அவரென்றும் நம்மோடு வாழ்க! வாழ்க!!

மூடமதி ஒழிந்ததென்று நாமோ இன்று
மூச்சுவிடும் நேரத்தில் மீண்டும் இங்கே
வேடமதை ஆரியர்கள் போட்டே இன்று
விளையாண்ட வெற்றியினால் கெடுக்கும் நேரம்
கூடமதில் அம்மையார்தான் இருந்தால் போதும்
கொடுமைதனை அய்யாதான் துணிச்ச லோடு
பாடமதை மக்கள்பெற எழுது வாரே
படமான அம்மையாரை வணங்கி நிற்போம் !

**கவிஞர். முத்தரசன்**

## ஆசிரியருக்கு மடல்

பேரன்பு கொண்ட ஆசிரியப் பெருந்தகை ஆனைமுத்து ஐயா, வணக்கம்.

தங்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. சுசீலா அம்மையார் ஏப்ரல் 30ஆம் நாள் இயற்கை எய்தினார் என்பதையறிந்து மிகவும் வருத்தமுற்றேன். தங்களின் இயக்கப் பணிகளிலும், போராட்டங்களிலும் தங்களுக்கு உறுதுணை யாக அம்மையார் இருந்தார்கள். இன்று இல்லையெனும்போது அவர்களின் மறைவு தங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப் பாகும்; இயக்கத் தோழர்களுக்கும் பெரும் இழப்பாகும். ஈடு இணையற்ற துணைவியாரின் இழப்பினால் உள்ளம் வருந்தி உடல் சோர்வுற்றாலும், அந்தச் சோர்வினை வெல்லும் திறன் உங்களுக்கு உள்ளது, எதையும் தாங்கும் இதயம் படைத்த வர் என்பதால். காலம் ஏற்படுத்திய இழப்பிற்குக காலமே நல் மருந்தாகும்.

அம்மையாருக்குக் கண்ணீருடன் என் இறுதி வணக்கம்.

- **க. சோமாஸ் கந்தன்,** கோவை

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மதிப்பிற்குரிய ஐயா,

தங்களின் வாழ்க்கைத் துணை வணக்கத்திற்குரிய சுசீலா அம்மையார் அவர்கள் மறைவுற்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்தினோம். தங்களின் பொதுநலப் பணிகளுக்குப் பெருந் துணையாய் விளங்கிய அம்மா அவர்களின் மறைவு தங்களுக் கும், தங்களின் அன்பு மக்களுக்கும், உறவினர்களுக்கும், உற்ற தோழர்களுக்கும் ஈடுசெய்ய இயலாத இழப்பு. அம்மா அவர்களுக்கு வணக்கங்களையும், தங்களுக்கும், தம்பி பன்னீர் அவர்களுக்கும் குடும்பத்தார் பிறர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் மனத் துயருக்குக் காலமே மருந்தாகும்.

- **இரணியன் நா.கு. பொன்னுசாமி,** கோவை

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்புடையீர், வணக்கம்.

தங்களது துணைவியார் திருமதி, சுசீலா ஆனைமுத்து அவர்கள் காலமான செய்தியை சிந்தனையாளன் பத்திரிகை யைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்; மிகவும் மனம் வருந்தி னேன். அம்மையாரின் மறைவால் வாடும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் எனது சார்பாகவும், எனது குடும் பத்தார் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- டாக்டர் **ஜி. சம்பந்தம்,** சிதம்பரம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஐயா,

தங்கள் வாழ்க்கைத் துணை திருமதி. சுசீலா அம்மையார் உயிரிழந்த செய்தி எனக்கும் துன்பத்தைத் தருவதாக உள்ளது. தங்களைப் பார்க்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் அன்பும் அமைதியும் தவழக் காட்சி தரும் அந்தமுகத்தினை இனிமேல் காணவியலாது.

**திருவள்ளுவரின் துணைவியார் வாசுகி அம்மையார் இப்படித்தான் இருந்திருப்பார் என என் உள்மனம் சொல்கிறது.**

மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்; உடல்நலத்தைப் பேணுங்கள்; விரைவில் வந்து தங்களைச் சந்திப்பேன்.

பின்குறிப்பு : எனது மகளின் திருமணம் 8.5.2019இல் பெங்களூரில் நடைபெறவுள்ளது. அந்த வேலைகளினூடே தங்கள் குடும்பச் செய்தியை 4.5.2019 அன்றுதான் 'முகநூல்' வழியே அறிய முடிந்தது. மன்னிக்கவும்.

- **நாஞ்சில் நடராசன்,** பெங்களூர்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பெரியார் கண்ட பேரறிஞர் சிந்தனையாளன் வே.ஆனைமுத்து அவர்கட்கு,

இல்லற வாழ்வில் தங்களின் சுமைதாங்கியாய் அறுபத் தைந்தாண்டுகள் தாங்கிய தங்கள் இணையர் சுசீலா அம்மை யார் மறைந்தார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துன்பமடைந் தேன். நேரில் வர இயலா நிலையில் இம்மடலைக் கலக்கத் துடன் எழுதுகிறேன்.

தந்தை பெரியார் நாகம்மையை இழந்த போது என்ன வருத்தம் அடைந்தாரோ அதே வருத்தத்தைத் தாங்களும் அடைந்திருப்பீர்கள். அவர் எவ்வாறு அதனை ஏற்றுக்கொண்டு ஆறுதல் பெற்றாரோ அவ்வாறே தாங்களும் இயக்கப் பணி களை முன்னெடுத்து ஆறுதல் பெறவேண்டும். அவரவர் நலனும் அவரவர் கையில் என்பதும் தாங்கள் அறிந்ததே.

உடலைப் பேணி உள்ள உறுதியுடன் திட்டமிட்ட பணி களைச் செம்மையாக நிறைவு செய்து தளராத சிந்தனையுடன் செம்மையாகச் செயல்படுங்கள்.

சுசீலா அம்மையாரின் வீரவணக்கத்தில் நானும் என் குடும்பத்தினரும் பங்குகொள்கிறோம்.

வளர்க அம்மையாரின் தளராது தாங்கிய இல்லறப் பண்பு.

பண்புடையார்ப் பட்டுண்டுலகம்.

- முனைவர் **அ. ஆறுமுகம்,** அரியலூர்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்பார்ந்த ஐயா! வணக்கம்.

தங்கள் இனிய துணைவியார், அன்னையார் சுசீலாஅம்மையார் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். தாங்கள் சிந்தனையாளன் ஆசிரியர் உரையில் எழுதியதைப் படித்ததும் வருத்தம் மிகுதியாயிற்று. அவர் பட்ட துன்பங்கள் அவர்மேல் மிகுந்த மதிப்பை ஏற்படுத்தியது. அவைபற்றித் தாங்கள் எழுதியிருந்தது படிப்பார் யாவர்க்கும் கண்ணீரை வரவழைக்கும். தன்னலம் கருதாமல் தங்களுக்கு அவர் துணையிருந்திருக்கிறார். தாங்கள் சிறைக்குச் சென்ற நிலையில் அவர் குழந்தைகளை வைத்துக்கொண்டு பட்டபாடு மிகக் கொடியது. எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக இயக்கத்தொண்டில் தாங்கள் ஈடுபட்டது தங்களின் கொள்கைத் திண்மையைக் காட்டுகிறது. தங்களின் வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொன்றையும் பக்கல் குறிப்பிட்டு எழுதியது வியப்பான தங்கள் நினைவாற்றலைக் காட்டுகிறது.

அம்மையார் சுசீலா அவர்களின் புகழ் என்றும் வாழும். அந்த ஈகமங்கைக்கு என் வீரவணக்கம். வர இயலாமைக்கு வருந்துகிறேன். பொறுத்தருள்க! நாளடைவில் வருத்தத்தை மறந்து தங்கள் உடல்நலத்தைக் கவனித்துக் கொண்டு தொடர்பணியில் ஈடுபடுங்கள்.

அன்புடன் : **க. தமிழமல்லன்**

தலைவர் தனித்தமிழ் இயக்கம், புதுச்சேரி

பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு,

தங்கள் துணைவியார் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள் என்று தொல்காப்பியன் தொலைப்பேசி மூலம் தகவல் தெரியப்படுத்தினார். நான் மிகவும் வருந்தினேன். தங்கள் குடும்பத்துடன் திருச்சியில் இருக்கும் போது ஒரு தடவை நான் அங்கு வந்தேன். அப்போது அவர்களைப் பார்த்தேன். அங்கே தங்களின் துணைவியார் அவர்களின் அம்மா அங்கே இருந்தார்கள். ஒரு மாடும் கன்றுக்குட்டியும் இருந்தன. விராட்டி தட்டிக்கொண்டிருந்தார்கள். தங்களின் பிள்ளைகள் யாவரும் சிறியவர்கள். தங்களின் துணைவியார் என்னை மிகவும் அன்புடன் உபசரித்து குளிக்கச் சொல்லி அவர்களின் புடைவையை எனக்குக் கொடுத்து உணவளித்து மிகவும் அன்புடன் உபசரித்தார்கள். அப்படி என்னை உபசரித்த சகோதரி மே தினத்தன்று இயற்கை எய்தினார்கள் எனக் கேட்டதும் மிகவும் வருந்தினேன். எனக்கு உடல்நிலை சரியில்லை. இல்லை என்றால் அவர்கள் முகத்தை கடைசியாக வந்து பார்த்திருப்பேன்.

**கு. இன்பவடிவி (எ) இன்பவல்லி**
பெண்ணாடம்

## நல்லாசிரியர் புரட்சிப் பாவலன் ஐயா தமிழேந்தி அவர்களுக்குப் புகழ் வணக்கம்!

புரட்சி யாளனின் புகழைப் பாடிடப்
புறப்பட்ட புலிகளே வாழ்க வளர்க!
இரவும் பகலாய் இன்பத் தமிழுக்கு
எளிய மகனாய் உழைத்த தந்தைக்கு
வரவும் செலவாய் வாய்த்த பொழுதுக்கு
வந்த மக்கள் வாயார வாழ்த்த
நிறைந்த நெஞ்சாய்க் கண்டு மகிழ்ந்தேன்!
நீவீர் யாம்பெறா யின்பமும் பெறுகவே!

தமிழேந்தி வந்தார் என்றே வியந்தோம்!
தலைமுறையும் ஏந்தி வந்தார் பாரீர்!
உமிழாய் பகைமுகத்தில் பழந்தமிழ்ச் செழிக்க!
உறுமும் புலியாய்க் கரங்களை இணைக்க!
அமிழ்தென உண்டோம் ஐயா உம்கருத்தை
அனைவரும் எழுவோம் தமிழேந்தி உம்போல்!
குமிழிகள் நிறைந்தக் கொள்ளையர் நாட்டில்
கொள்கைகள் ஏந்தி நாம்தமிழராய் வெல்வோம்!

செந்தமிழன் சினத்தில் மலர்ந்த புரட்சி
சிதறிக் கிடக்கும் இனத்தைச் சேர்க்கும்!
பைந்தமிழ் அறத்தில் பாவேந்தன் போலேப்
பகுத்தறிவு ஊட்டி நன்மக்களாய்ச் செதுக்கும்!
நந்தமிழ் நலமுற நானிலம் பயனுற
நடைபயில் வோமே தமிழேந்தி நாமும்!
சிந்தை சிறக்க சீமானாய் இருக்கச்
செய்வோம் அறிவில் ஏழையிலா வளர்ச்சி!

**- ஐயனின் பாதையில் நாம்தமிழர் பிள்ளைகள்**

## திராவிடப் பேரவைத் தலைவர்
# நந்திவர்மன் மறைந்தார்



புதுச்சேரியில் இயங்கிவந்த ''திராவிடப்பேரவை'' நிறுவனத் தலைவர்-அறிஞர் நந்திவர்மன் அவர்கள், புதுச்சேரியில், தம் இல்லத்தில் 30.5.2019 வியாான் இரவு தம் 72ஆம் அகவையில் மறைந்தார் என்பதை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம்.

**- ஆசிரியர் குழு**

## தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் சுசீலா அம்மையாருக்கும் - கவிஞர் தமிழேந்திக்கும்
# இரங்கல் தீர்மானம்




தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் மேற்கு மண்டல கோடைகாலப் பெரியாரியல் பயிற்சி முகாம் மே 25, 26 ஆகிய இரு நாட்கள் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி கிளப் ரோட்டில் உள்ள அய்லாண்ட் அறக்கட்டளை அரங்கில் நடைபெற்றது.

பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்து மார்க்சீய, பெரியாரிய ஆய்வாளர் எஸ்.வி. ராஜதுரை அவர்கள் உரையாற்றினார்கள். முன்னதாக, நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு, பெரியார் சிந்தனைகளை வெளிக்கொண்டு வந்து சாதனை படைத்த தோழர் வே. ஆனைமுத்து அவர்களுடைய துணைவியார், அவருடைய பொதுவாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப துன்பங்கள் அனைத்தையும் சரி சமமாகப் பகிர்ந்து கொண்ட சுசீலா அம்மையார் சென்ற மாதம் இயற்கையெய்திவிட்டார். அதேபோன்று மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த முன்னணித் தோழர்களில் ஒருவரும் சாதி எதிர்ப்புப் போராளியுமான கவிஞர் தமிழேந்தியும் எதிர்பாராவிதமாக மறைந்துவிட்டார். அவர்களுக்காக ஒரு நிமிடம் இரங்கல் தெரிவிப்போம் என்று எஸ். வி. ராஜதுரை தீர்மானத்தை அறிவித்தார். அதைத் தொடர்ந்து தோழர்கள் அனைவரும் மேற்கண்டோருக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

# அரக்கோணத்தில் கவிஞர் தமிழேந்தி அவர்களின் படத்திறப்பு - நினைவேந்தல் நிகழ்ச்சி

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி தொடங்கப்பட்ட காலம் முதல் கட்சி மேற்கொண்ட எல்லா வகையான செயற்பாடுகளிலும் முழு ஈடுபாட்டுடனும் ஒப்பரிய வகையில் பாடாற்றியவரும், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் மாநிலச் செயலாளராகத் திகழ்ந்தவரும், சிந்தனையாளன் ஏட்டில் கடைசி அட்டைப் பக்கக் கவிதை மூலம் முப்பது ஆண்டுகளாக மாதந்தோறும் பல்லாயிரம் தோழர்களுக்கு எழுச்சி யூட்டி வந்தவருமான கவிஞர் தமிழேந்தி 5.5.2019 ஞாயிறு காலை 7 மணிக்கு அரக்கோணத்தில் அவரு டைய இல்லத்தில் இயற்கை எய்தினார். அவருடைய கண்கள் கொடையாக அளிக்கப்பட்டன. அவருடைய உடல் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு மருத்துவ ஆய்வுக்காகக் கொடையாக வழங்கப்பட்டது.

கவிஞர் தமிழேந்தி அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி அரக்கோணம், சுவால்பேட்டை, தருமராசா கோயில் தெருவில் உள்ள டி.கே.பி. பார்வதி அம்மாள் திருமண மண்டபத்தில் 12.5.2019 ஞாயிறு காலை 10 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற க. முகிலன் தமிழேந்தியின் படத்தைத் திறந்து வைத் தார். தமிழேந்தியின் மகன் பாவேந்தன் வரவேற்புரை ஆற்றினார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெளியீட்டுச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன், வேலூர் உதவும் உள்ளங்கள் அமைப்பின் தலைவர் இரா. சந்திரசேகரன், தீத்தாண்டப்பட்டு மா. முருகேசன், இரா. பகுத்தறிவாளன், ஓசூர் சு.இரா. தமிழரசன், ஓய்வு பெற்ற ஆசிரியர் காந்தராஜ், நாம் தமிழர் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் கார்த்தி கேயன், வழக்குரைஞர் தனசேகரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவானந்தம், மருத்துவர் சந்திரமௌலி, தமிழேந்தியின் தமக்கை மகள் மருத்துவர் தென்றல், மா.பெ.பொ.க. திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிரமணி, ஓய்வுபெற்ற ஆசிரியர் மணி, முத் தமிழ்ச்செல்வி, காஞ்சி அமுதன், மா.பெ.பொ.க. திருச்சி மாவட்டச் செயலாளர் இரா. கலியபெருமாள், தி.ச. குணசேகரன், தங்கவயல் வாணிதாசன், சேரலாதன், கணேசன், தொலைக்காட்சி நெறியாளர் ஜீவசகாப்தன், பெருஞ்சித்திரன், பாண்டியன், மருத்துவர் சா.மா. அன்புமணி, ஆசிரியர் தமிழ்ச்செல்வி, கவிஞர் இன்முகில், தலித் மக்கள் முன்னணி தோழர் திருநாவுக்கரசு, ஆசிரியர் இராதாகிருட்டிணன், யசுவந்த், பேராசிரியர் கலைநேசன், நாம் தமிழர் கட்சித் தோழர் சல்மான், பாசறை முரசு ஆசிரியர் மு. பாலன், பாடகர் கனகராஜ் ஆகிய தோழர்கள் கவிஞர் தமிழேந்தி அவர்களின் குன்றனைய கொள்கை வாழ்வின் நிகழ்வுகளையும், தோழமை சான்ற பண்பு நலன்களையும் நினைவு கூர்ந்து உரையாற்றினர்.

இறுதியாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தமிழேந்தியின் எழுச்சிமிகு கவிதைகள் குறித்தும், போராட்ட வாழ்வு குறித்தும், மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரியக் கொள் கையாளர்கள் ஒன்றிணைந்து சமூக விடுதலைக்காகப் போராட வேண்டியதன் இன்றியமையாமை குறித்தும் அரைமணி நேரம் உரையாற்றினார். தொல். திருமா வளவன் தமிழேந்தியின் இல்லத்திற்குச் சென்று அவரு டைய குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறினார்.

நினைவேந்தல் நிகழ்ச்சியில் பல்வேறு இயக்கங் களைச் சார்ந்த தோழர்கள் தமிழகத்தின் பல பகுதிகளி லிருந்தும் வந்திருந்து தமிழேந்திக்குத் தங்கள் வீர வணக்கத்தைச் செலுத்தினர்.

## அம்பத்தூரில் தமிழ்த் தேசியப் பாவலர் தமிழேந்திக்கு "நினைவேந்தல்



24.05.2019 "வெள்ளிக் காலை 10 மணி" தாய்த் தமிழ்ப் பள்ளி அம்பத்தூர். "தலைமை : தோழர் சிவ.செந்தமிழ்வாணன் (சிவ.காளிதாசன்) "தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்" படத்திறப்பு: தோழர் வாலாசா வல்லவன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி நினைவேந்தல் உரை : "தோழர் அ.சி.சின்னப்பத்தமிழர் "(தமிழ்வழிக் கல்வி இயக்கம்) "தோழர் அ.பத்மநாபன் "(தமிழர் எழுச்சிக் குரல்) "முனைவர் முத்தமிழ்ச்செல்வன் "தோழர் வச்சிரவேல் "பாவலர் தமிழ் முரசு "தோழர் திருநாவுக்கரசு தோழர் ஆவடி நாகராசன் "(தந்தை பெரியார் திராவிடர் கழகம்) "திருமிகு மறை.தி.தாயுமானவன் "தோழர் த.மணிசேகரன் "தோழர் இல.குமார் "தோழர் அழகு ஒளி "பாவலர் சீர்த்தி "பாவலர் தமிழேந்தி எண்ணம் ஏந்துவோம் "விடுதலைக்கு முனைவோம்!

# நீங்கா நினைவில் நின்றவர்கள்

**சுசீலா ஆனைமுத்து அம்மா அவர்கள்**

எங்கள் மீது அக்கறை கொண்ட சுசீலா அம்மா அவர்கள் என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் "பேரன் அரிமா எப்படி உள்ளான்? உன் மகள் எப்படி இருக்காள்?" என்று கேட்டுவிட்டு, "வீட்டை கட்டுடா, நான் தான் உன் வீட்டைத் திறந்து வைப்பேன். தை மாதம் (சனவரி 2019) வேலையைத் தொடங்கு" என்று பெற்ற தாய் போல் உரிமையாகத் திட்டி "உன் வேலையை முடித்துக் கொண்டு பொது வேலைக்குப் போடா. என்னால் நடக்க முடியவில்லை; படி ஏற முடியவில்லை; அதனால்தான் வீட்டுக்கு வரமுடியவில்லை; இங்குள்ள நாயும் பூனையும் தான் என்னிடம் நன்றியுடன் என்னையே சுற்றிக் கொண்டுள்ளன" என்று கூறுவார். அம்மாவின் சமையல் உணவை அனைவரும் பாராட்டியுள்ளனர். கோ.மு.கருப்பையா, திருச்சி கலியபெருமாள், நல்லாசிரியர் கணபதி மகள் அறிவுக்கடல் ஆகியோர் சுசீலா அம்மா என்றாலே அவர் சமைத்த உணவைப் பற்றியே புகழ் பாடுவார்கள். கடைசித் வரை எவரிடமும் எதிர்பார்ப்பு இன்றி என்ற உறுதியான எண்ணத்துடன் வாழ்ந்தவர் சுசீலா அம்மா அவர்கள். சுசீலா அம்மா போல் சுயமரியாதையுள்ள தாய் தேடினாலும் காணமுடியாது. வாழ்க சுசீலா அம்மா புகழ்!

**கவிஞர் தமிழேந்தி அவர்கள்**

பாவலர் பாவேந்தர் பரம்பரையில் கடைசியாகக் கண்ட கவிஞர் தமிழேந்தி அய்யா அவர்கள். எவரையும் அவர் வாயால் குறைகூறியதை நான் கண்டதில்லை. உதவி என்றால் வாய்ப்பு உள்ளபோதெல்லாம் உதவும் உள்ளமுடையவர். என் மகள் அருவி "அப்பா தமிழேந்தி அய்யா எனக்கு வீட்டுக்கு வந்து சொல்லிக் கொடுத்த இலக்கணப் பாடத்தில் 10 மதிப்பெண் கேள்வி அப்படியே வந்தது; முழு மதிப்பெண் கிடைத்தது" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ச்சியடைவாள். என்மீதும் அக்கறையுடன் "நீங்க மட்டும்தான் கட்சி தலைமை அலுவலகத்தில் வந்து செல்கின்றாய்; எவர் என்ன சொன்னாலும் காதில் வாங்காதே; நீங்க தொடர்ந்து உங்கள் வழியில் செயல்படு" என்பார்.

தமிழேந்தி அய்யாவுடன் சேர்ந்து, சிந்தனையாளன் முகவரியைத் திருத்துவது, மாத இறுதியில் முகவரி ஒட்டி அஞ்சல் செய்வது, மெய்ப்புகளைத் திருத்தி நேரத்துக்குக் கொடுத்துவிட்டுத் தகவல் கூறுவது போன்ற கட்சி மற்றும் இதழ்ப் பணிகளைச் செய்வதில் மிகவும் உதவியாக இருந்தார். தமிழேந்தி மெய்ப்பு பார்த்தார் என்றால் அய்யா ஆனைமுத்து அவர்களும் சரியாக இருக்கும் என்பார். ஒவ்வொரு ஆண்டும் சிந்தனையாளன் பொங்கல் மலர் என்றால் இரவு, பகல் பாராமல் மலர் உருவாக்கத்தில் அக்கறை காட்டியவர். எனக்குத் தெரிந்தவரை சிந்தனையாளன் சந்தாக்களை அதிகம் பெற்றுத் தந்தவர் தமிழேந்தியே என்று உறுதியாகக் கூறமுடியும். "முதலில் தமிழேந்தி கவிதையும், அய்யா தலையங்கமும் படித்துவிட்டுத்தான் மற்ற கட்டுரைகளைப் படிப்போம்" என்று கூறும் சிந்தனையாளன் அன்பர்களைப் பெற்றவர். உழவர் மகன் என்ற பெயரில் எழுதும் என்னுடைய கட்டுரையைப் படித்துவிட்டு பலமுறை அருமையாகத் தலைப்பிட்டு எழுதியுள்ளீர் என்று தொலைப்பேசியில் பாராட்டியது என் நினைவில் என்றும் நீங்காத நினைவுகளாகும்.

- உழவர் மகன் **ப. வடிவேலு**

# வேருக்கு வணக்கம்

- **பாவலர் வையவன்**

ஆண்களின் பாடுக் கென்றும்
அருகிருந் தூக்க மூட்டும்
பெண்களின் ஈகம் மண்ணில்
பெரிதென்பேன் பெரிதே யென்பேன்
என்னதான் வான ளக்க
எவரெவர் எண்ணி னாலும்
பின்னவள் இல்லை யென்றால்
பீடுடை வெற்றி யேது?

அன்னதோர் தலைவி யென்பேன்
அருந்தவச் சுசீலா அம்மை!
பின்னவர் இருந்து செய்த
பெரும்பணிக் கீடு இல்லை
உள்ளவன் என்றே நம்பி
மணந்திட்ட ஆனை முத்து
கொள்ளெனக் கொடுத்த தெல்லாம்
பிள்ளைகள்; துயரம்; துன்பம்!

வள்ளுவன் பெருமை சொல்ல
வாய்த்ததாம் இரண்டு ஏடு
வெள்குறள் முரசு நல்ல
குறள்மலர் மற்றும் அய்யா
கொள்கையில் முகிழ்த்த ஏடாம்
சிந்தனை யாள னுக்கு
அள்ளியே தந்த உங்கள்
அத்தனை உழைப்பும் மேன்மை!

இந்திய நாடே போற்றும்
இணையிலாத் தலைவ னுக்கு
வந்துநீ வாய்த்த செல்வம்
வழித்துணை யான வீரம்
எங்களுக் கென்றோர் கட்சி
இருக்கின்ற வரையில் இங்கே
உங்களுக் குள்ள பெருமை
ஓங்கியே சொல்வோம் அம்மா!

# ஆயுதக் கவிஞன்

எரிமலையில் வெடித்துவரும் தீயின் ஊற்று
 எரிதழலில் வடித்தெடுத்த வாளின் கீற்று
குறிதவறா இலக்கடையும் குண்டு வீச்சு
 குத்திவிட்டுக் குடலுருவும் கொக்கி ஈட்டி
நரிக்குணத்தோர் முதுகிற்கு நல்ல சாட்டை
 நற்றமிழர் வாழ்விற்கு எஃகுக் கோட்டை
வெறிகொண்டு பகைவெல்ல வருவோ ரெல்லாம்
 வெற்றிகொள்ளக் கட்டிவைத்த கத்தி மூட்டை!

ஒப்புக்குப் பாட்டெழுதும் கவிஞர் உண்டு;
 ஒருபயனும் இல்லாமல் ஓடி எங்கும்
தப்புக்குத் துணைபோகும் திரைப்ப டத்தில்
 தரங்கெட்ட பாட்டெழுதும் கவிஞர் உண்டு;
எப்பொழுதோ படித்துவைத்த இலக்கி யத்தை
 எந்நேரம் வாந்தியாக எடுப்பா ருண்டு;
எப்போதும் லட்சியத்தைப் பாடி நிற்கும்
 எரிகவிஞர் தமிழேந்தி போன்று உண்டா?

தாய்மொழியில் கல்விக்கு உரிமை வேண்டி
 தமிழ்மான மறவர்செங் குன்றந் தன்னில்
காய்மொழிக்குத் துணைபோகும் அரசைக் கேட்டு
 கண்டனஞ்செய் கூட்டத்தில் பேசும் போது
வாய்வலித்துக் கைகால்கள் வீழ்ந்த போதும்
 வளையாத தமிழ்வீரம் கொண்ட எங்கள்
தாய்நிகர்த்த பெருங்கவியே உன்தன் பாட்டு
 தடைகளுக்குச் செய்துவைத்த அதிர்ச்சி வேட்டு!

சிற்றிதழ்தான் சிந்தனையா ளன்ஆ னாலும்
 சீர்மைமிகு பேரறிஞர் ஆனை முத்து
வெற்றியுடன் நடத்திவரும் வெளிச்ச ஏட்டில்
 வீறுநடை போட்டிடுவார் எழுதும் பாட்டில்!
சற்றேனும் எதுகுறித்தும் அச்சம் இன்றி
 சரவெடியாய் எரிமலையாய்ப் பாட்டி ருக்கும்
பெற்றவுடன் ஏடதனின் கடைசிப் பக்கம்
 பெருவிருப்பாய் எல்லாரும் திருப்பிப் பார்ப்பார்!

ஆர்க்கட்டும் போர்முரசம்; ஆளா ளுக்கும்
 அவரவரும் தூக்கிடுவீர் ஆயு தத்தை;
தூர்க்கட்டும் எதிரிகளின் கோட்டை தம்மை;
 துடிப்புடனே பார்க்கின்ற விழிநெ ருப்பில்
பூக்கட்டும் பொதுவுடைமைச் சமுதா யந்தான்
 பொலியட்டும் புதுமையுடன் தமிழர் தேசம்;
தாக்கட்டும் நம்கருத்து இந்தியத்தை;
 தலைநிமிர்வோம் தமிழேந்தி வழியில் நாமும்!

- பாவலர் வையவன்

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மே-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **அரசெழிலன்** (நாளை விடியும்) | திருச்சி | 1000/- |
| **அ. வரதராசன்** | பூலாம்பாடி | 1000/- |
| **மரு.அ.பொ.ஜோதிநாதன்** | வேலூர் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மே-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**